பல்சுவை

தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

நவம்பர் 2021

அத்திப்பூ

நீரா ஜத்.ப்

நேர்காணல்

பல்சுவை

தமிழ்நெஞ்சம்®

தோற்றம் 1972 நவம்பர் 2021

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸீர் ரஹ்மான்

கவிஞர் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

கவிஞர் தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் அ. முத்துசாமி

கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

599

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,

நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats,
95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த தமிழ் நெஞ்சங்களுக்கு வணக்கம்!

தமிழ்நெஞ்சத்தின் ஐம்பதாவது ஆண்டு பூர்த்தியுடன், தீபாவளித் திருநாளையும் உவகையோடு கொண்டாடக் காத்திருப்பீர்கள். சந்தோஷமாகக் கொண்டாடுங்கள்! அதேசமயம் உங்களை விட வசதியில் குறைந்தவர்கள் வீட்டிலும் இத்திருநாளைக் கொண்டாட உதவிக்கரம் கொடுங்கள்! அது ஒரு புத்தாடையாக இருக்கலாம். ஒருவேளை உணவாக இருக்கலாம். ஒரு கைத்தொழிலுக்கான முதலீடாக இருக்கலாம். உங்கள் வசதிக்கேற்ற விதமாக எதுவாக இருப்பினும் மன சந்தோஷத்துடன் வழங்குங்கள்! அவர்களின் முகமலர்ச்சியில், ஓராயிரம் திருநாட்களைக் கொண்டாடிய உவகையும் திருப்தியுமடைவீர்கள்.

தீவினைகள் மலிந்து வரும் இன்றைய காலகட்டத்தில், அவைகளைத் தீர்க்க எம்மாலான முயற்சிகளை மேற்கொள்வோம். தனிமனித ஒழுக்கம்,ஒரு சமுதாயத்தையே நேர்வழியில் நடத்திச் செல்ல வழிகோலும்.
பொதுநலமாய் சிந்தித்துச் செயல்படுகையில், மனதின் இருள் அகன்று மகிழ்ச்சி பிறக்கும். மாண்புறு மனிதம் புனிதம் பெற்று, மனமெல்லாம் நல்லொளியால் நிரம்பும். முகிழ்க்கும் சந்தோஷப் பூக்கள் நம் வாழ்க்கையில் சுகந்தம் வீசும். தீயவைகளை அகற்றி, நல்லவைகளால் உலகை நிரப்பி எங்கும் அன்பும் அமைதியும் நிலவச் செய்து வாழ்நாளின் நினைவுகளை வசந்தமாக்குவோம்.
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்!
இம்மாதம் வாசகர் தினத்தையும் எதிர்கொள்கிறோம். வாசிப்பை நேசிப்போம்!

தமிழ்நெஞ்சம் அமீன்

(ஆசிரியர்)

தீபாவளி!

வறண்டச் சிரிப்பில் வாயில் கசப்பு
இருண்ட நிலையில் இல்லார் நெஞ்சம்
புரளும் மனத்தில் புண்கள் அதிகம்
புலம்பல் நிலைக்குப் போனது வாழ்வு

ஆயும் பண்டிகை காலம் வந்தால்
அவரவர் வீட்டில் அலம்பல் உண்டு
ஈயும் மனங்கள் இல்லாப் புவியில்
எவ்விதம் சிறக்கும் இந்த பண்டிகை?

ஆண்டுக் கொருமுறை தீபாவளி யாம்
ஆகம விதிகள் ஆட்கொளும் நாளை
வேண்டா மென்று விரும்பியும் பின்னே
வேண்டா வெறுப்பாய் கொள்ளும் நிலையே!

ஊருடன் ஒத்த உறவைப் போற்றி
ஒவ்வொரு ஆண்டும் உள்ளம் கசந்து
சீரிலை யேனும் சிறப்பெனச் சொல்லி
சிரிப்பது வழக்க மிந்த ஆண்டும்

நேரிய நாளை நிலத்தில் காண்போம்
யாரிவர் என்ற வேற்றுமை யின்றிக்
காரியக் கடமை கருத்தினில் கொண்டு
களைவோம் வலியும் காசினி மீதில்!

- பொன்மணிதாசன்

என் தீபாவளி!

வண்ண வண்ணத் தீபாவ(ளி)
வடிவாய் மின்னும் தீபாவ(ளி)
எண்ணம் இழைக்கும் தீபாவ(ளி)
ஏற்றம் நல்கும் தீபாவ(ளி)
திண்ணை விளக்கில் தீபாவ(ளி)
திகழும் அழகாம் தீபாவ(ளி)
கண்கள் மின்னத் தீபாவ(ளி)
காட்சி யாவும் தீபாவ(ளி)

பட்டுச் சொக்காய் தீபாவ(ளி)
பாரே வணங்கும் தீபாவ(ளி)
எட்டுத்திக்கும் தீபாவ(ளி)
எங்கும் மகிழ்வே தீபாவ(ளி
கட்டு வெடிகள் தீபாவ(ளி)
காகி தமாகும் தீபாவ(ளி)
தட்டில் முறுக்கு தீபாவ(ளி)
தருவோம் எங்கும் தீபாவ(ளி)

காலை எழுந்தால் தீபாவ(ளி)
காற்றே மணக்கும் தீபாவ(ளி)
மாலை வந்தால் தீபாவ(ளி)
மயங்க வைக்கும் தீபாவ(ளி)
வேலை வாங்கும் தீபாவ(ளி)
வெல்ல இனிப்பாம் தீபாவ(ளி)
மேலும் வரட்டும் தீபாவ(ளி)
மின்னல் வெளிச்சத் தீபாவ(ளி)

கனவு கண்ட தீபாவ(ளி)
கவிதை போன்ற தீபாவ(ளி)
நனவே ஆகும் தீபாவ(ளி)
நானும் மகிழ்ந்த தீபாவ(ளி)
உணவு வகைகள் தீபாவ(ளி)
உண்டு மகிழ்ந்த தீபாவ(ளி)
மனதும் ஏங்கும் தீபாவ(ளி)
மறக்க இயலாத் தீபாவ(ளி)

- தென்றல் கவி

என் தீபாவளி!



எண்ணையைத் தேய்க்க நானும்
எழுந்திடும் காலை நேரம்
தண்ணெனக் குளிரும் காலம்
தைத்திட்ட உடைகள் வாசம்
விண்ணதி ரும்பட் டாசு
விடியலின் விழாவின் கோலம்
நண்பரின் கூட்டத் தோடு
நலமிகு உறவு தோன்றும்

முறுக்குகள் சுகியம் தின்ன
முந்திடும் வரிசை நிற்கும்
கறுக்முறுக் சத்தம் கேட்கும்
கடகடக் கும்வ யிற்றுள்
நறுக்கென முந்திரி வாயில்
நறுமண நெய்யில் அல்வா
விறுவிறு வென்றே தீரும்
வீட்டினில் மிச்ச மின்றி

அடுத்தவர் எதிரில் உள்ளோர்
அனைவரின் வீட்டின் வாயில்
துடிப்புடன் பிள்ளைக் கூட்டம்
துரத்திடும் அணுவின் குண்டு
மிடுக்குடன் வெடிப்பர் எங்கும்
மின்னலாய் வெளிச்சம் காட்டத்
தடையில்லா ரயிலின் ஓட்டம்
தரையினில் பறக்கும் ராக்கெட்

வண்ணமாய் மின்னும் கீற்று
வாசலில் வாண ஊற்றாம்
எண்ணமும் விழாவில் ஏகும்
எழுதிட இயலாக் காலம்
திண்ணமாய் வாரா நாள்கள்
தீபாவ ளித்தித் திக்கப்
பண்ணென ஏட்டில் பாடிப்
பழங்கதை நினைத்தேன் வாடி

- தமிழ்நெஞ்சம் அமின்

தண்டனை

உதிரம் உறிஞ்சி
உயிரைக் குடிக்கும் படியாக
விலைவாசி அதிகரித்து
விண்ணை முட்டப் பார்க்கிறது...

சாதி என்றும் இனம் மதம் என்றும்
குலம் கோத்திரம் என்றும்
வெள்ளையன் கருப்பனென்றும்
சண்டைகள் தொடர்கின்றன...

அடுத்துக் கெடுத்தல்களும்
குழிதோண்டி அழித்தல்களும்
கோள்மூட்டிப் பிரித்தல்களும
அணுவளவும் குறையவில்லை...

எத்தனை முறைதான் இயற்கை பொறுக்கும்?
பூகம்பம் சுனாமி இடிமின்னல் புயல்
பெருவெள்ளம் வரட்சியின் தொடராக
கொரோனாவை வைத்து
கொன்றொழித்தல் நடக்கிறது!

ச.கணேசமூர்த்தி, (கவிஞர் சரவணன்)
கோவில் பெரிய போரதீவு, இலங்கை

நேசங்கள்

தைரியம்
நழுவிக்கொண்டிருக்கிறது
நிகழ்வுகளின்
பிடியில் சிக்கி!
ஆறுதல் வார்த்தைகள்
செவிமையம்
குவிய மறுக்கின்றன!
இழையும்
சுவாசக்காற்றில்
பிரிய மறுத்து
வழிகிறது
உன்பிரிய நேசங்கள்!

– சுதா செழியன்

ஆக்கங்கள் அனுப்பும் அன்பர்கள் கவனத்திற்கு...

எழுத்தாளத் தோழமைகளே... உங்களில் சிலர் ஆக்கங்களில் தங்களின் பெயரை பதிந்திட மறந்துவிடுகிறீர்கள், எழுதியவர் பெயர் இல்லாது எப்படி உங்கள் ஆக்கங்களை வெளியீடு செய்வது.? ஒவ்வொரு ஆக்கத்திற்குக் கீழும் தங்களின் பெயரைத் தமிழிலும், தொடர்புக்காக அலைபேசி எண்கள் அல்லது மினனஞ்சல் ஐடியையும் அவசியம் பதியவும்.

தவிர, ஒரே ஆக்கத்தை ஒரே நேரத்தில் இரண்டு அல்லது பல இதழ்களுக்கு அனுப்ப வேண்டாம். ஒரு இதழுக்கு ஆக்கத்தை அனுப்பிவிட்டு கொஞ்ச காலம் பொறுத்திருப்பது அவசியம். ஆக்கங்கள் கிடைக்கப் பெற்றதற்கு தனித்தனியே தகவல் தர இயலாமைக்கும் வருந்துகிறோம். அதற்கு போதிய நேரமின்மையேக் காரணமாகும்.

ஆக்கங்களை மின்னஞ்சல் முகவரிக்கே அனுப்புவது நல்லது. புலனம், முகநூல் உள்பெட்டிகளில் அனுப்புவது சில நேரங்களில் தேடுவதற்கு சிரமமாகிறது. தவறியும், விடுகிறது. எங்களுடன் கைகோர்த்துப் பயணிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நன்றி!

தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு, நிர்வாகிகள்

தீபஒளித் திருநாளே வருக

தீபஒளித் திருநாளே வருக!
தேன்தமிழர் வாழ்வுயர்த்த வருக!
பாபமெலாம் நீக்கிடவே வருக!
பண்பாட்டை மீட்டெடுக்க வருக!
கோபமிலா உள்ளமென வருக!
கொள்கையெலாம் மேம்படவே வருக!
மாபலாவா ழைச்சுவையாய் வருக!
மானுடத்தைப் போற்றியெழ வருக!

ஊரடங்கை நீக்கிடவே வருக
உலகமக்கள் மகிழ்வுறவே வருக
ஆரமுதாய் நல்லருளைத் தருக
அவனியெங்கும் நலம்பெருக்க வருக
கோரமுகக் கொரோனாவை ஒழித்துக்
குவலயத்தைக் காத்திடவே வருக
வீரமெலாம் செயல்களிலே காட்டி
வெற்றிதனை விளைத்திடவே வருக!

ஆடுகின்ற தீயவரின் எண்ணம்
அடங்கிடவே கதிரவனாய் வருக
பாடுபடும் ஏழைகளின் நிலையைப்
பாரினிலே மாற்றிடவே வருக!
காடுமலை மேகமெலாம் மகிழக்
காற்றினிலே தூய்மையென வருக
நீடுபுகழ் தருகின்ற செயல்கள்
நெஞ்சினிக்கப் பெருகிடவே வருக!

இராம வேல்முருகன்
வலங்கைமான்

ஒளிரட்டும் தீபாவளி!

ஒளியின் வரிசை உவகையன்றோ!
ஒளிரும் விளக்கின் திருநாளில்
களிப்பாய் மகிழ்வாய்க் கொண்டாட்டம்!
கண்ணைப் பறிக்கும் வண்ணங்கள்!
அளிப்போம் இனிப்பும் பட்டாசும்
அன்பைப் பகிர்ந்தே அனைவருக்கும்!
ஒளியாய் நிறையும் வாழ்க்கையென்றே
ஒன்றாய்க் கூடும் பண்டிகையாம்!

புத்தம் புதிதாய் ஆடைகளும்
பூத்துச் சிரிக்கும் மத்தாப்பும்
சுத்தும் சங்குச் சக்கரமும்
சூடாய் வெடிக்கும் சரவெடியும்
தித்திக் கின்ற பலகாரம்
தீபா வளியின் சிறப்பன்றோ!
நித்தம் வருமா இக்களிப்பு
நெஞ்சில் ஏக்கம் பலருக்கு!

இடர்கள் தொடர்ந்து வந்திடினும்
இயன்ற வரையில் உதவிடுவோம்!
கடக்கும் துன்பம் விரைவினிலே
காலம் மாறும் மீண்டிடுவோம்!
தொடரும் வாழ்வில் நம்பிக்கை
தோன்ற வைக்கும் பண்டிகைகள்!
படரும் ஒளியில் மகிழ்வுறுவோம் !
பகரும் வாழ்த்து வளம்பெருக்கும்!

முனைவர் ஓசூர் மணிமேகலை
தமிழ்நாடு

சில காலை நேரங்கள்

- முஸ்லிஹா முஸ்தபா

பேராதனை கல்வியற் கல்லூரி வளாகம்.
இலங்கை

எல்லோருக்கும் போல் தான் எனக்கும் இக்காலை நேரம் விடிகின்றது ஆனால் என்ன ஒரு சில வித்தியாசங்கள் தான்.

நான் எழும்ப அரை மணி நேரம் முன்னர் எழும்பியஎன் மனைவி குளியலறையிலிருந்து இன்னும் வெளியே வருவதாயில்லை

என் பத்து மாதக் குழந்தை வீறிட்டு அழுகின்றது அவனை சமாளிக்கக் கூட எம்மிடம் இப்போ புட்டிப் பாலில்லை அவனுடையகைவிடப்பட்டபால்போத்தலைத் தேடி அழுகிறான் போலும்.

அம்மா ஒரு புறம் இருந்து, கேஸ் அடுப்பை இருபக்கத்திற்கும் திருப்புகிறாள் அது எரியாததற்கு தனக்கு ''கண் சரியாய் விளங்குதில்லையடா'' என்று வேற கூறிக் கொள்கிறாள்.

அது எரிந்து இரு மாதத்திற்கும் மேல் என்பதைக்கூட அவள் அறியாள் "அப்பாவுக்கு

தேநீர் கொடுக்கனும்டா. சீக்கிரம் வாயேன் ராஜா'' என்று என்னை வேற உதவிக்கு அழைக்கிறாள்.

அதற்குநான்என்னபதில்சொல்வேன்? ''கொஞ்சம் இருங்கம்மா அவள் இப்போ வந்துருவாள். நீங்க இருங்கம்மா'' என்று சொல்லிட்டு மெல்ல நான் முன்வராண்டாவை நோக்கி மெல்ல நடை போடுகிறேன்.

முன்னரைப் போல் என்னுள் ஒரு உற்சாகம் தெரியவில்லை. அது எனக்கும் விளங்குகின்றது எனக்குள் இருந்த ஹோமோன்கள் எல்லாம் வற்றிவிட்டன போலும். வெளியேயாவது போக முடிய வில்லை போய்த்தான் என்ன?

அங்கு எவரும் எனக்குத் தொழில் தந்து விடப் போவதுமில்லை நான் எப்படியும் ஒரு பணமும் சம்பாதிக்கப் போவது மில்லை. அவர்களை என்னால் குறை கூறவும் முடியாது பிறகென்ன அவர் களிடம் ஏதும் இருந்தால் தானே எனக்குத் தந்துவிட முடியும்

என்னைத் தேற்ற யாருமில்லை. குற்றம் சுமத்த எவருமில்லை. நேற்று என்னைப் புரிந்து கொண்ட மனைவிக்கு இன்று சற்றுக் கடினமாய் இருக்கின்றது போல.

என் நெஞ்சம் கனக்கின்றது என் முதுகுச்சுமை விசாலிக்கின்றது இதை யெல்லாம் நான் யாரிடம் சொல்வது? இப்போது தேவைப்படுவதெல்லாம் என் சுமைகளை தற்காலிகமாய் இறக்கி வைக்க ஒரு சுமை தாங்கி மட்டுமே...

எல்லோருக்கும் போல் தான் எனக்கும் இக்காலை நேரம் விடிகின்றது. ஆனால் என்ன ஒரு சில வித்தியாசங்கள் தான்.

எங்கள் செந்தமிழ்

அகத்தியன் உரைத்தான் ஆதி தமிழ்
தொல்காப்பியன் வகுத்ததது
இலக்கணத் தமிழ்
எதிரியை ஓட ஓட விரட்டியது
கட்டபொம்மனின் வீரத் தமிழ்
பாரதி புகுத்தினான் புதுத் தமிழ்
பாரதிதாசன் நடத்தினான் எழுச்சித்தமிழ்
கண்ணதாசன் எழுதியதோ காவியத் தமிழ்

புல்லின் நுனிப் பனித்துளி குளிர்தமிழ்
புதிய பூவின் சாரம் தமிழமுது
கொட்டும் அருவி பிரவாகத்தமிழ்
ஓடும் நதி கலைத் தமிழ்
பரந்த வானம் பேரிலக்கியத் தமிழ்
மிதக்கும் மேகங்கள் சிற்றிலக்கியத் தமிழ்
கதிர்ச்சுடராய் ஒளி மிகு தமிழ்

கடலின் பேரலையோ அடங்காத் தமிழ்
பரதவன் நாவிலோ உற்சாகத் தமிழ்
நண்டு பிடித்திடும் சிண்டுகள் சிறுதமிழ்
கரம்பிணைத்து கடல் மணலிலே உலா
அது காதலர் காதல்த் தமிழ்
இது என் மண்வாசனைத் தமிழ்

மூலமொழி மாற்றமில்லா தமிழ்மொழி
என் தமிழ் ஏற்றம் தரும் தனிமொழி
தமிழில்லார் நாவிலும் சிறக்கும் தமிழ்.

மயிலிறகு மனசு
சிபானா அஸீம்
இலங்கை

தீபங்கள் ஏற்றட்டும் தேசங்கள் வாழட்டும்

கவிஞர் வீக பொன்னையா
பாலையூர் புதுக்கோட்டை, தமிழ்நாடு

வாழ்ந்தாலுஞ்
செருக்கின்றி
வளமைபெற
உழைக்கவேணும்
வீழ்ந்தாலும்
மீண்டெழுந்து
வெற்றிநடை
போடவேணும்
ஆழ்கடலின்
முத்துகளாய்
அனைவருமே
பிறக்கவேணும்
தாழ்வுதரும்
சாதியெலாம்
தரணியெங்கும்
ஒழியவேணும்

உலகெங்கும்
வன்முறையால்
ஒருவருக்கு
முறக்கமில்லை
உலவுகின்ற
காற்றினாலே
ஓருயிரும்
வளர்வதில்லை
தடியெடுத்த
சதிகாரன்
சத்தியத்தை
உடைக்கின்றான்
அடிவாங்கிச்
சாகிறவன்
அகிம்சையாலே
தவிக்கின்றான்

குடியாட்சித்
தத்துவத்தால்
குறைதீர்க்க
வழியுண்டு
குடிகெடுக்கும்
ஆட்சியர்க்குக்
கொள்ளையரென்
றபேருண்டு
சாபத்தைக்
கொடுப்பதற்குச்
சத்தியவான்
யாருமில்லை
கோபத்தை
எரியவிட்டால்
குலமழியும்
உலகமில்லை

பண்பட்ட
அறிஞர்கள்
பாதையிலே
நடக்காமல்
பண்டையோரின்
பண்பாட்டைப்
பாசத்தை
நாசமாக்கிச்
சண்டைமூட்டும்
சதிகாரன்
சமரசத்தை
விரும்பாத
அண்டைநாட்டில்
அதர்மங்கள
அடிமழையால்
அழியுதுபார்

எத்தனையோ
நாடுகளில்
இருளின்னும்
விலகவில்லை
அத்தனையும்
முடியாட்சி
அறிஞனாக
எவருமில்லை
அணைந்திடாத
ஒளிவிளக்கால்
அறியாமை
விலகிடணும்
இணைந்திருக்கு
மிதயங்கள்
இனிமையாக
வாழ்ந்திடணும்

இயற்கையினை
வெல்வதற்கு
யாருமிங்கே
பிறக்கவில்லை
இயற்கையோடு
வாழ்ந்தாலே
இறைவனென்றும்
மறைவதில்லை
பாபங்கள்
செய்யாதீர்
பாசங்கள்
மலரட்டும்
தீபங்கள்
ஏற்றட்டும்
தேசங்கள்
வாழட்டும்

நேரமில்லை

நவீன உலகில் வாழும் மக்களுக்கு மிகவும் பெரிய பிரச்சினையாக உள்ளதும் எந்த வேலையை கூறினாலும் கூறும் பதில் நேரமில்லை. ஆதிகாலத்தில் வாழ்ந்த நம் மூதாதையர்கள் நெல்லுக் குத்தி அரிசியை பெற்று உணவு சமைத்தார்கள். மசாலாபொருட்களையும் வீட்டிலே தயாரித்து உண்டு மகிழ்ந்தார்கள். ஆற்றிற்கு சென்று ஆடைகளை துவைத்து குளித்து விட்டு வந்தார்கள். இயந்திரங்கள் எதுவும் இருக்கவில்லை. தொலைபேசியும் இருக்க வில்லை. நவீன உலகில் வாழும் மனிதர்களுக்கு அத்தனை வசதிகள் இருந்தும் நேரமில்லை என்பதுதான் பிரச்சினை.

செலவழிக்கும் முறையில்தான் வித்தியாசம் இருக்கிறது.

நவீன உலகில் வாழும் மக்கள் நேரம் இல்லை என்பதற்கான காரணங்கள்.

1. திட்டமிடல் இல்லை
2. தேவையற்ற விடயங்களுக்கு அதிக நேரம் செலவழித்தல்.
3. தொலைபேசிப் பாவனை.

இம்மூன்று விடயங்களும்தான் நேரமில்லை என்பதற்கான காரணங்கள். இதற்கான தீர்வு..

1. ஒரு மனிதன் தூங்க செல்வதற்கு முன்பு அடுத்த நாளைக்கு என்ன வேலைகளை செய்து முடிக்க வேண்டும்; என்ன வேலைகளை செய்ய வேண்டும் என்று திட்டம் தீட்டிக்கொள்ளல். திட்டமிட்டு செய்கின்ற வேலைகள் சிறப்பாக நடைபெறும்.

2. ஒரு நாளைக்கு ஒரு மனிதனுடன் கதைக்கும் போது அவனது தேவைகளை மட்டும் கதைக்காமல் மற்றவர்களைப் பற்றி புறம் கதைத்தல் ; இதை தவிர்த்தல். நமக்கு எது எந்த நேரத்தில் தேவையோ அதை விட்டு விட்டு வேறு வேலையில் கவனம் செலுத்துவதை தவிர்த்தல்.

3. தொலைபேசியை நாம் எதுக்கு பயன்படுத்த வேண்டும் என்று தெரியாமல் பலர் பயன்படுத்துகின்றார்கள். தேவைக்கு மட்டும் தொலைபேசியை பயன்படுத்தல்.

இவ்வாறான விடயங்களை சிறப்பாக செய்வதன் மூலம் நேரமுகாமைத்துவத்தை பேணிக் கொள்ள முடியும் நேரமில்லை என்ற பிரச்சினையிலிருந்து நீங்க முடியும்.

காலம் யாருக்கும் காத்திருப்பதில்லை காலத்தை சிறந்த முறையில் கடைபிடித்து வாழுவதன் மூலம் சிறப்பான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியும்.

— பஹ்ரியா பாயிஸ்

பயிர் மேயும் வேலிகள்

– பெரணமல்லூர் சேகரன்

இரைச்சலானமின்விசிறிசத்தத்தில் இத்தனை நாள் தூங்கினாலும் இன்று உறக்கம் வர மறுத்தது. இரவு விளக்கின் மங்கிய ஒளியில் சுபா பேருருவமெடுத்து உற்றுநோக்குவதைப் போன்ற பிரமை.

சுபாவுக்கு மட்டுமல்ல. எத்தனையோ சிறுமிகளுக்கு இத்தகைய கொடூரங்கள் நிகழ்ந்து கொண்டுதானிருக்கின்றன. ஆனாலும் நமது வாழ்விடம் அருகே எனும்போது அதைச் சுற்றியே மனம் வட்டமடித்துக் கொண்டிருக்கிறது.

''அப்பா..உங்களை நம்பித்தாம்பா அபிநயாவ வீட்ல விட்டுட்டு ரெண்டு பேரும் வேலைக்குப் போறோம்.'' இப்படிச் சொன்ன மகளோ..



ஓவியம் : ரஜினிகாந்தன்

''என்ன கொடுமை மாமா இது.. அபார்ட்மெண்ட் வாட்ச்மேனுங்களே பயிர் மேயும் வேலியா இருந்தா நாம என்னதான் செய்வது''

இப்படிச் சொன்ன மருமகனோ மகளோ ஆஸ்பத்திரிக்குப் போய் சுபாவைப் பார்த்து வரத் தயாரில்லை எனும்போது நகரத்து வாழ்க்கை எப்படி நரகத்து வாழ்க்கையா மாறிப்போனது என்பதை எண்ணும்போது அச்சம் மேலிடுகிறது.

அதிகாலை எழுந்து நடைபயிற்சி முடித்து வரவும் பேத்தி அபிநயா எழுந்திருக்கவும் சரியாக இருந்தது. வழக்கமாய் என்னிடம் வந்து ஒட்டிக் கொண்டாள். மகளும் மருமகனும் அபிநயாவை என்னிடம் ஒப்படைத்து விட்டு மீண்டும் படுக்கையறைக்குப் போய்விட்டார்கள்.

ஞாயிற்றுக்கிழமையென்றால் இப்படித்தான். காலையில் எப்பொழுது எழுந் திருப்பார்கள் என்று சொல்ல முடியாது. மற்ற நாட்களில் எந்திரமயமாகி விடுவார்கள் இருவரும்.

கணவன் மனைவி இரண்டு பேரும் வேலைக்குப் போனால் அநேக குடும்பங்களில் வாரத்தில் ஆறு நாட்கள் எந்திரங்க ளாகவும் ஞாயிற்றுக்கிழமை மட்டும் மனிதர்களாகவும் மாறுவர். இப்போதெல்லாம் ஞாயிற்றுக் கிழமை யிலும் பாழாய்ப்போன ஆண்ட்ராய்ட் மொபை லில் வாட்ஸ்அப், பேஸ்புக், ட்விட்டர் என ஐக்கியமாகிவிடுகிறார்கள். குழந்தைகளும் அவர்களுடன் சேர்ந்து சீரழிவதுமுண்டு. சில வீடுகளில் பெற்றோர்கள் ஞாயிற்றுக்கிழமை வீட்டில் இருந்து என்ன பிரயோஜனம்..

குழந்தைகளுடன்..பெரியவர்களுடன் (இருந்தால்).. பேசி சிரித்து மகிழக் கூட முற்படுவதில்லை.

முந்தைய நாளிரவே மகளிடமும் மருமகனிடம் சொல்லி வைத்திருந்த படி ஞாயிற்றுக்கிழமை இன்று ஆஸ்பத்திரிக்குப் போய் சுபாவை ஒரு எட்டுப் பார்த்துவிட்ட வர நேரம் கனிவதற்குக் காத்திருந்தேன். மகளும் மருமகனும் வீட்டு வேலைகளை முடித்து என்னிடமிருந்து அபிநயாவைப் பெற்றுக் கொண்டால் நான் கிளம்ப வேண்டியது தான்.

ஒருவழியாய் எல்லா வேலைகளையும் முடித்து காலை பத்து மணிக்கு வீட்டிலிருந்து விடுதலையாகி மருத்துவ மனைக்குப் புறப்பட்டேன். ஐந்து கிலோ மீட்டர் தூரந்தான். ஆஸ்பத்திரி வாசப்படியிலேயே பஸ் நின்றது வசதியாக இருந்தது. அரசாங்க ஆஸ்பத்திரி என்றாலும் பிளீச்சிங் பவுடர் போட்டு எல்லா இடங்களிலும் தூய்மையைக் காண முடிந்தது ஆச்சரியம்தான். ஏற்கெனவே விசாரித்து வைத்திருந்தபடி சம்பந்தப்பட்ட வார்டில் எளிதாக சுபாவின் படுக்கையை அடைய முடிந்தது.

சுபாவின் அப்பா மருத்துவத்துறை யில் அரசு ஊழியர் என்பதால் தரமான வசதி சிகிச்சைக்கு வாய்ப்பானது. சுபாவின் அப்பா என்னைப் பார்த்ததும் எழுந்திருக்க இருவரும் ஒருசேர நெருங்கி கைகளைப் பற்றிக் கொண்டோம். சுபாவின் பாட்டி என்னை நோக்க இருவரும் தலையசைத்து முறுவலித்துக் கொண்டோம். இருவர் பார்வையும் சுபாவின் மீது.. கண்களை மூடிக் கொண்டிருந்தாள்.

''என்ன சுபா தூங்கறாளா சார்?''

தலையசைத்தபடி கலங்கிய கண் களுடன் பேச முற்பட்டார். எங்களின் பேச்சு சிறுமியின் தூக்கத்திற்குத் தொந்தர வாகிவிடக் கூடாது என்ற தொனியில் வேறிடத்திற்கு நகர்ந்தோம். சுபாவின் பாட்டி இப்போது சுபாவின் அருகே இருந்த ஒரு ஸ்டூலில் அமர்ந்து கொண்டார்.

கண்ணா!நீ வருவாயா!

அன்பென்ற அலையிலே
ஆழியாய் வந்தவனே
தத்தளிக்கும் என் மனத்தை
கரைச் சேர்ப்பது எப்போது
வரமொன்று நான் கேட்க
வரவில்லை உன்னிடமே
தாரமென்று நீ சொல்ல
கேட்க காத்திருக்கு என் மனமே
கோபியர் கொஞ்சல் எல்லாம்
சீக்கிரம் மறந்து விடு
கோமகள் காத்திருக்கேன்
பூமாலை சூட வந்துவிடு
இளமை கோலத்தில்
பார்ப்பவை எல்லாம் அழகாகும்
காலம் கடந்தபின்னே
முதுமையின் கோலம் புரியலாகும்
என்னுயிர் நாதத்தில்
உன்னன்பே அழகாகும்
எந்நாளும் என் சுவாசம்
உனக்காக உயிர்வாழும்
கேட்டு பெறுவதல்ல ஆருயிர்
அன்பு அன்பே!
கேட்காமல் பெற்றிடவே
காத்திருக்கேன்
பலகாலம் அனபே!
நீ வருவாய் என வாசலில்
பொற்பாதம் வைக்கிறேன்
உன் வருகையை எண்ணி
வாசல் வழி விழித்திருக்கின்றேன்
நீயும் வருகின்றாய் நீங்காமல்
நினைவுடனே! வாழ்ந்திடவே
நானும் வாழ இயலாமல்
தவிக்கின்றேன் நினைவுடனே!
வெண்ணெய் உண்ட
வாயிற்குள் உலகம்
வெண்மனத்திற்குள் என்னை
ஏற்க செய்கின்றாய் கலகம்
சரணாகதி அடைந்த
அன்பிற்கில்லை எல்லை
சற்று கண்ணோக்கிப் பார்த்தால்
தீரும் தொல்லை.

சரவிபி ரோசி சந்திரா

''அம்மா எப்ப வந்தாங்க..''

''நைட்டே வந்துட்டாங்க.. அவங்க அப்பாவப் பார்க்க ஊருக்குப் போன சமயத்தில் தான சுபாவுக்கு இப்படி ஆயிடுச்சு''

''வேலைக்காரி பூங்கொடி இன்னும் வேலை செய்றாளா?''

கடுகடுத்தது சுபாவின் அப்பா முகம்.

''நேத்தே அவ சீட்டக் கிழிச்சி அனுப்பிட்டேன்ல.. உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்த கழுதை..வேற ஆளத் தான் பார்க்கணும்''

சுபாவின் அப்பா வேலைக்காரியின் சீட்டைக் கிழிக்கறதுக்கு முன்னாடிதான் நேற்று என்னைப் பார்த்திருக்க வேண்டும் போல..

''ஐயா.. நீங்க நான் சொன்னா புரிஞ்சிக்குவீங்க.. சுபா மயக்கம்போட்ட நேத்து நடந்தது என்னன்னு முழுசுமா காது குடுத்துக் கேக்க சுபாவோட அம்மாவோ அப்பாவோ தயாரில்ல.. என்னோட வீட்டுக் காரர் சைக்கிளில் போவும்போது எதிர் வந்த மோட்டார் சைக்கிள் மோதி அடிபட்டார்னு போன்ல உறவுக்காரங்க பேசனப்ப எனக்குக் கையும் ஓடல.. காலும் ஓடல..

அப்பதான் ஸ்கூல் வேன்லருந்து இறங்குன சுபாவ அபார்ட்மெண்ட் வாட்ச்மேன் பிரேம்கிட்ட ஒப்படச்சி கொஞ்சம் பாத்துக்கண்ணே.. நான் சாயந்திரம் ஆறு ஏழுக்கல்லாம் வந்திடுவேன்னு சொல்லிட்டுப் போனேன். ஏழு மணிக்கு வந்து பாத்தா பிரேம் தோள் மேலே மயக்கமா கிடந்தா சுபா.. ஒன்னுமே புரியாம சுபாவோட அப்பாவுக்குப் போன் பண்ணி அரை மணி நேரத்துல அவர் வந்து ஆஸ்பத்திரியில் சேர்த்தாரு''

நேற்று பூங்கொடி சொன்னது அப்படியே என்னிடம் மீண்டும் சொல்வது போல் இருந்தது.

எங்கள் எதிரில் டாக்டர் வந்து கொண்டிருக்கவே அவருக்கு வணக்கம் செலுத்தி அறைக்குள் சென்றோம். சுபாவின் பாட்டி எழுந்து கொண்டார். டாக்டர் சுபாவின் கையை உயர்த்தி நாடி பார்த்தார். ஸ்டெதஸ்கோப் மூலம் சோதித்துக் கொண்டிருக்கும்போதே சுபா கண் விழித்துக் கொண்டாள். ஒரு நிமிடம் அமைதியாக இருந்தவள் என்பக்கம் திரும்பி என்னையே பார்த்தாள். முகமலர்ச்சியுடன் புன்னகைத்தது அனைவரையுமே மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. இப்போது மூவரும் என்னைப் பார்த்துப் புன்னகைத்தனர். மூன்று நாட்களாய் இந்தப் புன்னகை காணாமல் போய் சூன்யத்திலிருந்த துயரத் தாண்டவம். இப்போது வெளிச்சக் கீற்றில் நம்பிக்கை நங்கூரமிட்டது. இன்னொரு டாக்டரும் தற்போது இணைந்து கொண்டார்.

அடடே.. இவர் நடைபயிற்சி நண்பராயிற்றே.. இவ்வளவு நாள் இவர் டாக்டர் என்பதையும் எந்த மருத்துவ மனையில் பணிபுரிகிறார் என்பதையும்கூட விசாரிக்காமல் தினமும் புன்னகை, வணக்கம் என்பதோடு நின்றுவிட்டதைத்தவறாகவே மனம்உணர்த்தியது. இப்போதும் அதே புன்னகை.அதே வணக்கம். நெருக்கமான நிலையில் கூட மௌனம் காக்கலாமா..

''டாக்டர்.. சுபா இப்ப எப்படி இருக்கிறாள்..''

''கவலையேபடாதீங்க..நல்ல இம்ப்ரூவ்மெண்ட் இருக்கு.. கவுன்சிலிங்கில் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தாள்''

சொல்லிக் கொண்டே சுபாவின் கரங்களைப் பற்றிக் கொண்டார். சுபா மெல்ல எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

''ரவி..சுபா மாதிரி கேஸ்ல என்ன தான் நாங்க ட்ரீட்மெண்ட் கொடுத்தாலும் பேஷண்டை பழைய நிலைக்குக் கொண்டு வர்ரதில் சைக்கியாட்ரிஸ்ட் நீங்கதான எக்ஸ்பர்ட்''

இப்போதுதான் நடைபயிற்சி டாக்டர் பெயர் ரவி என்பதும் அவர் மனோதத்துவ டாக்டர் என்பதும் தெரிந்தது.

''ஜே.டி. சார் சுபாவ ஸ்பெஷலா கவனிக்கச் சொல்லி போன்ல பேசினார்.''

''ஆமா.. அவரோட ஆபீஸ் சூப்பிரண்டு மகளாச்சே..''

லேசாக முறுவலித்தபடி சுபாவின் அப்பா டாக்டர்களுக்கு நன்றி சொன்னார்.

''ஹௌ ஆர் யூ சுபா?''

''ஃபைன் டாக்டர்''

கேள்வியும் பதிலும் எனக்கும் சுபாவின் அப்பா, பாட்டிக்கும் தெம்பைத் தந்தது.

இரண்டு டாக்டர்களும் தங்கள் பின்னால் வரச்சொல்லி அழைத்தனர். நாங்கள் சுபாவை நோக்கினோம். சற்று கண்ணயர்ந்திருந்தாள் சுபா. சுபாவின் பாட்டி இப்போது எங்களைப் பார்த்து «நான் பாத்துக்கறேன். நீங்க போயிட்டு வாங்க» என்றார்.

இரண்டு நாற்காலிகள் இரண்டு டாக்டருக்கும். எதிரில் நீள பெஞ்ச் என நால்வருக்கும் அமர்ந்து பேச வசதியாகத் தானிருந்தது. மேலே மின்விசிறி பெயருக்கு ஓடிக்கொண்டிருந்தது. டாக்டர்கள் தாங்கள் அமர்ந்ததும் எங்களை அமரச் சொன்னார்கள்.

"தோ பாருங்க பிரபு.. உங்க சங்கடம் புரியுது. உங்க மனைவியின் வேண்டுகோளும் பரிசீலனைக்கு வந்தது. இப்பல்லாம் குழந்தைகள் சிறுமிகள் பெண்கள் மீதான வல்லுறவு சர் வசாதாரணமாகிவிட்டதும் அதற்குக்காரணமானவர்களைக்கடுமையான நடவடிக்கைக்கு உள்ளாக்கி தண்டனை தருவதும் இயல்பாகிவிட்டது. அதனால் புகார், போலீஸ் ஸ்டேஷன், விசாரணை எல்லாம்புதிதுமல்ல..தீண்டத்தகாததும் அல்ல. உங்க மனைவி வற்புறுத்திய மாதிரி சுபா உடல்நிலை நல்லானாப் போதும் மற்றபடி கண்ணுங்காதும் வச்சமாதிரி பிரச்சனை நமக்குள்ளேயே இருத்துட்டுப் போகட்டும்னு இருந்துட முடியாது"

சைக்யாட்ரிக் டாக்டரின்பேச்சை இப்போது இடைமறித்தான் பிரபு. இப்போது தான் சுபாவின் அப்பா பெயர் பிரபு என்பதை டாக்டரின் பேச்சு மூலம் உணர முடிந்தது. அபார்ட்மெண்ட்டில் தானுண்டு தன் வேலையுண்டென்று பலர் இருந்தா லும் பிரபு ஞாயிற்றுக்கிழமை கூட வீட்டிலும் இருப்பதில்லை. வெளியே அபார்ட்மெண்ட் மக்களோடு பேசுவது மில்லை. எனவேதான் பிரபு பெயர் மட்டும் எனக்குத் தெரியாமல் போனது.

ஆனால்சுபாவைநன்றாகவேதெரியும். மூன்றாம் வகுப்பு சி.பி.எஸ்.இ. படிக்கும் சுட்டிப்பெண் சுபா. பள்ளிக்கூடம் போக ஸ்கூல்வேனில்ஏறும்போதோஅல்லதுஸ்கூல் வேனிலிருந்து இறங்கும்போதோ பார்த்துக் கையசைப்பேன். முல்லைச்சிரிப்புடன் சுபா கையசைப்பது சுகமாக இருக்கும்.

''சார்.. கடவுள் புண்ணியத்தில் உங்க ரெண்டு பேர் ட்ரீட்மெண்ட்ல சுபா இயல்பு நிலைக்குத் திரும்பிக்கிட்டிருக்கா.. அவளைச் சீரழிச்சவன் இவன்தான்னு உறுதியா தெரியாதது ஒன்னு.. கோழியும்

வைக்கோ

1.
தூவானம்
குடிசையின் பொத்தல்களை மறைக்கும்
செடிகொடிகள்!

2.
அறுவடைக் காலம்
நடைபாதையில் குத்தும்
நெல்மணிகள்!

3.
உச்சி வெயில்
பாதையோர செடியை அசைத்ததும்
உதிரும் குருவி முட்டைகள்!

4.
கடையருகே மரக்கன்று
வெந்நீரை ஊற்றும்
தேநீர்க்கடைக்காரன்!

5.
அகல்விளக்கு
நள்ளிரவு குடிசையில் ஒலிக்கும்
பாட்டியின் ஒப்பாரி!

உமா மாதவன்

போய் குரலும் போறதப் போல குழந்தைக்கு ஏற்பட்ட பாதிப்போட கோர்ட் கேஸ் வாய்தா மீடியான்னு அந்தத் தொந்தர வெல்லாம் அரசாங்க வேலையில் இருக்கிற நமக்கு வேண்டாம்கிற மனைவி யோட வாதம் சரியாவே படுது டாக்டர்''

இப்போதுகூட இடை மறிக்க வில்லை யெனில் சரியாக இருக்காது என மனம் உந்தித் தள்ளியது.

''டாக்டர்..இந்தக் கேசில் நான் குற்றவாளியைக் கண்டுபிடிச்சிட்டேன். வேலியே பயிரை மேயும் மாதிரி அபார்ட்மெண்ட் வாட்ச்மேன் பிரேம்தான் இந்த வேலய செய்திருக்கான். வேலைக் காரி பூங்கொடி தன்னோட புருசன் விபத்துல அடிபட்டு ஆஸ்பத்திரி யில் இருக்கிறதா வந்த தகவல அடுத்து என்ன செய்யறதுன்னு தெரியாம வாட்ச்மேன் தானேன்னு நம்பிக்கையா பிரேம்கிட்ட ஒப்படச்சிட்டுப் போயிருக்கா.. அந்தக் கள வாணிப்பய கர்ச்சிப்பால சுபா மூக்கை மூடி மயக்கமாக்கியிருக்கான். கெடுக்க சில முயற்சியும் எடுத்திருக்கான். பாதியில அவனுக்கு ஏதோ இடையூறு ஏற்படவும் எதுவுமே தெரியாத மாதிரி நடிச்சி இந்தப் பூனையும் பால் குடிக்குமான்னு சுபாவுக்கு உடல்நலக் கோளாறாலதான் மயக்கமாயிட்டான்னு நம்பவச்சிட்டான்»

கதவு தட்டும் சத்தம் கேட்டு சைக்கி யாட்ரிஸ்ட் டாக்டர் கதவைத் திறக்கவும் அனைவரும் அமைதியாகி விட்டனர். எஸ்.ஐ தன்னுடைய கான்ஸ்டபிளுடன் உள்ளே நுழைந்தார். எனக்கும் பிரபுவுக்கும் புருவங்கள் உயர்ந்தன.

ஆஸ்பத்திரி வேலையாள் இரண்டு நாற்காலிகளைக் கொண்டு வந்து போடவும் அவர்கள் இருவரும் அந்த நாற்காலிகளில் அமர்ந்தனர். நாங்கள் எங்கள் நாற்காலி களில் அமரந்தோம். இப்போது என்னைப் பார்த்து சைக்கியாட்ரிஸ் டாக்டர் பேசினார்.

''பேச்சு பாதியில் நின்றுவிட்டது. சார் நீங்க சொன்ன பூங்கொடி இன்னிக்கு காலையில் போலீஸ் ஸ்டேஷன் போய் வாய் மூலமா முறையிட்டிருக்காங்க..நீங்க சொன்னதைத்தான் சொல்லியிருக்காங்க.. உடனே எனக்கு எஸ்.ஐ.சார் ஃபோன் செஞ்சாங்க..இந்தக் கேசில் பொண்ணோட அப்பா கம்ப்ளைண்ட் கொடுத்தா அவனத் தூக்கி உள்ள வச்சிடலாம்னார். அதான் நேரா இங்க வரச்சொல்லிட்டேன். மேலும் என்னோட கிளாஸ் மேட் எஸ்.ஐ. கோபி''

இப்போது சைக்கியாட்ரிஸ் டாக்டர் தவிர அனைவரும் அவருக்கு வணக்கம் சொன்னோம்.

''சார்..இப்பல்லாம் இப்படிப்பட்ட கேசுங்கள சீரியஸ் கேசுங்களா டீல் பண்ணிக்கிட்டிருக்கோம். பொண்ணப் பெத்தவங்க நெருப்ப வயித்துல கட்டிக் கிட்டிருக்கிற நெலம சார் இப்ப.. நாடு எங்க போகுதுன்னு தெரியலை.. போன மாசம் தமிழ்நாடே பேசுன விசயமானது அயனாவரம் மாற்றுத்திறனாளி பொண்ண 17 பேர் தினமும் போதை வஸ்து கொடுத்து வல்லுறவு செஞ்சி நாசப் படுத்தியது மறக்கக் கூடியதா.. இப்படிப்பட்ட அயோக்கியர்கள விடவே கூடாது.. நீங்கதான சுபாவோட அப்பா..அந்த நாயி பிரேம் மேல கம்ப்ளைண்ட் குடுங்க..முக்கிய சாட்சியா பூங்கொடியப் போட்டுக்குங்க..''

எஸ்.ஐ. முடிக்கு முன்பே நான் முந்திக் கொண்டேன்.

''சார்.. என்னையும் விட்னெஸ்ல சேத்துக்குங்க.. பிரேமும் இன்னொரு வாட்ச்மேன் ராஜாவும் தினமும் மொபைல்ல ஆபாசப்படம் பார்த்துக்கிட்டு அரட்டை அடிக்கிறதே வேலை. பிரேம் குற்றவாளிங்கறதுல எந்த சந்தேகமும் இல்ல..

பேசிக் கொண்டிருந்தபோதே எதிர் பாராத வகையில் பிரபு தாமாகவே தன் சட்டைப்பையிலிருந்த பேனாவை எடுக்க இதற்காகவே தயாராக இருந்ததைப் போல கான்ஸ்டபிள் வெள்ளைத்தாளை நீட்ட முறுவலித்தனர் டாக்டர்கள். நானும்தான். ■

வாசிப்பை நேசிப்போம்

வாசிப்பு என்பது மனிதரின் தேடல்களை அதிகரிக்கச் செய்து, அறிவை விசாலப்படுத்தும். வாசிப்பு இன்றி ஒரு மனிதன் பூரணமடைவதில்லை என்பார்கள். வாசிப்பின் மூலம் விளையும் நன்மைகளோ எண்ணிலடங்காதவை. நம் பண்பாட்டு கலாச்சார விழுமியங்களை அறிந்து கொள்ளவும், நம் கடந்தகால வரலாறுகளைத் தெரிந்து கொள்ளவும், இலக்கிய அறிவைப் பெற்றுக் கொள்ளவும் மட்டுமல்லாமல், அனைத்து விடயங்களுக்கும் வாசிப்பு இன்றியமையாததாக உள்ளது. புத்தகங்கள் என்பவை நம் வாழ்நாளையே விலைமதிக்க முடியா பொக்கிஷங்களாக மாற்றித் தரும் வரங்கள் என்றும் சொல்லலாம். நாம் வாசிப்புக்காக தேர்வு செய்யும் புத்தகங்களைப் பொறுத்தே எம் இயல்பும் அமைகிறது. அதனால் எப்போதுமே அறிவியல் சார்ந்த நூல்களைத் தேடிப் படிப்பதே சாலச் சிறந்தது.

இன்றைய காலக்கட்டத்தில், தொழில் நுட்ப சாதனங்களின் வருகையும் இணைய பாவனையும் வாசிப்பினை குறைத்து விட்டதாக பரவலான கருத்து நிலவுகிறது. இக்கருத்து ஏற்புடையதன்று. என்னைப் பொறுத்தவரை இந்த நவீன உலகில் தொழில் நுட்பங்கள் வளர்ந்த நிலையில், இணைய வாசிப்பின் மூலம் வாசகர்கள் தொகை அதிகரித்தே காணப் படுகிறது.

இயந்திர கதியில் பயணிக்கும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களும், நூல்களைத் தூக்கிச் சுமக்கப் பிரியப் படுவதில்லை. ஆனால் தம் அபிமானத்துக்குரிய வாசிப்பையும் விட்டுக் கொடுக்கத் தயாரில்லாத நிலையில் அவர்கள் வாசிப்புக்கு மாற்றுவழியைத் தேடி பயன் பெறுகிறார்கள். அதாவது, தமக்கு தேவைப்பட்ட நூல்களை வாசிக்க இணைய தளங்களுக்கு விஜயம் செய்து தேடலின் மூலம் பயன்பெறுகிறார்கள். வாசிப்பதற்கென்றே பல செயலிகள் உருவாக்கப்பட்டு, தொடுதிரையோடு விரல் நுனியில் காத்திருக்கையில் வாசிப்பின் பெறுமதி புரிந்தவர்கள் அதன் முழுபலனையும் பெற்றுக் கொள்வதில் பின்னிற்ப தில்லை. இப்போது தம் பணியில் ஈடுபட்டபடியே புத்தகங்களை ஆடியோ (audio) மூலம் கேட்டு ரசிக்கவென்றே தொழில்நுட்பம் வளர்ந்துள்ளதை யாரும் மறுக்கவியலாது. வாசிப்பின் மூலம் எமக்கு கிடைக்கும் அறிவை மற்றவர் களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் நம்மை பட்டை தீட்டிக் கொள்ளவும் முடியும். எம்மை செதுக்கிக் கொண்டு முன்னோக்கிச் சென்று இலக்குகளை அடையவும் உறுதுணையாய் இருப்பதும் வாசிப்புதான்.

எம் உணர்வோடு ஒன்றிய வாசிப்பை எம் உயிர்மூச்சாக நேசிப்போம். நம்மிடம் உள்ள நூல்களை ஆவணமாக களஞ்சியப் படுத்தி, வரும் தலைமுறைக்கும் வாசிப்பை எடுத்துச் செல்வோம். அதோடு நேரவிரயமின்றி மாற்று வழிகளிலும் வாசிப்பைத் தொடர்வோம். பயன் பெறுவோம்.

- தமிழ்நெஞ்சம் அமின்

மதிப்புரை

கவிச்சுடர்
கா.ந.கல்யாணசுந்தரம்
அவர்களின்
“மூன்றடிகளில் மலர்ந்த
புறநானூறு” -

நூல் மதிப்புரை :
கவிஞர் செல்வா ஆறுமுகம்

படிப்பதோடு மட்டுமல்லாது பள்ளிப் படிப்பு படிக்கும் நம் வீட்டு அடுத்தத் தலை முறைகளிடத்திலும் இந்நூலை கொடுத்து வாசிக்கச்சொல்லுங்கள்.

உலகின் தலைசிறந்த இலக்கியங் கள் என்றால் நீங்கள் எதைச் சொல்வீர்கள். என்னைக் கேட்டால் எட்டுத்தொகை நூல்கள் என்பேன். (பலரும் இதைத்தான் சொல்வார்கள் என நினைக்கிறன்)

இந்த எட்டுத்தொகை நூல்களில் புறநானூறு ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பெறுகிறது.

பழந்தமிழர்களின் வீரம், கொடை, மாண்பு என பலத்தையும் உள்ளடக்கியது என்பதால் இச்சிறப்பிடம் பெறுகிறது. படிக்கும்போதே நம் ரத்தம் கொஞ்சம் சூடாகிவிடும் வாய்ப்புகள் மிக அதிகம்.

சரி-

இந்த நம் புறநானூறு நூலுக்கு திருக்குறள் மாதிரி எளிய விளக்கம் யாராவது எழுதியிருக்கிறார்களா என்று நம் மண்டையைக் குடையும் மாபெரும் கேள்விக்கு இப்போது விடை கிடைத் திருக்கிறது.

நூல் : “மூன்றடிகளில் மலர்ந்த புறநானூறு”
ஆசிரியர் : கவிச்சுடர் க.ந.கல்யாண சுந்தரம்
வெளியீடு : கவி ஓவியா பதிப்பகம்.

இது இப்படியே இருக்கட்டும்

அதற்கு முன் சில விடயங்களை பார்ப்போம்.

கருத்து + கற்பனை = கவிதை.

காலங்காலமாக இதுதான் கவிதை என்பதற்கான வரைமுறை.இதில் உவமை, உருவகம், எழுத்து, யாப்பு, அணி, இலக்கணம், எதுகை, மோனை, இயைபு என ஏகப்பட்டது இருக்கிறது என்றாலும் அதனதன் உருவத்திற்கு ஏற்றவாறு எழுதுவது என்பது ஒரு மாபெரும் கலை.

கவிஞன் தான் சொல்லவரும் விடயத் திற்கு அதன் உள்ளார்ந்த பொருளுக்கு ஏற்ப அமைந்துவிடுகிற வரைமுறையை எடுத்தாண்டு எழுதும் கவிஞனுக்கு சுதந்திரம் இருக்கும். ஆகவே கவிஞன்

தம் கற்பனைகளைக் கலந்துகூட எழுதி படிப்பவர்களுக்கு பக்காவாக ஒரு கவிதைத் தொகுப்பை தந்துவிட்டுப் போய்விடலாம்.

ஆனால்-

இதையெல்லாம் தாண்டி ஒரு சிக்கலான ஒன்று இருக்கிறது.

அது-

ஏற்கனவே உள்ள இலக்கிய நூல்களுக்கு உரை எழுதுவது. அதிலும் சங்க இலக்கிய நூல்களுக்கு உரை எழுதுவதென்றால் அது மாபெரும் வேலை.

சங்க இலக்கிய நூலுக்கு அதன் பாடல்களுக்கு கவிதையிலேயே விளக்கம் என்றால் எப்படி எழுதுவது.

சங்க இலக்கியப் பாடலுக்கு கவிதையாலேயே விளக்கமா...?

எப்படி எழுதுவது...கேள்வி எழுந்தது எனக்கு.

எழுதியிருக்கிறார் ஒருவர் எனும்போது இன்னும் வியப்பு கூடியது.

எந்த நூலுக்கு இப்படி எழுதுகிறார் இவர்.

ம்... அப்படிக் கேளுங்கப்பா...

பொதுவாக சங்க இலக்கிய நூல்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

அவை-

மெல்லினம்

வல்லினம்

இடையினம்

இந்த மெல்லின நூல்கள் என்பது கொஞ்சம் படிக்கும்போதே மென்மையாக இருக்கும் - உதாரணம் : குறுந்தொகை

இடையினம் என்பது அறம், பொருள் சார்ந்தது. உதாரணம் : நன்நூல் திருக்குறள் போன்றவை.

இந்த வல்லினம் இருக்கிறதே அடேயப்பா... படிக்கும் போதே ரத்த வாடை அடிக்கும்உதாரணம்:புறநானூறு.புறநானூறு நூல் முழுவதையும் படித்துவிட்டு நிமிர்ந்தால் போதும் எவனைப் போட்டு உதைக்கலாம் என்றிருக்கும்.

வரிகளின் வாசிப்பிலேயே நரம்புகள் அத்தனையும் முறுக்கேறிவிடும். இப்படி ஒரு சிறப்புமிக்க இந்தப் புறநானூறு பாடல்களில் உள்ள சங்கடம் என்னவெனில்

ஒவ்வொரு பாடலையும் விளக்கவுரை இல்லாமல் என்னைப்போல் ஞான சூனியங்கள் படித்துத் தெரிந்து கொள்ளவே முடியாது.

ஆனால்-

புரிந்துகொண்டு படித்தால் ஆகா என்றிருக்கும். அப்படிப்பட்ட சிறப்பு

மூன்றடிகளில் மலர்ந்த புறநானூறு புத்தகத்தினை இனிய உதயம் இதழின் இணையாசிரியர் ஆரூர் தமிழ்நாடன் வெளியிட வடசென்னைத் தமிழ்ச்சங்க நிறுவுநர் எ.த.இளங்கோ அவர்கள் பெற்றுக்கொள்கிறார். அருககல் கவிஓவியா பதிப்பக உரிமையாளர் கவிஞர் மயிலாடுதுறை இளையபாரதி, எழுத்தாளர் நெல்லை சு.முத்து, கவிஞர்கள் மு.முருகேஷ், உதயகண்ணன், அன்புச்செல்வி சுப்புராஜூ, நூலாசிரியர் மற்றும் திருமதி.அருள்செல்வி கல்யாணசுந்தரம் ஆகியோர்.

மிக்க புறநானூறு நூலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 50 பாடல்களுக்கு, அப்பாடல் களில் உள்ள கருத்துக்கள் மற்றும் காட்சிகளுக்கேற்ப, அதன் உண்மை வடிவம் மாறாது ஒவ்வொரு செய்தியையும் மூன்று மூன்று வரிகளாக மிக நேர்த்தியாக வரி வடிவம் கொடுத்து சிறப்பு செய்திருக்கிறார் ஐயா. கவிச்சுடர் கா.ந. கல்யாணசுந்தரம் அவர்கள்.

இப்படி ஆராயத்தக்க நோக்கில் புறநானூறு பாடல்களை எடுத்ததற்காகவே இவரை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால்-

மூன்று வரிகளில் சுருக்க வேண்டு மாயின்

எவ்வளவு தேடல் இருக்க வேண்டும்...

எவ்வளவு புரிதல் திறன் இருக்க வேண்டும்...

எவ்வளவு சொற்களை ஆராய்ந் திருக்க வேண்டும்...

எவ்வளவு குறிப்புகள் எடுத்திருக்க வேண்டும்...

எவ்வளவு திறன் தேவைப்பட்டிருக்க வேண்டும்...

இப்படி-

அடுக்கடுக்காக அடுக்கி வைத்த அத்தனை வேண்டும் என்பதற்கும் விடை யளித்திருக்கிறது இப்புத்தகம்.

புறநானூறு செய்யுள்களை படித்துப் படித்து உலர்ந்துபோன வாய்க்கு இவர் தரும் மூன்றடிப் பாடல்களில் உலர்ந்த தெல்லாம் மலர்ந்துவிடுகிறது எனச் சொன்னால் அது மிகையில்லை.

#மூன்றடிகளில் மலர்ந்த புறநானூறு - கவனியுங்கள் - ''மலர்ந்த'' அதனால்தான் இப்படி தலைப்பை வைத்திருக்கிறாரோ என்று நினைக்கிறேன்.

புத்தகத்தின் உள்ளே நுழைந்து, சரிப்பா நம்ம ஆசிரியர் என்னதான் சொல்லியிருக்கிறார் என்று பார்த்தால்...

வியப்பு... வியப்பு... வியப்பு...

வியப்பைத் தவிர வேறொன்றும் இல்லை.

போர்க்களம். நாடும் நாடும் மோதி க்கொள்கிறது. வீட்டிற்கு ஒரு ஆண்மகன் போர்க்களம் சென்று போரிடவேண்டும் என்பது மரபு. காவலாளி வந்து ஒரு வீட்டின் கதவைத் தட்டி அந்தத் தாயிடம் கேட்கிறான்.

உன் மகன் எங்கே..?

என் மகனை ஈன்ற வயிறு மட்டுமே இங்கே உள்ளது.

புலி இருந்த குகையைப்போல.

அவன் போர்களத்தி லின்றி வேறெங்கு இருப்பான்...

அங்கு சென்று காண் என்கிறாள்

நூலாசிரியர் சொல்கிறார் இப்படி.

புலி போகிய கல் குகையே தன் வயிறென
பெருமை நவிலும் வீரத்தாய்
போர்க்களம் தோன்றும் வீர மகன்.

ஆகா இதைவிட எப்படி இக் காட்சியை எளிமையாக விளக்குவது. புறநானூறு நூலின் 74 - ஆவது பாடல் ஒன்று

குழவி இறப்பினும் ஊன் தடி பிறப்பினும்
ஆள் அன்று என்று வாலின் தப்பார்.

விளக்கவுரை இல்லாமல் ஏதாச்சும் புரியுதா நமக்கு...? இல்லைதானே... ஆசிரியர் சொல்கிறார் பாருங்க..

இறந்து பிறந்த குழந்தையோ
தசைப் பிண்டமோ புதைக்கப்படும்
வீரமிகு வாளால் கீறி.

படிக்கும்போதே நடுக்கம் காண்கிறது

கவிஞர் செல்வா ஆறுமுகம் அவர்கள் நூலினை கவியருவி ஆரூர் தமிழ்நாடன் அவர்களிடம் பெறுகிறார். அருகில் நூலாசிரியர் கா.ந.கல்யாணசுந்தரம் மற்றும் எழுத்தாளர் வீரசோழ திருமாவளவன்.

உள்ளம். எப்பேர்ப்பட்ட குடி நம் தமிழ்க்குடி.

புறநானூறு நூலின் 278 - ஆவது பாடல் ஒன்று

இதுவும் போர்க்களம் தான்.

போர் நடந்து முடிந்த நிலையில் தாய் ஒருத்தியிடம் வந்து சொல்கிறாள் ஒருத்தி. உன் மகன் போர்க்களத்தில் இறந்துவிட்டான் என்று.

இவள் ஏற்கனவே முன் நடந்த போரில் தன் கணவனைப் பறிகொடுத்தவள்.

சளைக்காமல் தன பிள்ளையையும் போர்க்களத்திற்கு அனுப்பிய வீரத் தாய். அவள் சொல்கிறாள் பாருங்கள்.

நரம்பு எழுந்து உளறி நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோன் சிறுவன்
மாண்டு அமர்க்கு உடைத்தனன் ஆயின்
உண்ட என் முலை அறுத்திடுவேன்.

என்ன ஒரு கொலை வெறி பாடல் இது. அந்தத் தாய் உரைத்ததை தன் வழிப் பாடல் வழியாக மூன்றே வரியில் ஆசிரியர் சொல்கிறார் இப்படி.

புறமுதுகிட்டு தோற்றோடியிருப்பின்
அறுத்தெறிவேன் பால்புகட்டிய அங்கத்தை
முழங்கினாள் வீரத் தாய்.

நம் வருங்காலத் தலைமுறைகள் மிக முக்கியமாக படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய மிக முக்கிமான நூல் புறநானூறு.

அதற்கு மிக பக்காவாக ஒரு பக்கத்துணை புரிந்து மிகச்சிறப்பான ஒரு நூலை மலரவிட்டிருக்கிறார் ஆசிரியர்.

தமிழ்த்தாய் அன்னையவள் எவ்வளவோ கவிஞர்களை உருவாக்குகிறாள்.

சிலரை மட்டுமே அவள் ஈன்றெடுக்கிறாள். க.ந கல்யாண சுந்தரம் அவர்கள் தமிழ்த்தாய் ஈன்றெடுத்தப் பிள்ளை என்பதை மீண்டும் ஒருமுறை இப்புத்தகத்தின் மூலம் நிரூபித்திருக்கிறார்.

இந்நூலில் அவரெழுதிய எல்லாப் பாடல்களையும் இங்கு நான் எழுதி விட்டால் அது புத்தகத்தின் அளவையும்

நூலினை கவிஞர் அமுதா தமிழ்நாடன், கவியருவி ஆரூர் தமிழ்நாடன் அவர்களுக்கு திருமதி.அருள்செல்வி கல்யாணசுந்தரம் வழங்குகிறார். அருகில் நூலாசிரியர் மற்றும் பதிப்பகத்தார்.

கடந்து போய்விடும்.

இந்நூலின் ஆசிரியர் க.ந கல்யாண சுந்தரம்அவர்கள்தன்முனைக்கவிதைகளிலும் ஹைக்கூ வகைமை கவிதைகளிலும் கை தேர்ந்தவர் என்பதால் இந்த மூன்றடிப் பாடல்களும் அவருக்கே உரிய பாணியில் மிக எளிமையாக எழுத்தாக்கம் கொடுத்து தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு நல்லதொரு படைப்பைத் தந்திருக்கிறார்கள்.

இப்புத்தகத்தில் இவர் எடுத்தாண்ட பாடல்கள் மட்டுமல்லாமல் இன்னுமுள்ள பாடல்களுக்கும் இதைப்போல மூன்றடிகளில் எழுதிவெளியிட்டால் நமக்கு மட்டுமல்லாமல் வருங்கால சந்ததிக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்ற ஒரு மாபெரும் கோரிக்கையை அவர் முன் வைக்க தமிழை நேசிக்கும் வாசகன் என்ற முறையில் நான் கடமைப்பட்டிருக்கிறேன். அப்பணிக்கு எல்லாம் வல்ல ஆண்டவன் அவருக்கு நீண்ட ஆயுளைத் தருமாறு வேண்டிக்கொள்கிறேன்.

மூன்றடிகளில் மலர்ந்த புறநானூறு - நூலை வாங்கிப் படியுங்கள். படிப்பதோடு மட்டுமல்லாது பள்ளிப் படிப்பு படிக்கும் நம் வீட்டு அடுத்தத் தலைமுறை களிடத்திலும் இந்நூலை கொடுத்து வாசிக்கச் சொல்லுங்கள்.

ஏனெனில்-

நம்மை விட இத்தேசத்திற்கு வருங்காலத் தலைமுறைகள் அதிகம் தேவை.

நூலாசிரியர் : க.ந கல்யாண சுந்தரம்
அலைபேசி :9443259288

அரிது அரிது

மானிடராய்ப் பிறப்பது
அரிதிலும் அரிது.
ஆரோக்கியம் பெற்று
வாழ்வதும் அரிது.

நஞ்சுகள் கலக்கா
உணவும் அரிது.
வஞ்சனை இல்லா
மனிதரும் அரிது.

கலப்படம் அற்ற
பொருளும் அரிது.
விலைகூட்டி விற்கா
வியாபாரி அரிது.

அடுத்தவர்க்கு உதவிடும்
அகநிலை அரிது.
கொடுத்திட நினைக்கும்
குணமும் அரிது

பொய்களைப் பேசா
பொதுமகன் அரிது.
மெய்யினை செய்தால்
மதிப்போரும் அரிது.

பணம்வந்து சேர்ந்திடப்
பாசமும் அரிது .
தினம் நன்மை செய்பவர்
தேடினும் அரிது .

பதவியில் உயர்ந்திட
பணிவும் அரிது .
உதவிகள் செய்திடும்
உள்ளமும் அரிது.

வறுமையில் உயர்ந்தோர்
இரை மீட்டுதல் அரிது .
சிறுமையைக் கண்டு
சீற்றமும் அரிது .

பேர் புகழ் விரும்பார்
பூமியில் அரிது .
பேஸ்புக்கில் போடாதார்
பெரும்பாலும் அரிது .

இயற்கையை நேசிக்கும்
இதயமும் அரிது.
அரிதுகள் அகன்றால்
இன்பமோ பெரிது .

கவிஞர். ஏரூர் கே. நௌஷாத்

தோற்றப் பிழை

ஏதாவது ஒன்றை ஒளித்துவைத்து
முகத்திரையில் பிம்பங்களை ஓடவிடாதே !
மௌனம் புதைத்த இதழ்களில்
மெல்ல மெல்ல உதிர்க்கும் வார்த்தைகளில்
சிநேகத்தின் அன்பு வெளிப்படட்டும் !
இயற்கையின் நியதிக்குள் எப்போதாவது
உன்னால் முடியுமானால்
இயல்பாய் நடந்து வா ....
மற்றவர்களின் எதிர்பார்ப்புக்கு
மாயத்தோற்றம் கொண்டு முகமூடிக்குள்
ஓடி ஒளியாதே !

நேற்று இன்று நாளை..... மாற்றங்களின்
தோற்றப் பிழையாகி வருகிறது !
எதிரெதிரே அமர்ந்தபின்னும்
உதிரிப்பூக்களாய் உலர்வதேன் ?
எண்ணங்கள் விரிவடையாத
போன்சாய் மரங்களாய் நெஞ்சக்குழிக்குள்
தவமிருக்கச் செய்து என்ன பயன் ?

அவ்வப்போது திரும்பிப்பார்த்துக் கொள் !
நடந்து வந்த பாதையெல்லாம்
நெருஞ்சி முட்கள் நிறைந்தவைதான்....
இருந்தாலும் தூரத்து வெளிச்சமாய்
வரவேற்க காத்திருக்கிறது ....
நாம் யார் என்னும் மனத்திண்ணம் !

தோற்றப் பிழை

இயற்கை ஒரு
திறந்த புத்தகம்
அதில் மனிதநேயமே
முகவுரை
புல்வெளிகளும்
மண்டிக்கிடக்கும்
மலர்களின் வாசமும்
பக்க எண்கள்
மகரந்தம் பரப்பும்
வண்ணத்துப்பூச்சிகளும்
வண்டினங்களும்
அத்தியாயங்கள்
அந்திவானமும்
மேகம் தழுவும் மலைகளும்
நதிக்கரை நாணல்களும்
நயமிக்க வார்த்தைகள்
அடர்வன மூங்கில் புதர்களும்
நெஞ்சை அள்ளும்
நீரோடைகளும்
புனைவுகளின் பிரதிகள்
கீதம் பாடும் விடியல்
பறவைகளும்
புல்லின் நுனி பனித்துளிகளும்
முடிவுரையின் எல்லைகள்
இன்னும் பல ....
இயற்கைப் புத்தகத்தின்
உதிர்ந்த இறகுகளாய்
வானத்தை அளந்தபடி
தென்றலில் கரைந்தன

– கா.ந.கல்யாணசுந்தரம்



நம்பிக்கைத் துரோகம்

நம்பினார் கெடுவதில்லை
நான்கு மறைதீர்ப்பு - இங்கு
நம்பினார் வாழவிடுவதில்லை
அவன் எதிர்பார்ப்பு
நாவினிக்கப் பேசியே
நயவஞ்சகம் செய்திடுவார்
நம்பவைத்து கழுத்தறுப்பது
நந்திகளின் செயலதுவாம்...

நாவினிலே தேன் வைத்து
நயமாய் பேசுவான்
நானிலம் எங்கிலும்
நல்லவனாய் பெயர் வீசுவான்
நல்கிடும் போதிலும்
நசுக்கியே ஏசுவான்
நம்பிக்கை கொண்டார்
துரோகத்தை காட்டிடுவான்...

புனிதத்தின் புகலிடமாம்
மனிதம் என்பார் - இங்கு
மனிதத்தில் புனிதம்
செத்துக்கொண்டிருக்கிறது
உயிர் கொடுப்பான்
துயர்துடைப்பான்
நண்பன் என்பான்
உயிர் உள்ளவரை
உற்ற நண்பன் என்று
நம்பிவிடாதே...

வாழ்வை வளமாக மாற்றிடுக
ஈனச் செயல்களிலிருந்து
இயன்றவரை காத்திடுக
இல்லங்கள் தோறும்
இன்பக் களிப்பைக் கொட்டிடுக...
சான்றோர் செப்பிய
சொற்படி சீர்தூக்கிடுவோம்

சொல்லிலும் செயலிலும்
கயமையை வென்றிடுவோம்
நம்பவே நடந்திடு நம்பி நடவாதே
என வாழ்ந்திடுவோம்
நம்பிக்கை துரோகத்தை
தூர வைத்திடுவோம்...

- றிப்கா அன்ஸார்
சாய்ந்தமருது. இலங்கை

பதில் கொடுக்கும்

உள்ளத்தில் உதித்ததெல்லாம்
வாய் வழிச் சொல்லாய்
மலர்ந்திடுவதால் மனித
மாண்புகள் மறைந்தது

எண்ணியனவெல்லாம்
இலங்கியதன் காரணமே
பொல்லாத பொய்களெல்லாம்
உண்மையெனத் துலங்கியது

இருளிதயக் கறைகளால்
இல்லாமற் போன நேசங்கள்
மறைந்து போன மனிதத்தால்
மரித்தினியற்றுப் போனது

ஒற்றுமைக் கயிற்றைப்
பற்றிப் பிடித்த கூட்டத்தை
வேறாக்கிய பகைமைகள்
வேர்ப்பிடித்த மரங்களாக்கியது

உயிரான குடும்பமதில்
உண்டான வேற்றுமையால்
ஒன்றுபட்ட உறவென்பது
ஒருநாளும் இல்லாது போனது

காலத்தின் சூழ்ச்சிகளால்
கலியுகத்தின் அடையாளங்கள்
காலமே காட்டும் காட்சிகளென
கண்ணெதிரே நடைபெறுகிறது

உள்ளத்தில் உயர்வாக மெச்சியே
உண்மையுடன் தினம் வாழ்த்திய
உறவுகளின்று வஞ்சகத்தினால்
உதறித் தனிமையில் தள்ளுகிறது

கற்றதன் படியொழுகி - நற்
கருமங்கள் புரிந்தால்
கையூட்டானென்று அகிலமே
கை நீட்டிச் சொல்கிறது

பாரினிலே நடக்கும் இத்தனை
பாவக்கொடுஞ் செயலுக்கும்
நிச்சயமொரு நாள் மனிதகுலமே
நீதியாளனிடம் பதில் கொடுக்கும்

"ஏரூர்க்கவி" எச்.எம்.எம்.றசீம்.

Dr. ∴பஜிலா ஆசாத்

(International Life Coach – Mentor – Facilitator)

மனசே ஆற மாட்டேங்குது

‘மனசே ஆற மாட்டேங்குது...’ இப்படி பெருமூச்சோடு தன் பிரச்னையைப் பற்றி சிலாகிக்காதவர்களே இல்லை எனலாம்.

என் நண்பனுக்கு நான் என்னென்னவோ உதவி செய்தேன்.. அதுவும் அவனுக்கு மிக வேண்டிய நேரத்தில் ஓடிப் போய் செய்தேன். ‘காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது’ என்கிறார் வள்ளுவர். ஆனால் அவன் கொஞ்சம் கூட நன்றியில்லாமல் என்னைப் பற்றி ஏதேதோ பேசிக் கொண்டு திரிகிறான். இவன் உறவே எனக்கு வேண்டாம் என துடிப் பார்கள் சிலர்.

நான் இரவும் பகலுமாக தூக்கி வளர்த்த என் தம்பி, இறக்கை முளைத்தவுடன் பறந்தவன் தான் இன்று என்றா வது அவன் குரலை அலை பேசியில் கேட்கிறேன். இப்படி ஒரு தொலை தூர உறவு எனக்கு தேவையா என மருகுவார்கள் சிலர்.

உங்களுடைய துடிப்பு நியாயமான தாக இருக்கலாம், உங்கள் வருத்தம் ஏற்புடையதாக இருக்கலாம், ஓடி ஓடி செய்த உறவுகளின் புறக்கணிப்பின் வலி ஏற்க முடியாததாக இருக்கலாம். ஆனால் எந்த பிரச்னையாக இருந்தாலும், இப்படி மனதில் வைத்து வருந்தி கொண்டிருந்தால் அது ஆறவே செய்யாதது மட்டுமல்ல, ஆறாத இரணமாகவே மனதில் தங்கி விடும்.

உங்களைப் பொறுத்தவரை ஏதோ ஆற்றாமையில் மீண்டும் மீண்டும் நீங்கள் நினைத்துப் பார்த்துக் கொண்டி ருக்கிறீர்கள். இதில் என்ன தவறு இருக்கிறது என்று தோன்றும். ஆனால்.. இது நீங்கள் நினைப்பது போல் யாரோ செய்ததை உங்களுக்குள் நீங்களே ஏதோ நினைத்துப் பார்த்துக் கொண்டி ருக்கிறீர்கள் என்னும் போகிற போக்கில் நடக்கும் சிறு விஷயம் இல்லை. இது உங்கள் சக்தியை எல்லாம் உறைய செய்து உங்களை சரியான முறையில் செயலாற்ற விடாமல் தடுக்கும் பெரும் தடங்கல். அதனால் தான் அந்த நிகழ்வுகளை, நீங்கள் எண்ணும் போதெல்லாம் மன பாரமாக சோர்வாக உணர்கிறீர்கள். சுழன்று வரும் இந்த நினைவுகள் உங்கள் உடலையும் பலவீனமாக்கி விடும். உறவு களையும் பலவீனமாக்கி விடும். மனம் மகிழ்ச்சியற்று தவிக்கும்.

இந்த மாதிரி வருத்தமான எண்ணங்

களுக்கு ஆழ்மனம் என்ன பெயர் சொல்கிறது தெரியுமா 'Energy Clot'. அதாவது உங்களையுமறியாமல் இந்த எண்ணங்கள் உங்கள் சக்திகளை எல்லாம் சரியான முறையில் செயலாற்ற விடாமல் உடலின் பல பகுதிகளில் ஆங்காங்கே உறைய வைத்து உடல் இயக்கத்தையே சீரில்லாமல் செய்து விடுகிறது. தவிர, மூளை விடுக்கும் கட்டளைகளை உடம்பெங்கும் கொண்டு செல்லும் நிவ்ரான்கள் இந்த எனர்ஜி கிலாட்டினால் (சக்தி உறைநிலை) ஒன்றுடன் ஒன்று சரியான முறையில் சிக்னல்களை பரிமாறிக் கொள்ள முடியாமல் முரண்பட்டு, நோய் எதிப்பு சக்தி குறைந்து, உடம்பில் பல பிரச்னைகளை ஏற்படுத்தி விடுகிறது.

ஆக, குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை இது நம் முன்னோர் சொன்னது மட்டுமல்ல. சுற்றம் பேணுபவனே ஆரோக்யமாக, சந்தோஷமாக இருக்கிறான் என்கிறது மருத்துவமும், வாழ்வியல் ஆய்வுகளும்.

அமெரிக்காவில் ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில் ஒரு புதுமையான வரலாற்று சிறப்பு மிக்க ஆய்வு ஒன்று செய்தார்கள். பல நூறு பேர்களிடம் அவர்கள் இள வயதிலிருந்து வயோதிகம் வரை எது அவர்களைஆரோக்கியமாகவைத்திருக்கிறது, மகிழ்ச்சியைத் தரக் கூடியதாக இருக்கிறது, வாழ்க்கையில் ஒரு நிறைவைக் கொடுத்தது என்று நீண்ட ஆய்வு செய்தார்கள். 75 வருடமாக தொடர்ந்து 'லைவ்' வாக நடந்த அந்த ஆய்வின் முடிவு மூன்று முக்கியமான உண்மைகளை சொன்னது.

சமூகத்தோடும், உறவுகளுடனும் தன் குடும்பத்தோடும் நெருக்கமான உறவோடு இருப்பவனே, உண்மையில் மகிழ்ச்சியோடு இருக்கிறான். உங்கள் குடும்பத்திற்குள் சின்ன சின்ன சண்டை சச்சரவுகள் இருக்கலாம்.. ஆனால், பரஸ்பர புரிதலும் அன்பும் அக்கறையும் உங்களுக்கு இருந்தால் அது உங்களை ஆரோக்கியமாக இருக்க செய்யும். உங்கள் வாழ்நாள் அதிகரிக்கும். 50 வயதில் உறவுகளோடு அன்போடு இருப்பவர்கள் 80 வயதிலும் தளராமல் வாழ்வார்கள். தவிர, நல்ல குடும்பம் பல்கலைக் கழகம் என்பதாக குடும்பத்தோடும் சமூகத்தோடும் ஒன்றி இருப்பவனின் மூளை மிக சுறுசுறுப்பாக இருக்கும் என்கிறது அந்த ஆய்வு.

இப்படி உறவுகளே மகிழ்ச்சியின் திறவுகோல் என்பது தெரிந்திருந்தாலும், தனி மரம் தோப்பாகாது, உறவுகளை ஒதுக்கி தனிமையில் இருக்கும் ஒருவனை வேண்டாத எண்ணங்கள் ஆக்கிரமிக்கும், ஏதோ ஒன்றை இழந்தது போல் அவன் மனம் தவிக்கும் என அறிந்திருந்தாலும், உறவுகளைப் போற்ற முடியாமல் பலரும் தவிப்பதற்கு முதன்மையான காரணம், இந்த அவசர உலகத்தில் உங்கள் மீது ஏற்றப் பட்ட உண்மையான பாரங்களை விட்டும், உறவுகளை பாரமாகக் கருதி இறக்கி வைத்து விட்டு ஏதோ ஒரு வெற்று மாயையில், எதையோ வெற்றி எனத் தேடி நீங்கள் ஓடிக் கொண்டே இருக்கிறீர்கள். முதலில் நீங்கள் அந்த வெற்றிடத்தை நிரப்புங்கள். வெற்றி தானே கிடைக்கும் என விரிகிறது அந்த ஆய்வு.

பல வருடங்களுக்கு முன்பு, பாலை வனங்களில் தார் சாலைகள் போடப் படாத கால கட்டங்களில்... ஒட்டகம் மட்டுமே புதையும் பாலை மணலில் வாகனமாக பயன்படுத்தப் பட்டபோது, ஒட்டகத்தை மணலில் உட்காரச் செய்து அந்த பயணி தன் பயணத்தில் கொண்டு செல்ல வேண்டிய பொருட்களை எல்லாம் அதன் நீண்ட முதுகில் மூட்டை மூட்டையாக ஏற்றுகிறார். ஒட்டகமும் அசையாமல் உட்கார்ந்திருக்கிறது. அவர் இப்போது ஒட்டகத்தை ஓட்டி செலவதற்காக எழுந்திருக்க சொல்கிறார். அது எழுந்திருக்க மறுக்கிறது!. என்ன ஆயிற்று இந்த ஒட்டகத்திற்கு.., அவர் குழம்பியவாறு அதை சுற்றி இருக்கும் கயிற்றை இழுத்து மீண்டும் மீண்டும் அதை எழ வைக்க முயற்சிக்கிறார். அது எழ மறுக்கிறது. அவர் அதை தன்

கைகளால் தள்ளி எழச் சொல்கிறார். அது ஏதோ சமிஞ்சை காட்டுவது போல், சரமாரியாக மூட்டைகள் ஏற்றப் பட்ட தன் முதுகை வலதும் இடமுமாக அசைத்து விட்டு அந்த இடத்தை விட்டும் எழுந்திருக்காமல் வெறுமனே முரண்டு பிடிக்கிறது. அந்த பயணிக்கு ஒட்டகம் என்ன சொல்ல வருகிறது, அது ஏன் இப்படி தன்னுடன் ஒத்துழைக்காமல் முரண்டு பிடிக்கிறது என்பது பிடிபடுகிறது. இப்போது அவர் ஒன்றுமே இல்லாத சில காலி மூட்டைகளை ஒட்டகத்தின் மேல் ஏற்றுகிறார்.

ஒட்டகம் இன்னும் அதிகமாக முரண்டு பிடித்து எழாமல் அமர்ந்திருக்க, அவர் தனக்குள் சிரித்தவாறு ஒட்டகத்தின் கண்ணில் படுவதற்கேற்ப அந்த காலி மூட்டைகளை அதன் முதுகில் இருந்து ஒன்றன் பின் ஒன்றாக தள்ளி விடுகிறார். ஒட்டகம் ஏதோ சாதித்த பெருமையில், எந்த பாரமும் குறையாமலே ஏதோ பாரம் இறங்கி விட்டது போல் தன் உடலை சிலிர்த்து எழுந்து பயணிக்கத் தொடங்குகிறது.

பெரும்பாலான உறவுகளில் இந்த வீம்பும் பிடிவாதமும் தானே முன்னின்று, ஏதோ ஒன்றிற்கு முரண்டு பிடித்துக் கொண்டு எந்த உறவையும் முறிக்கிறது. அவன் என்னை அவமானப் படுத்தி விட்டான்... அவன் சாரி சொல்லாமல் அவனோடு ஒரு போதும் பேச மாட்டேன் என உங்கள் நட்பையும் உறவையும் தள்ளி வைக்கச் செய்கிறது. உண்மையில் பாரமே இல்லாத ஒன்றை இறக்கி வைத்து விட்டு பெரும் பாரம் குறைந்தது போல் வீறு நடை போட வைக்கிறது.

எந்த ஒன்றிற்கும் உண்மையான பிரச்னையை புரிந்து கொண்டு அதை சீர் செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைப்பதை விட, உங்கள் ஈகோ திருப்தி அடைய வேண்டும் எனும் எண்ணம் தானே பல நேரங்களில் உங்களிடம் மேலோங்கி நிற்கிறது.

உறவுகள் மகிழ்ச்சியெனும் ஹைட் ரஜன் வாயுவால் நிரப்பப்பட்ட பலூன் போன்றவர்கள், சிறு சிறு குறைகளை பெரிது படுத்தாமல், அவர்களை நெருக்கமாக வைத்துக் கொள்வதும், எங்கோ பறக்க விடுவதும், உங்கள் கைகளில் தான் இருக்கிறது. அதுவே உங்கள் மகிழ்ச்சியின் அளவை தீர்மானிக்கிறது.

பாக்ஸ் மெஸ்ஸேஜ்

ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல், எந்த ஒரு சொல் செயலுக்கும் வெவ்வேறு கோணங்கள் இருக்கும். நீங்கள் பார்க்கும் கோணம் வேறு மற்றவர் பார்க்கும் கோணம் வேறு என்ற புரிதல் இருந்தால் எந்த உறவிலும் விரிசல் வராது.

உதாரணமாக parallax என் சொல்லப்படும் இந்த கோணமாற்று பயிற்சியை நீங்களே செய்து பாருங்கள் .

நீங்கள் அமைதியாக ஒரு சேரில் உட்கார்ந்து கொண்டு உங்களுடைய இடது கையால் இடது கண்ணை மூடிக் கொள்ளுங்கள். இப்போது வலது கை பெருவிரலை தம்ஸ்அப் என்பதாக நீட்டி உங்கள் வலது கண்முன் வைத்து அந்த பெருவிரலுக்கு நேர் முன்னே இருக்கும் பகுதியை மனதில் குறித்துக் கொள்ளுங்கள். இப்போது, உங்கள் தம்ஸ் அப் வலது கையை சற்றும் அசைக்காமல் அதே இடத்தில் வைத்துக் கொண்டு வலது கண்ணை மூடி இடது கண்ணால் அதைப் பாருங்கள். நீங்கள் எதுவும் மாற்றாமலே உங்கள் தம்ஸ் அப் வலது கை சற்றே வேறு பக்கம் நகர்ந்து இருப்பது போல் மாயத் தோற்றம் தரும். இப்படி உங்கள் வலது கண்ணும் இடது கண்ணுமே ஒன்றுக்கு ஒன்று வேறுபட்ட கோணத்தில் ஒரே பொருளை பார்ப்பதை நீங்கள் புரிந்து கொண்டால், மற்றவர்களின் கோணத்தை புரிந்து உங்களால் பிறருடன் பிரச்னை இல்லாமல் செயல் படமுடியும். உறவுகள் மகிழ்ச்சியாய் மலரும்.

இருப்பதோ ஒரு முகம்
பார்ப்பதோ வேறு முகம்...!

விஜி கல்யாணி

கோவை

கணவன் நடராசுக்கு 54 வயதும் வசந்தாவுக்கு 48வயசுமாச்சு..ஒரே குறை பிரபல டைலருக்கு ..

இளவயது திருமணம் முடிந்து 6 வருடம் கழித்தே வசுமதி பிறந்தாள்..

பிறந்ததுமே கொழு கொழுவென அழகு.. சந்தோசத்துக்கு அளவே இல்லை..

ஆனா நாளாக மகள் மீது கவலையே கவலை.. எதுக்கெடுத்தாலும் பிடிவாதந்தான் அவளுக்கு..

தொடக்கக்கல்வி படிக்கும் போதே படிப்புல சுமார்தான்.. கேட்டது மட்டும் உடனே கெடைச்சுரனும்..

வசுமதி 9ம் வகுப்பில் பெரிய பெண்ணா ஆனதும் மணமகள் போல அலங்கரித்து மஞ்சள் நீராட்டு வைக்கனும் என்று ஆர்ப்பாட்டத்தில் அதையும் செய்தனர்.

பத்தாம் வகுப்பில் தேர்ச்சி.. குறைந்த மார்க்கு எடுத்து தான்..
அப்பாவுக்கு பொண்ணு டாக்டர் ஆகனும் என ஆசை..

தலையில அடிபட்ட மகளை மடில வச்சுட்டு ஏன்டா இப்படி பண்ணினே கேட்டஅப்பாகிட்டஉங்களஏமாத்ததாம்பா மாடில இருந்து குதிச்சேன் அப்பாவியா சொன்ன மகளின் பேச்ச கேட்ட நடராசு டாக்டர் பேச்சையே கைவுட்டாரு.

பக்கத்து வீட்டு சுமதியும் மஞ்சுவும் சாட பேசுவது வழக்கம்தான்.

அதுதான்டி முட்டு சந்துல புள் ளிங்கோ பயலுகள்ள ஒருத்தன் தான்..

கண்ணார பார்த்தேன்டி.. பொறுக்க முடியாம வசந்தா கேட்டே விட்டாள்.

யோக்கியமா பேசாத ஒம்மவ அந்த நடேசன் மகனோட சுத்தரதத்தான்

சொன்னோம்..

வம்புக்கு இழுத்தவள்கிட்ட சண்டை யப்போட்டா வசந்தா.

நெஞ்சழுத்தத்தோட பதில சொன்ன மக ஆமா காலேஜ் போகையில சந்திச்சோம்.

நீங்க சம்மதிக்கலைனா சாவு எங்கள சேத்து வைக்கும். மறுபடியும் வேதாளம் முருங்கை மரம் ஏறுச்சு

வசுமதியோ மறுபடியும் பிடிவாதம். படிக்க பிடிக்கல. அவனத்தான் கட்டிப் பேன். இல்லைனா செத்துருவேன் என கூற ..

அப்பா அம்மா இருவரும் இது பொறக்காமலே இருந்திருக்கலாமே உயிர வாங்க பிறந்து தொலைச்சிருச்சு..

குமுறிக்கொண்டு வண்டியில் வந்த நடராசனுக்கு திடீரென நெஞ்சுவலி.. இருந் ததால் இரண்டு பசங்க வண்டியில வந்தவங்க அடடா அடுத்த வீதி டைலரே என உதவி செய்து ஆம்புலன்ஸ்ல ஆஸ்பத்திரி கொண்டு போனார்கள்..

பேசண்ட்டு பேரு என்னப்பா? வாட் பாய் கேட்க.. கூட வந்த பசங்களில் ஒருவன் பேரு தெரியலையே என முழிச்சான்..

வந்தவனின் கையில் டைலர் நட ராசனின் செல் இருந்தது..

கடைசியாய் அவர் அழைத்த எண் ணுக்கு அழைத்து விபரத்தைக் கூறினான்..

உறவினர்கள் பதறியடித்து வர அவர்களுடன் வசுமதியும் வசந்தாவும் ஓவென அழுது ஓடியாந்தாங்க..

வந்தவளைக்கண்டதும் காப்பாற்றிய இளைஞர்களுக்கு ஆச்சரியம்..

வசுமதி நீ இங்கே ? கேட்டவனிடம் டேய் எங்கப்பாடா என்னாலதான் அவரு இப்படி ஆனாரு என கத்தினாள் வசுமதி..

தம்பிகளா வாங்க நீங்க இன்னும் கொஞ்ச நேரம் கழித்து வந்திருந்தாலும் இவரைக் காப்பாற்றி இருக்க முடியாது..

மருத்துவர் கூறியதும் வசுமதி டேய் அசோக்கு நீயாடா எங்கப்பாவ காப்பாத்துன.. கையைப்பிடித்து நன்றி சொல்ல வசந்தாவும் கண்கலங்குனா ...

ஊரே நல்லவன் இல்லைன்னு சொன்னாலும் அவன் மனசு எவ்வளவு பெரிசு.. மகனாய் வந்து விட்டவனை விடக்கூடாது என நினைக்கையிலே..

நடராசு. வசந்தாவை பார்த்து என்ன நினைக்கிறேன்னு தெரியுது..

முதல்ல அவன் ஒரு வேலைக்குப் போகட்டும் நானே நடேசன் கிட்ட பேசுறேன்..

ஒட்டுக்கேட்ட. வசுமதியின் காலு தரையில நிக்கல..

■

நகரா வாழ்க்கை

மாலைப்பொழுதின்
மழைப்பொழுதில்
ஓட்டில் தன்னுடலை மறைத்து
அசைவற்று நிற்கிறது
ஓர் தரைநத்தை...
பெரிய உரச்சாக்கில்
தன்னுடலை மறைத்து
தன் குழந்தையை அணைத்து
நடுங்கிக்கொண்டிருக்கிறாள்..
சாலைவசிப்பாளியொருத்தி
சாக்கடை வெள்ளம் பெருக்கெடுக்கிறது...
குளிர் வாட்டி எடுக்கிறது...
நகர்கிறது நத்தை...
நகர்கிறாள் அவளும்!
அன்றோ என்றும்
நகராதிருக்கும் அவ்வசிப்பிடமும்
இவர்களுக்காக நகர்கின்றன
கொஞ்ச தூரம்... எனினும்
அவரவர் வாழ்க்கையைத்தவிர!

– ம.சக்திவேலாயுதம்
நெருப்பு விழிகள்

முத்தமிழ் டாக்டர் கலைஞர்,அருளாளர் ஆர்.எம்.வீரப்பன் ஆகியோர் கலந்து சிறப்பித்த பன்னாட்டு தமிழ்நடுவ அறிவியல் அரங்கில் நிகழ்வுகளை தொகுத்து வழங்கியமைக்காக பாராட்டுப்பெறுகிறார் கவிஞர் நீரை.அத்திப்பூ.தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக மேளால் துணைவேந்தர். முனைவர் அவ்வை நடராசன்.ஆஸ்திரேலிய தமிழறிஞர் பஞ்சாட்சரம் ஆகியோர் உள்ளனர்

அத்திப்பூ வித்..ப் நேர்காணல்

சந்திப்பு : பொன்மணிதாசன்

வணக்கம். தங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். தங்கள் மூலம் தமிழ்நெஞ்சம் வாசகர்களைச் சந்திப்பது கூடுதல் மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழ்நெஞ்சம் வாசகர் என்ற முறையிலும் எனது மனமார்ந்த நன்றி.

1. பண்டைய இலக்கியங்கள் இன்றும் பேசப்படுவதற்கான காரணம் என்னவாக இருக்கும்?

இலக்கு நோக்கிய படைப்புகள் பண்டைய இலக்கியங்கள் என்பதும், இதயத்தூய்மை படைப்பாளர்களுடையது என்பதும், படைப்புக்கும் படைப்பாளனுக்கும் இடைவெளி இல்லாமல் அவர்களின் வாழ்க்கை அமைந்திருந்தது என்பதும் பல காரணங்களில் சில. பல்வேறு பட்ட இலக்கிய அழகுக் கூறுகள் மற்றும் திறன்செறி காரணங்களைத் தாண்டியும் இது மிகுந்து உள்ளது என்பதால் பண்டைய இலக்கியங்கள் இன்றும் பேசப்படுகின்றன. எப்படி எழுதினால் பொருள் சேரும் என்ற சிந்தனையோ, எப்படி எழுதினால் செயற்கையாகவேனும் மக்களைச் சிரிக்க வைத்து சிந்திக்க விடாமல் செய்ய வேண்டும் என்ற எண்ணம் பண்டைய இலக்கியம் படைத்தவர்களிடம் ஒருபோதும் இருந்ததில்லை, ஒரு துளியும் இருந்ததில்லை.. மக்களை மகிழ்ச்சிப் படுத்தும் வகையில் அவர்கள் நலனுக்கு ஒவ்வாத எதனையும் எடுத்துக் கூற அவர்கள் விரும்பியதில்லை. முன்வந்த தில்லை. மக்களின் பலவீனம் மறைமுகப் பணமாக்கும் இன்றைய பல படைப்பாளிகளின் தரம் குறைந்த சிந்தனை

அவர்களிடம் இருந்ததில்லை. பட்டிமன்றம், பாட்டுமன்றம், நகைச்சுவை மன்றம் என்று பெயர் வைத்துத் தமிழ்த்தாயைப் புண்ணாக்கிப் பார்க்கும் இழிசெயல்கள் அவர் களுக்குத் தெரியாத நிலையில் இலக்கியம் சமுதாயம் முன்னேற்ற வழிமுறை என்று எண்ணியே இலக்கியம் படைத்தார்கள். இன்றைய சூழலில், ஊடகங்கள், எழுத்தாளர்கள் எந்த எண்ணம் கொண்டுள்ளார்களோ அந்த எண்ணம் அவர் களிடம் இருந்திருக்கவில்லை. அதனால் அவை யாரையும் சார்ந்து நின்று எழுதப்படவில்லை. எல்லோரும் இன்புற்றிருக்க நினைத்து இதயத் தூய்மைக்கு ஆற்றுப்படுத்தின பண்டைய இலக்கியங் கள். எனவே அவை இன்றும் நின்று புகழ்படப் பேசப்படுகின்றன.

2. அன்றும் இன்றும் ஒப்பிடும்போது தமிழின் வளர்ச்சி எப்படி?

வளர்ச்சி என்பதன் வரையறை முறையாகக் கணிக்கப்பட்டால் இன்றைய நிலையில் தமிழின் வளர்ச்சி மிகுந்து காணப்படுவதை எவருமே மறுக்க இயலாது. வட்டிலும், தட்டிலும் வடிவமைத்து வைத்தி ருக்கும் தமிழாக்கங்கள் முன்னைவிட இன்று தான் உலகம் முழுமையும் சென்றடைந் திருக்கிறது. அறிவியலின் அபரிமிதமான வளர்ச்சியில் தமிழை உலக மக்கள் தாங்களாகவே முன்வந்து கற்று மகிழும் வாய்ப்பையும், தமிழையே மறந்திருந்த தமிழ்ச்சமுதாயவழி மக்களையும் தமிழின் இனிமையை, உயர்வை, எழிலை உணர வைத்துத் தமிழின்பால் ஈர்த்து பல்வேறு வளர்ச்சி நிலைகளை எட்ட வைத்திருக் கிறது. இதுதான் உண்மை.

3. தாங்கள் பல்வேறு ஆளுமைகளைச் சந்தித்திருக்கிறீர்கள். அவர்களில் உங்களுக்குப் பிடித்த ஒருவரைப்பற்றி சொல்லுங்களேன். அது ஏன் எதற்கு?

இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் தொடங்கி அய்யா நல்லகண்ணு, திருமதி. சோனியா காந்தி போன்ற அரசியல் திறனாளர்கள், திரு சுர்ஜித்சிங் பர்னாலா போன்ற தமிழக ஆளுநர்கள், முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர், திரு. மு.க.ஸ்டாலின் போன்ற முதலமைச்சர்கள்,

1993ஆம் ஆண்டு திருவாரூர் திரு.வி.க.அரசினர் கலைக்கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் மன்ற விழாவில் உவமைக்கவிஞர் சுரதா, அவர்கள் முன்னிலையில் சிறப்பு சொற்பொழிவாற்றி பாராட்டுப் பெற்ற நிகழ்வில் திருத்துறைப்பூண்டி கவிஞர் பத்மநாபன் அவகளுடன் கவிஞர் நீரை.அத்திப்பூ

திரு. ப.சிதம்பரம், திரு சு.திருநாவுக்கரசர், திரு. தயாநிதிமாறன், திரு.அ,இராசா போன்ற பல மத்திய அமைச்சர்கள் பேராசிரியர் க.அன்பழகன், திரு. பரிதி இளம்வழுதி, திரு. பொன்னையன் உள்ளிட்ட மாநில அமைச்சர் பெருமக்கள், கவிஞர் வேழவேந்தன்,திரு.இரகுமான்கான்போன்ற முன்னாள் அமைச்சர்கள் ஆகியோரை விழாதொகுப்புரையின்போதும், விழாவின் முன்னரும்பின்னரும்சந்திக்கும்வாய்ப்புகள் பெற்றிருந்தேன். முனைவர் பொற்கோ, முனைவர் மறைமலை இலக்குவனார், முனைவர் இ.சுந்தரமூர்த்தி, முனைவர் க. இராமசாமி, முனைவர். அவ்வை நடராசன், முனைவர் ம. இராசேந்திரன் உள்ளிட்ட பல தமிழறிஞர்களையும் கவிக்கோ அப்துல் ரகுமான், கவியரசு வைரமுத்து, காப்பியக் கவிஞர் வாலி, உவமைக் கவிஞர் சுரதா, கவிஞர் ஈரோடு தமிழன்பன், மு. மேத்தா, கவிஞர் பிறைசூடன், கவிஞர் முத்துலிங்கம், கவிஞர் பூவை. செங்குட்டுவன் உள்ளிட்ட கவிஞர் பெருமக்களையும் நேரிலும், விழா அரங்குகளிலும் சந்தித்து உரையாடும் பேறு பெற்றுள்ளேன். திரைத்துறை மார்கண்டேயர் இலக்கிய விற்பன்னர் நடிகர் திரு. சிவகுமார், நூல் உயிராய் போற்றும் திரு. ராஜேஷ், இலக்கிய ஆர்வலர் திரு. டெல்லி கணேஷ், திரு. பிரபு உள்ளிட்ட திரைத்துறையாளர்களையும், கலைமாமணி கவிஞர் பொன்னடியார், கலைமாமணி கவிஞர் ஏர்வாடி இராதா கிருஷ்ணன், மறைந்த தமிழ்வாணன் அவர்களையும், அவருடைய மைந்தர்க ளான திரு. லேனா தமிழ்வாணன், திரு . ரவிதமிழ்வாணன் உள்ளிட்ட இதழியல் ஆளுமைகள் பலரையும் அடிக்கடி சந்தித்து உரையாடும் வாய்ப்பு பெற்றுள்ளேன். எனக்கு தொடக்கப்பள்ளி தொடங்கி மேல்நிலைப்பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகம் என்று பல்வேறு நிலைகளில் ஆசிரியர், தலைமை ஆசிரியர்கள், பேராசிரி யர்கள், கல்லூரி முதல்வர்கள் என்று பலரோடு நெருங்கிய தொடர்பில் இருந்து வந்துள்ளேன். சிங்கப்பூரின் இலக்கிய ஆளுமைகள் அய்யா ஏ.பி.இராமன், அறிவிப்பாளர் திலகம் பி.எச். அப்துல் ஹமீது, ஊடகவியல் வல்லுநர் முகமது அலி, தேசிய நூலகச் சிறப்பாளர் அழகிய பாண்டியன், கவிஞர் பிச்சினிக்காடு இளங்கோ ஆகியோருடன் மனம் விட்டுப் பேசும் வாய்ப்புகள் பெற்றேன்.

இத்தனை பேர்களிலும் என் மனத்தின் அடித்தளத்தில் என்றும் நிலைத்து நின்று அத்தனை உணர்வுகளிலும் தன்னை அடையாளப் படுத்திக்கொண்டிருப்பவர் எனக்கு மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரிய ராகஇருந்து,பின்னர்தலைமைஆசிரியாரகப் பணிநிறைவு பெற்ற பிரிஞ்சைப் புலவர் வை. தட்சணாமூர்த்தி அவர்கள் என்பதில் நான் மிகுந்த பூரிப்படைகிறேன். என்னை அவர் மாணவர் என்று அழைத்ததே இல்லை. ”அன்புத் தம்பி என்றே அழைப்பார். எனக்கு பள்ளிகாலத்தில் தமிழுணர்வையும் தமிழ் அறிவையும் ஊட்டி வளர்த்த பெருமை அவரையே சாரும். எனக்குள் இருந்த கவிதைத் திறமையை அடையாளம் கண்டு ஆற்றுப்படுத்தி பள்ளி நாட்களிலேயே பரிசுகள் குவிக்க வைத்தவர். கல்லூரி சென்றபின் என் வாழ்க்கைப் பாதையில் வழிகாட்டியானார். நான் இலக்கிய உலகில் நுழைந்து பெயர்பெறத் தொடங்கியதும் பூரித்து வாழ்த்திக் கொண்டே இருந்தார். வானொலியில் என் குரலைக் கேட்டு விட்டாலும், தொலைக்காட்சியில் என் முகத்தைப் பார்த்து விட்டாலும், இதழில் என் பெயரைப் பார்த்து விட்டாலும் அடுத்த நாளில் அஞ்சலட்டையில் ஒரு வாழ்த்து அன்பின் மிகுதியில் வந்தடையும். இப்போது நினைவுகளால் என்னை தமிழ்வழி நடத்திக் கொண்டிருக்கிறார். அவரைப்பற்றி நான் எழுதிய சில வரிகளை இங்கு கூறுவது பொருத்தமாக இருக்கும். நீதிபதி விடைத்தாளைத் திருத்தும் போது நிகழ்கால காந்திமகான் உபதே சத்தில்

சென்னையில் நடைபெற்ற விழாவில் எழுத்து இமயம் விருது வழங்கி மகிழ்வித்த தருணம் தமிழ்சான்றோர்கள் முனைவர்.பா.வளன் அரசு ஏனையோருடன்

பாதிமதி மீதியெல்லாம் கற்ற கல்வி
பாமரர்க்கு இவரேதான் ஆத்திச் சூடி
சாதிமத பேதமில்லாத் தூய உள்ளம்
சான்றாண்மைத் தாயுள்ளம் அன்பு வெள்ளம்
ஓதிவிதந் துரைத்துவிட சிறியேன் புத்தி
உதவாது காலடியில் விழுந்து விட்டேன்"

4. மரபுக் கவிதைகள் தற்காலம் நிராகரிக்கப் படுவதாக ஒரு குற்றச்சாட்டு அது சரியா?

மரபுக் கவிதைகளோ சந்தக் கவிதைகளோ எந்தக் காலத்திலும் நிராகரிக்கப்பட முடியாதவை. நினைவில் நின்று நெஞ்சத்தை மகிழ்விப்பதோடல்லாமல், கேட்டார் பிணிக்கு தகைவாய் அமைவது மரபுக் கவிதைகளே. 1970 ஆண்டு வானொலியில் ஒலிபரப்பான கவிதைகளை இன்றும் என்னால் அரங்கங்களில் கூறி அன்பான வரவேற்பைப் பெற முடிகின்றது என்றால் அது மரபின் மாண்பும் சந்த இசையின் சிறப்பும்தான் என்றால் மிகையில்லை. ஆனால் மரபு என்ற ஒன்றைப் பற்றிக் கொண்டு கவித்துவத்தை விட்டு விடும் போக்கால் மரபுக் கவிதைகள் நிராகரிக்கப்படும் வாய்ப்பு உள்ளது. "திண்ணை என்பது தெருவில் உயர்ந்தது \ அண்ணன் என்பவன் தம்பிக்கு மூத்தவன் \ கிழக்கு என்பது மேற்கில் இருந்து பார்த்தால் தெரியும்" என்பது போன்றவை இயல்பாகவே இறந்துபடும்.

5. மரபுக் கவிதை எளிதின்மைதான் புதுக்கவிதையின் வளர்ச்சி என சிலர் கூறுகிறார்கள். தாங்கள் கூறும் கருத்து?

மரபுக் கவிதை வேர்கள் போன்று மறைந்திருக்கும். மிகுந்த செயலாற்றும். சிறிது முயற்சி மேற்கொண்டு வேரைப் பார்க்கலாம். அதன் உயிருக்கு நீரூற்றலாம். உயர்ந்த

விழா ஒன்றில் ஐயா நல்லக்கண்ணுவுடன் நீரை அத்திப்பூ

பலனைப் பெற்று மகிழலாம். புதுக்கவிதை விழுதுகளாக வெளியில் தெரிந்து வளரும். பிடித்துக் கொண்டு ஊஞ்சல் கூட ஆடலாம். வேரின் சிறப்பில் தான் அது வளர்கிறது. எனவே விழுதுகளை வேர்கள் வெறுக்காமல் இருப்பதும் வேர்களின் உன்னதத்தை உணர்ந்து கொண்டு விழுதுகள் வளர்வதும் முன்னேற்றம் கொடுக்கும். சமுதாயம் வளர்ச்சி பெறும், புதுக்கவிதைகளின் மின்னல் வெட்டும் நொடிப்பொழுதில் கிடைக்கும் படைப்பும் எளிமைபோல் தோன்று கின்றது. வேர் பிடித்த மரபு வியந்து போற்றும் தன்மையதாகும்.

6. கவியரசருக்குப் பின்பு அந்த இடம் காலியாக இருப்பதாய் உணர்கிறேன். நான் உணர்வது சரியாகுமா?

நீங்கள் உணர்வது சரியில்லை என்றுதான் நான் கூறுவேன். இடம் நிரப்பப் படாமல் இருக்கிறது என்பது முற்றிலும் சரியில்லை. பகுதி பகுதியாக நிரப்பப் பட்டுதான் வந்து கொண்டிருக்கிறது. பொன்மணிதாசன் கவிதைத் தொகுப்புகள் அனைத்தையும் படித்துப் பார்த்தவர்கள். ஆழ்ந்து சுவைத்த வர்கள் என்னுடைய இந்தக் கருத்தை ஒத்துக் கொள்வார்கள். பாதிக்குமேற்பட்ட கவிதைகளை பகுதியை நிரப்ப வந்தவை என்று சொல்வது தவறாகாது. இதனை வேளாங்கண்ணியில் நடைபெற்ற விழாவில் எடுத்துரைத்தேன் என்பது பலருக்கு நினைவில் இருக்கும் வாய்ப்பு உண்டு. இப்படிப்பட்ட பொன்மணிதாசன்கள் அங்கங்கே இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். வெளிச்சத்திற்கு வரவேண்டும். தமிழ்நெஞ்சம் அந்த வகையில் தன்னை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறது என்பது மிகையில்லை. அதன் முயற்சி அந்தந வெற்றிடத்தை நிரப்பும் பணியில் நிலைத்திருக்கும்.

7. நமது காலத்தில் தமிழமைப்புகள் பல தோன்றின. ஆனால் எதுவும் நிலைக் கவில்லை. இன்று பல முகநூல் குழுமங்கள் புதிது புதிதாய் புற்றீசலாய்ப் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் இவை ளின் நிலை என்னவாகும்?

தோன்றும் தமிழ் அமைப்புகள் நிலைக்கவில்லை என்பது வருந்தத்தக்க உண்மை. நிலைத்திருக்கும் செயலை அவை நிறைவேற்றியுள்ளன என்பது மறுக்க முடியாத ஒன்று. 1964 ஆம் ஆண்டில் மாணவராக இருக்கும் போது தொடங்கிய மாலை இலக்கிய வட்டம்தான் மாலை கையேடு தொடங்கவும் அச்சுக்குக் கொண்டு வரவும் காரணமாயிருந்தது. அப்போது இலக்கிய ஆர்வம் மிக்கவர் மத்தியில் இனிய பெயரை நாட்டி வந்தது. திருத்துறைப்பூண்டி தமிழ்ச்சங்கம், ஞானபீடம் போன்ற பல அமைப்புகள் திருத்துறைப்பூண்டியிலும் சுற்றுவட்டாரத்திலும் ஆற்றிய இலக்கியசமூக சேவைகள் இப்போது எண்ணிப்பார்த்தாலும் மகிழ்ச்சி தருகிறது. இவை கணினி பயன்பாடு காணாத காலங்கள். இவை சமுதாய நலனைமட்டுமே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டன. இன்று உருவாகும் அமைப்புகளில் பல தனிமனித புகழ் வெளிச்ச வெறியில் குளிர் காய்கின்றன. பொன்னாடை போர்த்திக் கொள்ளவும், புன்னகை சான்றிதழ்

பெறவும், ஊடகப் பதிவுகளில் உயிரூட்டம் காட்டவும் ஆர்வம் காட்டுகின்றன. அது நிதிநிலை ஆதாரங்கள் நிலைகுலைந்து போகும்போது நிச்சயம் மறைந்து போய் விடும் வாய்ப்புகள் அதிகம். சுற்றிலும் ஒரு கூட்டம் ஏதோ ஒன்றை எதிர்பார்த்து நிற்கின்ற நிலையில் இக்குழுக்கள் ஈசலின் குறுகிய கால வாழ்வை சுவைக்கின்றன.

8. தாங்கள் மாலை கையெழுத்து பிரதி முதல் தகவல் முத்து அச்சு இதழ்வரை பத்திரிகைநடத்திவருகிறீர்கள்.உலகறியும். அதன்மூலம் கிடைத்த அனுபவம்?

"அழுதாலும் பிள்ளை அவளேதான் பெறவேண்டும்" என்பது மட்டும் கிடைத்து விட்ட அழுத்தமான அனுபவம். பிள்ளை பெற வேண்டிய ஆசையும், அதனால் கிடைக்கும் மகிழ்ச்சியும் அனுபவமாகப் பெற எண்ணுகின்றபோது அழுதாலும் பரவாயில்லை என்று பொறுத்துக் கொள்ளத்தானே வேண்டும் என்பது ஏற்றுக் கொண்ட அனுபவம். 1964 ல் மாலை கையெழுத்து இதழ் தொடங்கியபோதும் நான்கு படிகள் எடுத்து திருத்துறைப்பூண்டி, தலைஞாயிறு, கோட்டூர் நூலகங்களில் கொடுத்ததுபோகஒன்றைக்கையில்வைத்துக் கொண்டு காட்டிக் காட்டி படைப்புகள் வாங்கியதும் இனிய அனுபவம். நூலகங்களில் மறைந்திருந்து படிப்பவர்களைக் கண் காணித்து அவர்களின் உணர்வுகளைக் கண்டு உளம்பூரித்தது இன்னொரு வகை அனுபவம். ஆனால் எல்லாம் மறைந்து போகும் ஒரு அனுபவம் கிடைக்குமென்று அப்போது நினைக்கவில்லை. அச்சுக்கு வந்த முதல் இதழில் " இலங்கை - போதிமரத்து புத்தரின் சீடர்கள் தூக்கு மரத்தால் தோரணங்கள் கட்டுமிடம்" என்ற வல்லம் தாஜுபால் கவிதையைஅட்டையில்தாங்கிகவிஞர்காரை. எழிலன், கவிஞர். நிறைமகிழ்நன், கவிஞர். மணலி சோமன், கவிஞர். பொன்மணிதாசன் உள்ளிட்டோரின் படைப்புகளுடன் வெளி வந்தது. அதைத் தொடரமுடியவில்லை. ஒரு மோதிரம் போனதோடு இதழின் தொடர் முயற்சியும் நின்று போய் விட்டது. "வெளிச்சம் தெரிந்த பகல் பொழுதில் விளக்குகளைத் தூக்கி வந்தவர்கள், இருட்டியதும் எங்கோ ஒளிந்து கொண்டார்கள்" என்று தொடங்கிய இரண்டாம் அச்சிதழுக்கான தலையங்கம் வெளிவராமலே குறைப்பிரசவமாகி நின்று விட்டது.ஆனால்அரிப்பைச்சொரிந்துகொள்ள "அத்திப்பூ" என்ற இதழ் நகலச்சு இதழாக முடிந்தபோதெல்லாம் வெளியிடப்பட்டது. கைகாசு செலவிடாமல் இதழ்நடத்தும் ஒரு அரிய வாய்ப்பு என்னைத் தேடி வந்தது. எனக்குக் கல்லூரியில் பேராசிரியராக இருந்த திரு. தி.சீ. கோவிந்தராஜன் என்பவர் அஞ்சல்துறைத் தலைவர் என்ற உயர் அதிகாரியாக வந்து விட்டார். அவர் "அஞ்சல் முத்துக்கள்" என்னும் இதழை நடத்தும் வாய்ப்பைக் கொடுத்தார். பல ஆண்டுகள் வெளிவந்தது.அதன்வழி"மறுபக்கம்"கவிதைத் தொகுப்பும் வெளியிடப்பட்டது. பின்னர் பணி ஓய்வுக்குப்பின் பணி ஓய்வுப் பணத்தில் சிறுபகுதி கொண்டு "தகவல் முத்துக்கள்" என்ற இதழ் பத்து ஆண்டுகள் அச்சில் வெளிவந்து அச்சிதழ் வெளியிட நிதி ஆதாரம் ஏறக்குறை 35 நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்ததில் கிடைத்த தொகை கைகொடுத்தது. இப்போது கொரோனா ஊரடங்கின் காரணமாய் எதுவும்

உலகம்போற்றும் உன்னதப் பண்பாளர் பாலம் கல்யாணசுந்தரம் ஐயா அவர்கள் சாதனையாளர் விருது வழங்கியபோது. முனைவர்.க.ப.அறவாணன் அவர்களுடன் நீரை.அத்திப்பூ

செய்ய இயலாத நிலையில் மின்னிதழாக வெளிவந்து கொண்டிருக்கிறது. அத்துடன் "அத்திப்பூ கவிமாலை" இதழும் மின்னிதழாகத் தொடர்கிறது. அழுதுகொண்டிருந்தாலும் ஆனந்தம்குறையாமல்இதழ்ப்பணிதொடர்கிறது.

9. ஒரு கவிஞர் இப்படி இருக்கக் கூடாது என்றால் எதைச் சுட்டுவீர்கள்?

கவிதைகளில் காட்டுகின்ற நெறி முறைகளைத் தாம் வாழ்க்கையில் கடை பிடிக்காதவராக ஒரு கவிஞர் இருக்கக் கூடாது. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம் 1991 ஆம் ஆண்டு வெளியிட்ட "வண்ண ஒளி எண்ண அலை சின்னவரி" என்ற கவிதைத் தொகுப்பில் அய்யா தென்கச்சி சுவாமிநாதன் அவர்கள் இதைத் தான் குறிப்பிட்டார். "எழுத்துக்கும் எழுத்தாளனுக்கும் இடைவெளி குறைய வேண்டும். அது சமுதாயத்தை மேம் படுத்தும்" என்று குறிப்பிட்டார். இதைத் தான் நானும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். "He is not practicing what he is preaching" என்றில்லாமல் ஊருக்குத்தான் உபதேசம் என்ற பெயரெடுக்காமல் இருக்க வேண்டும்.

10. ஐயா அப்துல் கலாம் அவர்களிடம் தாங்கள் நெருங்கிப் பேசியவர். அவரிடம் இதுபற்றிப் பேசாமல் விட்டு விட்டோமே என்று நினைத்ததுண்டா?

நெருங்கிப் பேசியபோதெல்லாம் விழாவோ, விழாவின் முன் உள்ள சிறிதுநேரமோ, பின் புறப்படப்போகும் சிறிது நேரமோ என்பதாக இருக்கும் என்பதால் அப்படி எதுவும் கேட்கும் வாய்ப்பு ஏற்படவேயில்லை. ஆனால் அவர்களின் "இந்தியா 2020" நூல் வெளியீட்டு விழா சென்னை கோபாலபுரம் காதி கிராமோத்யோக் பவன் அரங்கில் நடை பெற்ற போது தொகுப்புரை செய்தேன். அன்று அவர்கள் குடியரசுத் தலைவர் என்ற கற்பனை கூட யாருக்கும் இல்லை. அப்போது, "தனுஷ்கோடி புயலடித்து ஓய்ந்தது – அதில் \ தத்தளித்த உயிர் ஒன்று ஆய்ந்தது, அணுவை ஆய்ந்தது \ அணுவுக்குள் அடங்கியே இருப்பதோ – இந்த \ அகிலத்தில் என்று அது மிளிர்வதோ?" என்று கூறினேன். பின்னர் பேசிய விஞ்ஞானி நெல்லை. சு. முத்து அவர்கள், "தொகுப்பாளர் என்ன கூறினார் தெரியுமா? நம்முடைய டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் இந்திய நாட்டின் ஜனாதிபதியாக வரவேண்டும்" என்று கூறினார் என்று குறிப்பிட்டார். இதைக்கேட்ட மேதகு கலாம் அவர்கள் "அப்படி எல்லாம் சொல்லாதீர்கள்" என்று கூறினார். இதைக் குறிப்பிட்டு கேட்க எண்ணினேன். அது இயலாமல் போய் விட்டது. ஆனால் அவர் பதவி ஏற்றதும் எனக்கு வந்த பதில் கடிதத்தில் "I feel extremely happy over the sentiment you have expressed on assumption of my charge " என்று குறிப்பிட்டிருந்தார். நான் கேட்காமல் விட்ட கேள்விக்கு விடை இதில் கிடைத்து விட்டது.

11. கடந்த கஜாப்புயல் அதுவும் குறிப் பாகத் தங்கள் ஊரில் ஏற்படுத்திய சேதம் சொல்லவொண்ணா வகையில் அந்தப் புயல் மனத்தளவில்பெருங்காயத்தைஏற்படுத்தியதை நான் உணர்வேன். தங்களது அரிய படைப்புக் களைக்கூட அள்ளிக்கொண்டு போனதாய் கேள்விப் பட்டேன். அந்த வலிக்குப்பின் உங்கள் மனநிலை?

தங்களுடைய இந்தக் கேள்வி என் உணர்வுகளைக் கிளறிவிட்டு, கட்டுப்படுத்த முடியாமல் உணர்வுகளை வெளிப்படுத்த வைக்கிறது. விரிவுக்கு மன்னிப்புக் கோரு கிறேன். கஜா புயல் மட்டுமல்ல என் வாழ்க்கைத் தடத்தில் சந்தித்த பல புயல்கள் என்னுடைய இலக்கிய சேமிப்புகள் மேல் சீற்றம் கொண்டவையாகவே இருந்து வந்துள்ளன. 1951 ஆம் ஆண்டு பிறந்தேன்.

1952 ஆம் ஆண்டில் அடித்த கடும்புயல் என்னையும் என் தாயாரையும் சேர்த்து உருட்டிக் கொண்டு சென்றதாக எனக்கு நினைவு படுத்தினார்கள். அந்தப் புயல் குடும்பப் பொக்கிஷங்களாக இருந்த விலைமதிப்பற்ற ஓலைச்சுவடிகள் நூற்றுக் கணக்கில் அழித்து முடித்ததாக பின்னர் கேள்விப்பட்டேன். எனக்கும் இயற்கைச் சீற்றத்திற்கும் ஓர் ஒற்றுமை இருக்கலாமோ என்பது அதைக்கேட்டபின் என் உள்ளுணர்வு உணர்த்திய குறிப்பு. காரணம் என் நூல்சேகரிப்புகள், படைத்த படைப்புகள் சேகரிப்புகள் என்று எல்லாமும் ஒவ்வொரு புயலுக்கும் அல்லது வெள்ளத்திற்கும் இரையான கொடுமைதான் நிகழ்ந்திருக்கின்றது. .

நான் என் பாட்டனார் மருத்துவர் அல்லாபிச்சை அவர்கள் எழுதிய ஓலைச் சுவடிகள், என் வளர்ப்புத் தந்தை கவிஞர் அ. அகமதுசா அவர்கள் எழுதிக் காத்துவைத்திருந்த கவிதைகளின் கையேட்டுப் பிரதிகள், என் அண்ணன் உருவாக்கி அழகுபார்த்த கலைப் பொருள்கள், நான் பள்ளி மாணவப்பருவத்தில் நடத்திய "மாலை" என்ற இதழின் கையேட்டுப் பிரதிகள் என்று எல்லாவற்றையும் பத்திரப்படுத்தி வீட்டுக்கு அருகில் நூலகம் இணைந்த பயிற்சி வகுப்பாகப் பாதுகாத்து வந்தேன். 1977 ஆம் ஆண்டு எங்கள் ஊரைச் சின்னாபின்னமாக்கிய புயல் என் நூலகப் பொக்கிஷங்களையும் பல்வேறு சான்றிதழ்களையும் சொத்து ஆவணங் களையும் பலமாதங்கள் சேரும் சகதியும் மூடி வைத்து அழித்து விட்டது. இது இழப்பின் முதல் சந்திப்பு.

நான் எங்கு சென்றாலும் வாங்கிவரும் நூல்கள், இதழ்கள் எல்லாவற்றையும் சென்னையில் வண்டலூர் வெங்கடேசபுரம் அறையில் பாதுகாத்து வந்தேன். அத்தோடு என் கவிதைகள், படைப்புகளின் கையேட்டுப் பிரதிகளும், இதழ்களில் வந்தவற்றின் தொகுப்புகளும் கோப்புகளாக வைத்திருந்தேன். நான் கலந்து கொண்ட பல்வேறு விழாக்களின் புகைப்படங்கள், ஒலி மற்றும் ஒளி

வேளை முத்தமிழ்ச் சங்கமம் கவிஞர் பாலு கோவிந்தராசன் கவிஞர் நீரை அத்திப்பூ' கவிஞர் பொன்மணிதாசன்

நாடாக்களையும் பொன்னேபோல் போற்றிப் பாதுகாத்து வந்தேன், என்னுடைய கணினி, மடிக்கணினிகள் எண்ணற்ற பொக்கிஷங்களை ஏந்தி மகிழ்ந்திருந்தன. சொந்த கிராமத்தில் வீட்டின் மாடி அறையிலும் இதேபோல பொக்கிஷப் பாதுகாப்புப் பெட்டகங்கள் நிறைந்திருந்தன. என்னுடைய வண்டலூர் அறையில் இருந்த பொக்கிஷங்களுக்கும் கணினி உள்ளீடுகளுக்கும் ஒரு டிசம்பர் முதல்நாள் அன்று சென்னையில் ஏற்பட்ட மிகப்பெரிய வெள்ளப்பெருக்கில் என் அறைமுழுவதும் நீர் நிரம்பி மூழ்கடிக்கப்பட்டு விட்டது.

1918 அக்டோபரில் நிகழ்ந்த கொடூர கஜா புயல் என் வீட்டின் அறையில் இருந்த எழுத்தாக்கங்கள், கணினி தாங்கிய கருத்தாக்கங்கள், விழா புகைப்படங்கள் எல்லாவற்றையும் கண்ணாடிஜன்னல்களை உடைத்துக் கொண்டு காற்றாற்று வெள்ளமாய் மூழ்கடித்து அழித்து விட்டது. என் கண்ணீர் எல்லாம் அந்த வெள்ளநீரில் வேதனையுடன் கலந்து போய்விட்டது. அப்புறம் அழுவதற்குக் கண்ணீரும் இல்லை. இப்படிப்பட்ட சூழலில் நூல்கள் பாதுகாப்பிலேயே விரக்தி ஏற்பட்டு கையில்

ஒரு நூல் கிடைத்தாலும் திருத்துறைப்பூண்டி புனித அந்தோனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிக்கு அனுப்பி வைத்துவிடுவேன். இது இன்றும் தொடர்கிறது.

நான் 22 ஆண்டுகள் தங்கியிருந்த வண்டலூர் அறையில் வெள்ளம் எதிர்த்து வேள்வி நடத்திய நூல்களும், கவிதை கட்டுகளும் மேல்பரணியில் இருந்தன. அவற்றை எப்படியாவது தொகுத்துவிடவேண்டும் என்றிருந்த நிலையில் கொரானா கொடுமையால் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக என்னால் சென்னை பக்கம் தலைகாட்டவே முடியவில்லை. அறையை அங்கு செல்லாமலே காலி பண்ணிக்கொள்ளச் செய்து விட்டேன். எதனையும் எடுத்துக் கொள்ளாமல். அவர்களையே அறையைக் காலி செய்து வெளியேற்றி விடும்படி பணிவுடன் கேட்டுக் கொண்டு விட்டேன். எஞ்சியிருந்த நூல்கள் ஒரு நூலகத்திற்கு வழங்கப்பட்டு விட்டது. உடைகள், பயன்படுத்திய பொருள்கள் ஒரு அனாதை இல்லத்திற்குக் கொடுக்கப்பட்டு விட்டன. படைப்புகள் நிறைந்திருந்த பழைய பிரதிகள் பழைய தாளாகப் படைப்பு உரு தாங்கி எலிகள் சிதைத்த நிலையில் போய் விட்டன.புகைப்படங்கள்உருமாறிஅழிந்து விட்டன. ஒலிநாடாக்கள் போன்றவை குப்பைகளுடன் இணைந்து விட்டன. எனவே மீண்டும் பொக்கிஷங்களின் பேரழிவு நிறைவேறிவிட்டது.

ஆனால் இந்த கொரோனா தனிமை தீராத்துயரத்துடன் சிறிது துணிவையும் தந்து கவிதை எழுத வைத்தது. நண்பர்கள் திரு சுந்தர ஆவுடையப்பன், திரு. எழில், திரு. ஜவஹர்ராஜ், திரு. வெங்கட்ராவ், ஈரோடு கவிஞர் சிந்தாமணி ஹக்கீம், திரு. ஜான் சேவியர், தோப்புத்துறை ஆரிஃப், தலைஞாயிறு பதுருதீன் போன்றவர்கள் கவிதை எழுதத் தூண்டினர். பெரியவர் திரு. பி. வெங்கட்ராமன் கையைப் பிடித்து எழுத வைப்பதுபோலதினமும்தொலைப்பேசியில் வற்புறுத்திக் கொண்டே இருந்தார். புகழ்பெற்ற மூத்த இதழியலாளர் திரு. தீபம் திருமலை எழுது எழுது என்று கடிதம் எழுதிக் கொண்டே இருந்தார். எழுதினேன். எழுதிக் கொண்டே இருக்கிறேன். இந்தக் காலத்தில்தான் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், பாரதியாரின் புதிய ஆத்திச்சூடி, அரிய குறுஞ்செய்திகள் ஆகியவற்றை 24 வரிகளுக்குக் குறையாத கவிதைகளாக வடித்தேன். அவை யாவும் 25 நூல்கள் வெளியிடும் அளவுக்கு இன்று நிறைந்து விட்டன. அச்சுப் பொறிக்கு இப்போது வாய்ப்பே இல்லை என்பதால் மின்னஞ்சல் வழியாக இதழாகவும், நூலாகவும் வெளியிட எண்ணி மின்னிதழ், மின்னூல் முயற்சியைத் தொடர்கிறேன். வெற்றி தோல்வி என்ற எண்ணமோ, விருது பரிசு என்ற உந்தலோ, புகழ் பாராட்டு என்ற ஆசையோ, பணம் காசு என்ற விருப்பமோ, விற்பனை கடைவிரிப்பு என்ற நோக்கமோ எதுவுமே இல்லை. தவ வாழ்வைப்போன்ற ஆத்ம திருப்தி கிடைக்கும் என்ற நம்பிக்கை மட்டுமே முன்னிற்கிறது. தங்கள் அன்பு கிடைப்பது கூடுதல் திருப்தி என்பதும் பொய்யல்ல. எனவே இந்தப் புத்துணர்வில் நெருப்பின் சாம்பலிலிருந்து வந்த பறவையாய் நினைவில் ஆனந்தம் பொங்க பறந்து கொண்டிருக்கிறேன். படைப்புகள் தொடர்கின்றன.தொடரும்என்றநம்பிக்கை மேலோங்கி நிற்கிறது.

12. அரசு அவ்வப்போது தமிழறிஞர்களுக்கு விருதுகளை அறிவித்துக் கொண்டே இருக்கிறது. அது தமிழ் வளர்ச்சிக்கு உதவும் என்று கூறமுடியுமா?

விருதுகள் மற்றவர்கள் ஊக்கம் பெற்று உழைக்க வழி செய்யும் என்பதை மறுக்க இயலாது. அதனால் தமிழ் வளர்ச்சிக்கு வாய்ப்பாக அமையும் என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். அரசு தமிழ்வளர்ச்சிக்கு நேரடியாக உதவும்

செயல் நீதிமன்ற மொழி யாகவும், பயிற்று மொழியாகவும், வேலை வாய்ப்பிற்கான வழியமைக்கும் மொழியாகவும் வற்புறுத்தும் சட்டங்கள் இயற்றுவதும், வேலைவாய்ப்பில் தமிழுக்கு முன்னுரிமை வழங்குவதும் மிகச்சிறந்த பயனை நல்கும்.

13. தாங்கள் தமிழ்நெஞ்சம் வாசிக்கும் பல்லாயிரக் கணக்கான வாசகர்களில் ஒருவர் என்ற வகையல்லாது ஒரு பத்திரிகை ஆசிரியர் எனும் உணர்வில் தமிழ்நெஞ்சத்தைப் பற்றிய கருத்து?

"பத்திரிகை கடையில் பல வண்ண அட்டையுடன்\இத்தரையில்எழுத்தெல்லாம் இழிவேசி ஆகிறது. \ காசுக்காய் எழுதுகின்ற கண்மூடி எழுத்தாளன்\வேசித்தொழிலதனை விரும்பியே செய்கின்றான். \ ஏ போட்டுப் படங்கள் இளிப்பதெல்லாம் நீ பார்த்து \ இளகியே போகாதே எரிமலையாய்ப் பொங்கி எழு" என்ற என் கவிதைக்கு மாற்றாக **"என் தமிழ்தான் என் தமிழ்தான் எந்தன் உயிர்க்காற்று - அதை \ எண்ணிவிடில் என்னுள்ளே இன்பத்தேன் ஊற்று"** என்ற என் வரிகளுக்கு இலக்கணமாகச் செயல்படும் தமிழ்நெஞ்சம் சிறப்புகள் பலபெற்றிட விரும்புகிறேன். இளைஞர்கள் முதல் எண்ணற்ற தமிழ்ச்சான்றோர்களுக்கு சிம்மாசனம் வழங்கிச் சிறப்பிக்கும் பணிக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றி. **"புதுப்புது அர்த்தம் புலப்படும் நித்தம் புத்தகம் படித்தால் கிட்டும் - நாம் \ விதைப்பது நன்றாய் விளைந்திட என்றும் விரைவோம் நூல்களின் பக்கம்"** என்பது மெய்ப்பிக்கப்படுகிறது. துணிக்கான நூல் படைக்க நல்ல பஞ்சு வேண்டும். தரமான நூல் கொடுக்க நல்ல நெஞ்சு வேண்டும். நெஞ்சகத் தூயராம் தமிழ்நெஞ்சம் ஆசிரியருக்கு என் மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள். நன்றி.

வாடகைத் தாய்

விதவைக்கும் விடியலுண்டு
வேதனைகள் தீருமென்று
விடை தேடி அலைகின்றாள்
வேண்டுதலும் பலிக்காமல்..

உதவிக்கு யாருமின்றி
உணவிற்கும் பஞ்சமென்று
விதியின் விளையாட்டில்
வீதியிலே வந்து விட்டாள்..

மாங்கல்யம் நிலைக்கவில்லை
மறுவாழ்வும் கிடைக்கவில்லை
காலத்தின் கோலமிதோ
கடவுள் செய்த கட்டளையோ..

முடிவேதும் கிடைக்காமல்
முள் தைத்த மலரானாள்
வாழ்வதற்கு வழியுமின்றி
வாடகைத் தாயானாள்..

காலங்கள் கடந்த பின்னே
கை மாறும் குழந்தை கண்டு
கண் கலங்கிக் கேட்கின்றாள்
கடவுளெங்கே உள்ளானென்று...

- ரசி குணா

உன்னினைவாய்...

என்னை மறந்தேனோ.. உன்னில் கரைந்தேனோ..
சின்ன இதயத்துள் சிலிர்க்கும் நினைவுகளோ..
மாமன் மனம் மகிழ மல்லிகையாய் பூத்தவளே..
தேவை அறிவாயோ.. தேவதை நீ வருவாயோ..

காணத் துடிக்கின்றேன். காற்றோடு பேசுகின்றேன்.
ஆனாலும் சேதியுனக்கு அடைந்ததா தெரியலையே
வீச்சு அரிவாள் போல விழி மலர்ந்து பார்த்தவளே
பேச்சில் பாசம் வைச்சு பேரழகாய் நின்னாயே

உன்னைப் பார்க்கையிலே உள்ளம் துடிக்குதடி
என்னை எடுத்தாள எப்போ நீ வரப்போறே
சின்ன சிரிப்பினிலே சில்லறையைக் கொட்டினாயோ
கன்னக்குழிக்குள்ளே என்னை கரைத்து நீ விட்டாயோ.

அள்ளும் அன்பாலே அகத்துள்ளே வந்தவளே
செல்லப் பிள்ளையாக்கி சேர்த்தணைக்கப் போவதெப்போ
முல்லைப்பூ வாசத்துல மூச்சடக்கி நிக்கறேனே
எல்லாம் உன்னினைவாய் ஏங்கி நிற்பது புரியலையா

பரணி சுப சேகர்

வழி திறந்தது

ஏளூர்க்கவிக்கோ

ஏ.ஸீ.அப்துல் றகுமான்

மெதுவாகத் தூறிக்கொண்டிருந்த மழைத் தூறல் தகட்டுக் கூரையில் தடதடவென்னும் ஓசை லயத்துடன் பெரு மழையாகப் பெய்யத் தொடங்கிய வேளை, காற்று நானும் சளைத்தவனல்ல என்று ஆக்ரோசமாக வீசத் தொடங்கியது.

இடையிடையே காதைச் செவிடாக்கும் இடிமுழக்கம், கண்ணைப் பறிக்கும் மின்னல் என இயற்கையின் வெறித் தாண்டவம் பூமியில் அரங்கேறிக் கொண்டிருந்தது.

நீண்ட நாட்களாக வரட்சியால் காய்ந்து பிளந்துகிடந்த பூமித்தாய் தன் தாகம் தீர வாஞ்சையுடன் நீரை வாங்கிக் கொண்டதுடன் தனக்கேயுரிய மண் மணத்தைக் காற்றில் பரப்பிக் கொண்டிருந்தது.

இந்த வேடிக்கையெல்லாம் வெளியில் நடந்து கொண்டிருக்க, தகட்டுக் கொட்டிலினுள்ளே காற்றினால் தள்ளப் படுகின்ற கதவுக்கு உரலொன்றை முட்டுக் கொடுத்தவாறு தனிமையும் பயமும் கலந்த அச்ச உணர்வுடன் சரீனா என்ன செய்வதென்றறியாத நிலையில் தடுமாறிக் கொண்டிருந்தாள்.

வீசுகின்ற காற்றுக்குத் தாக்குப் பிடிக்க முடியாத குப்பி விளக்கு இப்போதே அணையட்டுமா அல்லது சிறிது நேரம் கழித்து அணையட்டுமா என்றவாறு அல்லாடிக் கொண்டிருந்தது. அதே நேரம் வேகமாக வரும் காற்றுக்கு தாழ்ப் பாளில்லாத தகட்டுக் கதவு வழிவிட்டு

ஓவியம் : ரஜினிகாந்தன்

நானும் என் தனிமையும்

பலருக்கு அவஸ்தை பலருக்கு அதிசயம்
எனக்கோ அவசியம்

நான் என்னை ஆள்வதற்கும்
நான் என்னுள் மூழ்குவதற்கும்
தாய் மடியாகும என் தனிமை

கூட்டத்தில் போகும் போதும்
கூட நடந்து வரும்
தனித்து இருக்கும் போது
தள்ளி நின்று விளையாடும்

நான் தேடும் போது
ஓடி ஒளிந்து கொள்ளும்
நான் தேவையில்லை என்றாலோ
திடீரென கட்டிக் கொள்ளும்

இனிமையான எதிரி
இயல்பான குரு
வலிமையான தோழி
வாலாட்டும் குழந்தை
என் தனிமை எனக்காக
எப்படி வேண்டுமானாலும் உருமாறும்

புத்தனுக்கு ஞானம் தந்தது போதிமரமாமே
புரியாதவர்கள் சொன்ன பொய்யது

ஆசைகளை தணித்து கொண்டான்
புத்தன் தன்னையும் தனித்துக் கொண்டான்
தனிமையே புத்தனை முழுமையாக்கியது

பலர் தனிமைக்காக தவிக்கிறார்கள்
சிலர் தனிமையில் தவிக்கிறார்கள்

நான் தனிமையில் வாழவில்லை
தனிமையோடு வாழ்கிறேன்

என் தனிமையோடு இருக்கும் போது மட்டுமே
நான் நானாக இருக்கிறேன்
நான் நானாகவே இருக்க ஆசைப் படுகிறேன்.

மீரா ஸ்ரீ
மஞ்சள் மாநகர்

விரியப் பார்க்கிறது.

உரல் மட்டும் போதாது பெரிய தடியொன்றையும் இறுக்கிய போதுதான் கதவு மௌனம் காத்தது.

வீசுகின்ற காற்றும் குளிர் மழைச் சாரலும் சேர்ந்து வெறும் பாயில் சரியாகப் போர்த்தப்படாத நிலையில் உறங்கிக் கொண்டிருந்த ஒரு வயதான சரீனா வின் குழந்தை எழுந்து பயந்து அழத் தொடங்கியது.

கதவைப் பலப்படுத்துவதில் கவன மாயிருந்த சரீனா ஓடி வந்து குழந்தையைத் தூக்கி அரவணைத்த அதே நேரம் கதவு மீண்டும் தடதடத்தது.

ஆனால் இம்முறை காற்றினால் ஏற்பட்ட தள்ளலாக இல்லாமல் யாரோ கதவைப் பலமாகப் பிடித்துத் தள்ளிய தாகவே சரீனாவுக்குத் தோன்றியது.

அந்தக் குளிரான வேளையிலும் சரீனாவுக்கு சில்லென்று வியர்த்தது.

''யாரது?'' என்று குரல் கொடுத்த சரீனாவுக்கு பதிலெதுவும் வெளியிலிருந்து வரவில்லை.

சொற்ப நேர அமைதிக்குப் பின் மீண்டும் கதவு தள்ளப்பட, குழந்தையை அணைத்துக்கொண்டே எழுந்தவாறு அதட்டும் தொனியில், ''யாரு கதவத் தள்ளுற?'' என்ற குரலை உயர்த்திக் கேட்ட பின்தான், ''நான்தான்'' என்று தணிந்த குரலில் பதில் வந்தது.

''நான்தானிண்டா யாரு?'' ''நான் தான் கனிபா வந்திரிக்கன் சத்தம் போடாமக் கதவத் துற'' என்ற பதிலைக் கேட்டதும் நிலை குலைந்து போன சரீனா தன்னைச் சுதாரித்துக் கொண்டே, ''இந் நேரம் எதுக்காக நானா வந்தீங்க, என்ன விசயமென்டாலும் காலைல வாங்க. இப்ப தொல்லப் படுத்தாமப் போங்க. ஒங்கட உடன் பிறப்பா நெனச்சிக் கேக்கன், ஆண்டவனுக்காக வேண்டிப் போங்க''. அழு குரலில் சரீனா கூறி முடிக்கவும், ''சரீனா நான் ஒன்னச் சந்திக்கத் தான் இந்த மழையிலயும் காத்துலயும் வந்த. உள்ளுக்கு வாங்கண்டு ஒருவார்த்தசொல்லாம, யாரோ ஊரானத் திரத்துறாப்போல என்னையும் திரத்துறியே கதவத் துற''.

''நீங்க இப்ப போகல்லண்டா நானும் புள்ளயும் குப்பி விளக்க ஊத்திக்கிட்டு பத்தவெச்சிக்கிட்டு செத்துப் போவம்''.

''சேச்சே அப்பிடி மடத்தனமான காரியமெல்லாம் செஞ்சி போட்றாத. செரி நானிப்ப போறன். ஆறுதலா இருந்து யோசிச்சிப் பாரு. இந்த நெலமயிலே என்ன உட்டா ஒனக்கு யாரு இரிக்கா. அத உணந்துக்க நான் நாள இரவைக்கு வாறன்''. அந்தக் குரலில் மது போதையின் வீச்சை உணரக் கூடியதாக இருந்தது.

கனிபா இரண்டு குழந்தைகளின் தந்தை. மனைவியை வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டு, வரும் பணத்தை மதுவுக்கும் மாதுவுக்குமாகச் செலவழிப்பதும், நிரந்தரத் தொழிலேதுமில்லாத கட்டாக் காலியாய் ஊரைச் சுற்றுவதும் தான் அவனது வேலை. தனது கணவனின் நண்பன் என்ற காரணத்தினால் தான் அறிமுக மானவன்.

''ஆண்டவனே மேலும் மேலும் ஏன் இப்பிடிபோட்டு என்னச் சோதிக்கா.நான் அப்பிடியென்ன பாவம் செஞ்சன்''.

சரீனாவின் விழிகளில் கண்ணீர் ஆறாகப் பொங்கியது. வெளியே மழை இன்னும் வேகம் கூடியது.

இளமையில் செல்வச் செழிப்பில் சிட்டுக் குருவியாய்ப் பறந்து திரிந்த சரீனா இன்று யாருமற்ற அநாதையாய் உணவின்றித் தங்க இடமின்றி, அனுசரிப் பார் யாருமின்றி வாழும் இன்றைய நிலையை எண்ணிப் பார்த்தாள். தான் எப்போதோ இறந்திருக்க வேண்டும். ஆனால் விதி விடவில்லை. இன்று அவளை நம்பிவாழும் இந்தச் சின்னஞ்சிறு மழலைக்காக வாழவேண்டியுள்ளது.

கடற்கரையை அண்டியதான அவளது அழகிய கிராமம் எந்த நேரமும் கரையைத் தழுவும் அலைகளின் தாலாட்டில் வளர்ந்தவள். அவளது தந்தையார் மிகவும் பிரபலமிக்க மீனவர். பல படகுகளுக்குச் சொந்தக்காரர். அப்படிப்பட்ட குடும்பத்தில் ஒரேயொரு மகளான படியால் சரீனாவுக்கு எந்தக் குறையுமில்லை. எதுவும் கேட்டவுடன் கிடைக்கும் அப்படிப்பட்ட செல்வ மகளாய் வாழ்ந்தவள். அவளது வயதை ஒத்த பெண்கள் அவளைப் பார்த்து பொறாமைப்படுமளவுக்கு நேரத்துக்கு ஒரு ஆடை, நாளுக்கு ஒரு நகையென்று அலங்கரித்துக் கொண்டு வலம் வருவாள். யார் கண் பட்டதோ அல்லது விதியின் விளையாட்டோ?

அன்று ஒரு நாள் தனது நண்பியின் அழைப்பையேற்று அவர்களது வீட்டில் நடந்த வைபவமொன்றில் கலந்து கொள்ளச் சென்றிருந்த வேளைதான் அந்தத் துயரப் பேரலை எழுந்தது. செய்தி காட்டுத் தீயாய்ப் பரவியது. சுனாமியென்ற ஆழிப் பேரலை அனர்த்தமேற்பட்டது. அதனால் பல்லாயிரம் மனித உயிர்கள் பலிகொள்ளப்பட்டதாகவும், கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிந்த தாகவும் செய்தி கேட்ட சரீனா ஆறாத் துயரில் அழுது புரண்டாள். தனது அன்புத் தாய் தந்தைக்கும் உறவுகளுக்கும் என்ன நடந்ததோ? என்றறியாத நிலையில் தனது நண்பியின் உறவினர் சிலரது துணையோடு சென்று பார்த்த போது, தனது அழகிய கிராமம் முற்றாக அழிந்திருப்பதையும் பார்க்கு மிடமெல்லாம் இறந்தவர்களின் சடலங்கள் காணப்படுவதையும் தனது வீடு இருந்த இடம் அடையாளம் காண முடியாத படி ஒரு மணல் மேடாக இருப்பதையும் கண்ட சரீனா தலையிலடித்துக் கதறினாள். ''நான் மட்டும் ஏன் உயிர் பிழைத்தேன். எனது உறவுகளில்லாத போது நான் மட்டும் வாழ்வதா?'' எனக்கதறியபடி கடலை நோக்கி வேகமாக ஓடினாள். ஆனாலும் அவளுடன் வந்தவர்கள் பிடித்துத் தேற்றி ஆறுதல் கூறி, மீண்டும் வலுக்கட்டாயமாக நண்பியின் வீட்டுக்கே அழைத்துச் சென்றார்கள்.

பல நாட்களாக சரீனா உணவின்றித் தூக்கமின்றி அழுதழுது மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுத் தேறியவளாக மீண்டும் நண்பியின் வீடே தஞ்சமானது.

என்ன செய்வதென்றறியாத நிலை யில் சரீனா பைத்தியம் பிடித்தவள் போலக் காணப்பட்டாள். நீண்ட நாட்களாகியும் சரீனாவின் நடவடிக்கையில் மாற்றமில்லாததைக் கண்ட சிலர் பல்வேறு ஆலோசனைகளையும் கூறினர்.

அதிலொன்றுதான் சரீனாவுக்குத் திருமணம் முடித்து வைப்பது. அதன் மூலம் மனநிலையில் மாற்றத்தைக் கொண்டு

வரலாமென்பது... அதன்படி நண்பியின் சகோதரனையே திருமணம் முடித்து வைத்து விட்டார்கள். இதில் சரீனாவுக்கு கடுகளவும் சம்மதமில்லை. ஆனாலும் வலுக்கட்டாயமாகதிருமணம்நடந்தேறியது.

தனது திருமணம் எப்படி ஊரே பேசும்படி கோலாகலமாகச் செய்யப்பட வேண்டுமென தாய் தந்தை எவ்வளவு திட்டங்கள் போட்டு வைத்திருந்தார்கள். கற்பனைக் கோட்டைகள் கட்டியிருந்தார் கள். அவையெல்லாம் தவிடுபொடியாகி இன்று நினையாப் பிரகாரமாய் இப்படி யோர் திருமணம் என்பது சரீனாவைப் பொறுத்தவரை நரகத்தில் பிடித்துத் தள்ளி யது போலவே இருந்தது.

தனக்கு மாலையிட்டவனோ உலகி லுள்ள அநேக தீய பழக்கங்களுக்கு அடிமையானவன் என்பதை மிகக் குறுகிய நாட்களுக்குள் சரீனாவால் அறிந்து கொள்ள முடிந்தது. அதனால்தானோ என்னவோ இவ்வயது வரை அவனை யாரும் தேடவில்லை.

சரீனாவுக்கு சட்டியிலிருந்து அடுப் புக்குள் வீழ்ந்ததைப் போல சோதனை களும் துயரங்களும் மாறிமாறி ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. திருமணம் முடித்த சில நாட்களுக்குள் வீட்டில் பிரச்சினை ஏற்பட்டன. சரீனாவின் கணவனுக்கு நாளாந்தம் புகைக்கும் போதைக்கும் பணம் தேவைப்பட்டது.

வருமானமில்லாத செலவினால் காதில், கழுத்தில் இறுதியில் மிஞ்சியிருந்த நகைகளும் விற்றுத் தீர்ந்தாகி விட்டது. இறுதியில் வீட்டை விட்டு இருவரும் வெளியாக வேண்டிய சூழ்நிலை. வயிற்றி லும் கருவொன்று உருவாகி விட்டது. தூரத்திலுள்ள நண்பன் கனிபா உதவி செய்வானென்றநம்பிக்கையோடுசரீனாவை அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

போதைப்பொருள் வைத்திருந்த காரணத்தினால் பிடிபட்டு சிறையிலிருக் கும் போது பழக்கமானவன் தான் கனிபா. சரீனாவையும் கணவனையும் கண்டவுடன் வரவேற்று உபசரித்தான். தனக்குச் சொந்தமான தகரக் கொட்டிலொன்றை அவர்கள் தங்குவதற்காக வேண்டி துப்பரவு செய்துகொடுத்தான்.

ஆனால் எவ்வித அடிப்படை வசதி களோ மின்சாரமோ இல்லாத அவ்விடத் தில் வாழ்வதென்பது செல்வச் செழிப்பில் வாழ்ந்த சரீனாவுக்கு நரக வேதனையாக இருந்தது.

கர்ப்பிணிப் பெண் தண்ணீரெடுக்க நீண்டதூரம் செல்ல வேண்டும். விறகு தேட வேண்டும். எல்லாமே தனது கையால்தான் ஆக வேண்டும் என்ற நிலை சரீனாவுக்கு. கூப்பிடு தொலைவில் ஒரு குடிசை, அதில் வயதான ஒரு பெண் பாத்திமா தனது பார்வையற்ற கணவனுடன் வாழ்ந்து வந்தார். அவர்தான் சில நேரங்களில் பேச்சுத் துணை.

காலையில் நண்பன் கனிபாவுடன் புறப்பட்டுச் செல்லும் கணவன் மாலையில் மது போதையுடன் தான் வீட்டுக்கு வருவான். நாளாந்தம் உழைக்கும் பணம் அவனது செலவுக்கே போதவில்லை. சரீனாவுக்கு என்ன செய்வதென்று தெரியாத நிலை. அக்கம் பக்கத்தில் உதவி செய்வதற்கு யாருமில்லை.

அந்தப்பின்தங்கியகிராமத்திலிருந்த ஒரேயொரு கடை முஸ்தபா மாமாவுடைய கடைதான். அங்குதான் சரீனா தேவை யானவற்றை வாங்கிக் கொள்வாள். தனிக்கட்டை, வயதானாலும் அன்பான நல்ல இறைபக்தியுள்ள மனிதர். சரீனாவை எப்போதும் சாமான் இல்லையென்று வெறுங்கையோடு அனுப்பியதில்லை. இந்த இடத்தில் இப்படிப்பட்ட நல்ல மனிதனின் உதவி கிடைக்க கிருபை செய்த இறைவனைத் துதித்துக் கொள்வாள் சரீனா.

நாட்கள் பறந்தன சரீனாவும் ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாகி விட்டாள். இப்போது தனக்கு இருக்கும் துணையும் ஆறுதலும் தனது மகன் மட்டும் தான். தனது மகனை முத்தமிடும் போது தன்னைப் பிடித்த துயரங்கள் சற்றுத் தொலைவுக்குச் செல்வதான உணர்வு அவளுக்கு.

இந்தக் கிராமத்திற்கு வந்ததிலி ருந்து தான் அனுபவித்து வரும் நரக வேதனையான வாழ்க்கைக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டு வரும்

வேளையில் தான் ஒரு நாள் மீண்டும் ஒரு பேரிடியேற்பட்டது.

காட்டில் மரம் வெட்டும் வேலையில் ஈடுபட்டிருந்த தன் கணவன் அடிபட்டு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் நாளைக் காலையில வைத்தியசாலைக்குச் செல்வ தற்கு ஆயத்தமாயிருக்குமாறும் கூறி, சில நூறு ரூபாய்த் தாள்களை சரீனாவின் கையில் கொடுத்து விட்டு கனிபா சென்றதிலிருந்து அழுது கொண்டிருந்த சரீனாவுக்கு பாத்திமா எவ்வளவோ ஆறுதல் சொல்லிப் பார்த்தும் அவளால் துயரத்தை அடக்க முடியவில்லை. «நல்லதோ கெட்டதோ எனக்காக இருந்த ஒரு சீவன் என்னாச்சோ, ஏதாச்சோ ஆண்டவனே என்ட புருசனக் காப்பாத்து» என்று புலம்பினாள். அதிகாலையிலேயே வைத்தியசாலையை அடைந்த சரீனா தோளில் தனது மகனையும் சுமந்தவளாக தனது கணவன் அனுமதிக்கப்பட்டிருந்த கட்டிலுக்குச் சென்ற போது அது வெறுமையாகவே இருந்தது.

பதற்றத்துடன் பக்கத்தில் நின்ற தாதியிடம் சரீனா விசாரித்த போது, அதிகாலையில்உயிர்பிரிந்ததாகவும்சடலம் சவச்சாலைக்குச் சென்றுவிட்டதாகவும் தகவல் கிடைத்தது.

இதைக் கேட்ட சரீனாவுக்கு அந்தப் பாரிய கட்டடமே இடிந்து தலையில் வீழ்ந்தது போன்றிருந்தது. நேற்றுக் காலையில் தனது கணவன் வேலைக்குச் செல்லுமுன் தனது மகனை மாறிமாறி முத்தமிட்டதும் வழக்கத்திற்கு மாறாகத் தனது நெற்றியில் முத்தமிட்டதும் இறுதியாகப் பெற்ற பிரியாவிடை தானோ என இப்போது எண்ணித் துடித்தாள். கணவனை பார்க்கலா மென்று ஓடி வந்தவள் கணவன் உயிர் பிரிந்த கட்டிலிலேயே விழுந்து அழுதாள்.

பலர் கூடிய இடத்தில் நான் இப்படி நடந்து கொள்கிறேனே என்ற சிந்தனை சிறிதுமின்றி தீயிலிட்ட புழுவாய்த் துடித்தாள். கனிபா எவ்வளவோ ஆறுதல் கூறிப் பார்த்தும் அடங்காத சரீனா ‘‘நீதாண்டாபாவி என்டபுருசனக்கொண்ட’’ என்று கனிபாவின் மீது ஆக்ரோசமாகப் பாய்ந்து மார்பின் மீது அடித்தாள்.

முற்றுப் பெற்ற கரிசனை

மனம் திறந்த அவர்கள் பேச்சில்
இலகுவாகி விடுகிறது மனது
கண்களை கலங்க வைக்கிறது
அவர்கள் கரிசனை
புன்னகையை பரிசளிக்க வைக்கிறது
அவர்கள் விழிகள்
கண்ணீரை துடைக்க வருகிறது
அவர்கள் கரங்கள்
அமைதியை அள்ளித் தருகிறது
அவர்கள் பக்குவம்.

இதற்குள் சிக்குண்டு போய்
இத்தனை நாள் எங்கிருந்தீர்கள்
என அவர்களிடம்
கேட்கத் தோன்றும் ஒரு நொடியில்
கொட்டித் தீர்ந்த மழைத்துளியென
அவர்கள் விலகிச் சென்று
வெகு நேரமாகியிருக்கையில்

எப்போதும் ஏன்
ஒரே மாதிரியாக
அவர்களில்லை என்ற
அங்கலாய்ப்புகள் தான்
இன்று மொத்த சந்தோஷங்களையும்
திருடிச் சென்று விடுகின்றது
என்னைப் போன்றே பலருக்கும்..

- ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

ஓவியம் : ரஜினிகாந்தன்

இதைச் சற்றும் எதிர்பாராத கனிபா நிலைகுலைந்து விழுந்தான். சரீனாவுக்குத் தனது கணவனின் சடலத்தை கூடப் பார்க்கக் கிடைக்காத படி அங்கிருந்த காவலர்களால் அப்புறப்படுத்தப்பட்டாள்.

சரீனாவுக்கு இந்த உலகில் உறவுகளென்று யாருமில்லாத நிலையில் மீண்டும் தனது குழந்தையுடன் தான் வாழ்ந்த கிராமத்திற்கே நடைப் பிணமாய்த் திரும்பினாள்.

தனது கணவனின் உறவினர்களால் சடலம் எடுத்துச் செல்லப்பட்டதாக தகவல் கிடைத்தது. தனது கணவனின் முகத்தை யாவது ஒரு தரம் இறுதியாகக் காணக் கிடைக்கவில்லையென்ற துயரத்தை யும் மரணச் சடங்கைத் தனது இடத்தில் நடத்த முடியவில்லையே என்ற வேதனையையும் அடக்க முடியாத மனக் குமுறல்களையும் பாத்திமாவிடமே கொட்டித் தீர்த்தாள்.

''எல்லாமே விதிப்படி... நடந்தது நடந்துமுடிஞ்சி.இனிஇரிக்கிறதப்பாருமகள். புள்ளயும் பாலில்லாமக் கிடந்து துடிக்கான். யோசிச்சிக்கிட்டு இரிக்காம எழும்பு... எல்லாத்துக்கும் ஆண்டவனிருக்கான்'' என்று கூறிய பாத்திமா, சரீனாவுக்கான இத்தாக் கடமைக்குரிய ஏற்பாடுகளை இயலாத முதுமையிலும் ஒரு தாயாக நின்று அவசரமாகச் செய்து கொடுத்தார்.

கணவன் இறந்தால் முஸ்லிம் பெண்கள் கட்டாயம் நிறைவேற்ற வேண்டிய இத்தாக் கடமையை சரீனா முழுமையாக நிறைவேற்றினாள். அதற்கு பாத்திமா விடம் கனிபா வழங்கி வந்த பண உதவியும் பாத்திமாவின் அனுசரணையுமே இன்றி யமையாததாக அமைந்தன.

நான்கு மாதமும் பத்து நாளும் துரித வேகத்தில் கடந்தன. மீண்டும் வெளியுலகப் பிரச்சினைகளுள் சரீனா தள்ளப்பட்டாள். பொருளாதாரப் பிரச்சினை, பாதுகாப்பற்ற நிலை, எதிர்காலத்தை எப்படி எதிர்கொள்வ தென்று புரியாத தடுமாற்றம், தன்னைக் கொத்தும் கழுகாய் சுற்றி வட்டமிடும் கனிபாவின் அச்சுறுத்தல் இப்படிப்பல சக்கரங்களுக்குள் சிக்கிய கரும்பாய் சரீனா அல்லலுறுவதை பாத்திமாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றுக் கும் தீர்வாக பாத்திமா ஒரு ஆலோசனை வழங்கினார். ''மகள் சரீனா, நீ எத்தன நாளைக்கித்தான் இப்பிடிக் கிடந்து கஷ்டப்படப் போறா... உனக்கு யாரு இரிக்கா.

நானும் ஆயிரம் நோயோட கிடக்கன். நான் கண் மூடினா யாரு பாக்கிற. அதுதான் செல்லுறன். நீயொரு கலியாணம் முடி. அதுதான் எல்லாப் பிரச்சினைக்கும் ஒரே தீர்வு''.

«சும்மா போங்க மாமி... எனக்கு இனியென்ன கலியாணமும் காட்சியும். எல்லாம் முடிஞ்சி பெய்த்து. இனி என்ட புள்ளய நல்லா வளத்தெடுக்கிறதான் கடமை».

''சரீனா நான் சொல்லுறத்தக்

கேளு. நீ இப்பிடி தனியா இருந்தா, கனிபா போல ஆக்களிட்டருந்து தப்ப ஏலா. அது மட்டுமில்ல... உனக்கு வருமானம் ஒன்டுமில்ல. எப்படி வாழப்போற. அதுதான் அன்டக்கி என்னக் கூப்பிட்டு முஸ்தபா மாமா கதச்சவரு. விருப்ப மிண்டாச் சொல்லு. நான் போய்ச் சொல்லுறன்''.

பாத்திமாவின் ஆலோசனையைக் கேட்ட சரீனாவுக்கு ஆத்திரப்படுவதோ அல்லது ஆற அமர யோசித்து முடிவெடுப் பதோ என்று ஒன்றுமே தோன்றவில்லை.

''மாமி நீங்க செல்லுறது சரியா வருமா... அவரு எனக்கு தகப்பனுக்குப் பாக்கணும். அப்படி இருக்க இது சொரிப்பட்டு வருமா. அத உடுங்க ஆண்டவன் உட்ட வழி. நடக்கிறது நடக்கட்டும்'' என்று சரீனா தட்டிக் கழித்தே வந்தாள். ஆனால் ஒவ்வொரு இரவும் பயத்துடன் கழிக்க வேண்டிய இரவாக கனிபாவின் நெருக்கடி அதிகரித்துக் கொண்டிருந்தது.

அதே நேரம் முஸ்தபா மாமாவின் கடைக்கு பாக்கி அதிகரித்துக் கொண்டே இருந்தது. இவை எல்லாவற்றிற்கும் தீர்வு பாத்திமா மாமி கூறியபடி செய்வது தான் என்று சரீனா ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தாள்.

வெளியே மழை நின்று மிக அமைதியாக கிழக்கு வெளுத்தது. இரவு எதுவுமோ நடவாதது போல வானம் தெளிவாகப் பளிச்சென்றிருந்தது. இரவு முழுக்கத் தனது கடந்த காலத்தை பற்றிய சிந்தனையிலிருந்து சரீனா எழுந்து கதவைத் திறக்கவும் பாத்திமா மாமி ''சரீனா'' என்றழைத்த படி வரவும் சரியாக இருந்தது.

''ஒள்ளப்பம் தேயிலத் தூள் இருந்தாத் தாவன், தண்ணி போட்டன் தூளில்ல» என்று கூறிய படியே, «இது என்ன கதவடியில் ஒரு பார்சல் இரிக்கி''. குனிந்து தூக்கிய பாத்திமா மாமியை நிமிர்ந்து பார்த்த சரீனாவுக்கு விளங்கி விட்டது... இரவு கனிபா கொண்டு வந்த அன்பளிப்புப் பொதிதானது. அதை வெளியே காட்டாமல், «மாமி அத எந்த நாயின்டான தூக்கி வந்து போட்டிருக்கும். அதத் தூக்கி எறிஞ்சி போட்டு உள்ளுக்கு வாங்க ஒரு விசயம் சொல்லணும்»

''என்னடி மகளே காலங் காத்தாலே விசயம் கிசயம் இன்டு என்னவெல்லாம் செல்றா என்ன விசயம்?'' பாத்திமா மாமி கேள்விக்கணை தொடுத்தவாறே கதவடியிலிருந்த உரலில் உட்கார்ந்தார்.

''ஒன்டுமில்ல மாமி. நானும் ராவெல்லாம் இருந்து யோசிச்சிப் பாத்தன். இப்படியே இருந்து என்ட நிலம என்ன முடிவாகும். காணாததுக்கு ஒரு புள்ளக் குட்டியும் கிடக்கு. அதுதான் நீங்க எத்தினையோ தரம் சொல்லிருக்கீங்க. நானும் வாணா வாணான்டு தட்டிக் கழிச்சே வந்தன். ஆனா இப்ப பாத்தா நீங்க செல்றதுதான் செரி போல கிடக்கு... அதுதான் மாமி அவரு எப்பிடி?''

''என்ட ஆண்டவனே, இப்பண்டாலும் ஆண்டவன் ஒனக்கு நல்லறிவத் தந்தானே. முஸ்தபா மாமா தங்கமான மனிசன். பொஞ்சாதி காலஞ் சென்டதுக்குப் புறவு அவரு தனி மனிசனாத்தான் இரிக்காரு. வயசிதான் கூட ஆளப் பாத்தா இளந்தாரி போலதான் இரிக்காரு. நீதான் பாத்திருப்பியே நானா செல்லணும். பய பக்தியான மனிசன். ஒன்னையும் புள்ளையையும் நல்லா ஒரு குறையுமில்லாம வெச்சிருப் பாரு. இப்படிக் கிடந்து எவ்வளவு நாளக்கி கஷ்டப்படப் போறா. இனியெண்டாலும் நிம்மதியா வாழ்ற வழியப்பாரு».

பாத்திமா மாமியின் நீண்ட விளக் கத்தை மனதுக்குள் வாங்கிக் கொண்ட சரீனா, இனி தன்னால் துன்பங் களைத் தாங்க முடியாது என்ற விரக்தியின் உச்சத்தில் தனது பாதுகாப்புக் காகவும், மகனின் எதிர்காலத்துக்காகவுமான ஒரு தீர்க்கமான முடிவுடன்

''செரி மாமி. எனக்கு சம்மதமிண்டு அவருக்கிட்டச் செல்லி ஆக வேண்டியதப் பாக்கச் சொல்லுங்க'.

இந்த வார்த்தைக்காகவே காத்தி ருந்தது போல பாத்திமா மாமி ''இந்நா போறன் நீ வெளிக்கிடு''.

சரீனா மீண்டும் ஒரு புதிய வாழ்க்கையில் காலடி எடுத்து வைக்க ஆயத்தமானாள். ■

‘அடடா’

ஹைக்கூ கவிதைநூல்

மதிப்புரை

தமிழ்நெஞ்சம் அமின்

கவிஞரும் முனைவருமான இரா.முத்துப்பாண்டி எழுதிய நூல் ‘அடடா’. அதைப்பற்றிய குறிப்பொன்றில் அவர் சொல்வதாவது, ‘‘நான் எவ்வாறு நினைத்தேனோ அவ்வாறே எழுதினேன். நினைத்தபடியே நூலினைத் தந்திருக்கிறேன்”,

“அவரிடம் பேசும் போதெல்லாம், நான் சொல்லிய கவிதைகளுக்கெல்லாம் ஒவ்வொரு முறையும் அடடா, அடடா எனச் சொல்லிக்கொண்டு வந்தார். அதனாலேயே நூலுக்கு அடடா எனப் பெயரும் வைத்தேன்” என பெருமையாக சொல்லிக்கொள்கிறார் இந்நூலின் ஆசிரியர் முனைவர் இரா. முத்துப்பாண்டி அவர்கள்.

கவிதைகளை ரசித்து அந்த ‘அடடா’ வை அழகுறச் சொன்னவர் வேறு யாருமில்லை, நம் சித்திரக்கவியார் அமுதபாரதி அவர்கள் தான்.

எத்தனை பரந்த நெஞ்சம் தோழர் முனைவர் இரா.முத்துப்பாண்டி அவர்களுக்கு! இயற்கை, காதல், தத்துவம், அழகியல்... இப்படி எல்லாவற்றுக்கும் ஹைக்கூ வகைமையில் சென்ரியுதன்மையில் வெகு சிறப்பாகக் கவி படைத்துள்ளார்.

சுருங்கச்சொல்லி சிந்திக்க வைக்கும் வகையில் அமைவது ஹைக்கூவாகும். அந்தவகையில் ஜப்பானிய ஜென்கவிதை மரபைப் பின்பற்றி எழுத, நமது கவிஞருக்கு சொல்ல நினைத்ததை சிறப்பாகவே சொல்லும் திறமை வாய்த்திருக்கிறது. சுருங்கச் சொல்லி பளிச்சென விவரிக்கிறார். அடடா, அத்தனையும் அருமை என்று நமது சிந்தைக்குள்ளும் மின்னல் பளிச்சிடுகிறது.

தமிழன் தன்னை மறந்த நிலையில், தமிழையே தமிங்கிலத்தில் உரையாடும் நிலை மிகுந்துவிட்ட இக்காலத்தில்

'தாய்மொழியை
வெறுப்பதே இல்லை
பறவைகளும் விலங்குகளும்'

எனச்சொல்லி தமிழ் உணர்வை ஞாபகப் படுத்துவது சிறப்பு!

பொருளீட்டச் சென்ற குடும்பத் தலைவன் பெற்றோரை விட்டு, குடும்ப உறவுகளைப் பிரிந்து, வெளிநாட்டில் பணிபுரிந்து வாழ்வது நம்மக்களிடையே வாடிக்கையாகிவிட்ட நிலையில், பிள்ளை களின் உளக் குமுறலை....

'அப்பாவின் முத்தம்
அன்பிருந்தும் ஈரமில்லை
வெளிநாட்டில் அப்பா'

என்பதாகச் சொல்லி நம் விழிகளில் ஈரம் கசிய வைக்கிறார்.

இயற்கையை மறந்து, அதை அழித்து, தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொள்வதையும், 'நாம் ஆளத்தானே சொன்னோம், விற்கிறார்களே ' ... தனது ஆதங்கத்தைச வெளிப்படுத்தும் வரிகள் அவை. அவர் சாதி, மதம் வேண்டாமென்று சொல்லி சமூகச் சீர்திருத்தவாதியாகவும், ஏற்றத்தாழ்வுகள் எங்கும், எதிலும் இருக்கக் கூடாதென்று தெள்ளத் தெளிவாகச் சொல்கிறார்.

காதலைப் பாடாத கவிஞர்கள் இல்லை, இவரோ...

'காதல் கவிதை வேண்டாம்
காதலே
கவிதைதான்'

என்கிறார். அடடா! இதுதான் அழகியலோ?

எங்கும், எதிலும் போட்டி என்றா லும், குடும்பத்தில் போட்டிப் போட்டால் சண்டைத்தான் வரும். அதையே...

'கணவன் மனைவிக்குள் கடும்போட்டி
தோற்றுப் போனது
குடும்ப வாழ்க்கை'

என இல்லறம் தோல்வியுற்றுப் போகும் அவலத்தின் முக்கிய காரணத்தை நாடி பிடித்தறிந்து விளக்குகிறார்.

எத்தனையோ இயற்கை அழகை ரசித்த கவிஞர்...

'சேற்றில் குளித்தாலும்
என்ன ஒரு சிவப்பழகு
தாமரைப் பூ'

என ரசித்துப் பாடி, எம்மையும் ஈர்க்கிறார்.

'சிறுகச் சிறுகச் சேமித்து
புதிதாக வாங்கினாள்
அரிவாள் மனை'

'பணக்காரர்களுக்குப் பல பிணிகள்
ஏழைகளுக்கோ
பசிப்பிணி மட்டுமே'

'புத்தாடை வேண்டாம் அப்பா
ஊசி நூல் கொடு
பாவாடைத் தைக்க'

இப்படி வறுமையின் கொடுமையை இதைவிடச்சிறப்பாகவேறுஎவரால்சொல்ல முடியும். சிறுமியின் ஏழ்மை மனநிலையை சிறப்பாகச் சித்தரித் திருக்கிறார்.

'உலகில் ஆதரிப்போர்
எவருமின்றி அலைகிறது
அன்பு'

உண்மைதானே...இப்பொழுதெல்லாம்

உண்மையான அன்பானவர்களைக் காண முடியவில்லைத்தானே... அன்பு அனாதை யாகி விட்டது.

கடவுளே, கடவுளே என அடிக்கொரு தரம் சொல்பவனை நான் நம்புவதில்லை. அப்படி அடிக்கடிச் சொல்லி தனக்கு தெய்வ நம்பிக்கையுண்டு என நம்பவைத்து ஏதோ தவறிழைக்கப் போகிறான். நம்பிக்கைத் துரோகம் செய்யப் போகிறான் என நினைப்பதுண்டு, அதையே இக்கவிஞர் இப்படிச் சொல்கிறார்.

'நான் ஏமாற்றப் போகிறேன்
அடிக்கடிச் சொல்வேன்
கடவுளே'

'ஹெல்மெட் முகக்கவசம்
வசதியாக இருக்கிறது
மதுக்கடை செல்ல'

அடடா செய்யும் தவறுக்கு ஒரு முகமூடியாய் தலைக்கவசம்.

'பணமே இலக்கு
தேடி ஓடினேன்
தொலைந்து போனது வாழ்க்கை'

நடைமுறை வாழ்க்கையில் பணம் மட்டுமே வாழ்வதற்கு முக்கியம் என அலைபவர்கள் கடைசியில் தொலைப்பதென்னவோ அந்த வாழ்க்கையைத் தானே?

இன்னும், எத்தனையோ கவிதை களில் நமக்கெல்லாம் கற்றுத் தருகிறார். அத்தனையும் அழகு துயிலும் வண்ண ஹைக்கூ துளிகள்; இல்லையில்லை தூளிகள். அழகியலும் அறிவியலும் நூல் முழுவதும் பரவிக் கிடக்கின்றன. இவரின் ஹைக்கூ, எளிமையால் நெய்த ஏழு வண்ண வானவில். எழுத்துகளில் கோர்த்த இன்னிசைப் பாமாலை. படித்துப் பாருங்கள்! பரவச நிலை எய்தலாம். மூன்றடியில் முழு உலகையே படையலாக்கி வெற்றியை தமதாக்கிக் கொள்கிறார்.

அட்டைப்பட வடிவமைப்புச் சிறப்பு!

முனைவர் இரா. முத்துப்பாண்டி அவர்கள் இன்னும்பல மின்னும் நூல்களை தமிழுலகிற்குத் தந்து தமிழில் தடம் பதிக்க வேண்டுமென விரும்பி வாழ்த்துகிறேன்.

இவ்வழகிய நூலுக்கு அமுதபாரதி, கல்வியாளர் மு.இ.ஹுமாயூன் கபீர் இவர்களின் வாழ்த்துரை மணிமகுடமாகத் திகழ்கிறது

நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்!

160 பக்கங்கள்
130 இந்திய ரூபாய்

வெளியீடு

ஜீவா பதிப்பகம்
சென்னை 600 017

அலைபேசி
99520 79787

மின்னஞ்சல்
jeevapathippagam@gmail;com

ஓவியம் : ரஜினிகாந்தன்

ஹைகூ

1.
வீதியைப் பெருக்குபவளின் முகம்
பூக்களைத்தூவிக்கொண்டேயிருக்கின்றது
சரக்கொன்றை மரம் !

2.
நெல்லி மரக்கிளையில் அணில்
ஒவ்வொரு தடவையும் விழுந்தவாறு
துளித் துளியாய் சூரியன் !

3.
ஆலமர விழுதுகள் !
தழுவிக்கொள்ள யாருமில்லை
குரங்குகளின் இடப்பெயர்வுக்குப் பின் !

4.
தனிமையில் கல்லறை
வெள்ளை நிறம் தீட்டப்பட்டிருந்தது...
கோடைகாலத்து காக்கைகளினால்!

5.
அடை மழைக்குப் பின்
எச்சங்களைக் காணவில்லை
எல்லாம் விதைகளே !

6.
கோவில் வெளிப்புற சிலை
முணுமுணுத்துக்கொண்டே எழும்பும்
சாம்பல் நிறப் புறா !

7.
ஒன்பது பாத்திரங்கள் வையுங்கள்
ஒவ்வொன்றிலும் நிரம்பி வழியும்
நிலவும் ஒளியும் !

8.
முச்சந்தியில் நிற்கிறேன்
நான்காவது திசையில் இருக்கின்றது..
இளைப்பாறும் கிழவனின் கைத்தடி !

9.
முந்திரித் தோப்புக்குள் நுழைகிறேன்
ஏதோவொரு தேசத்தின் வரைபடமாக
வண்டு துளைத்த இலை!

10.
முதலையின் முதுகு
சஞ்சலமில்லாமல் ஓய்வெடுக்கிறது...
அதோ... காட்டுப் பறவை!

ஹைகூ

.1.
ஆகாயப் போக்குவரத்து
அதிக அச்சத்தைத் தருகிறது
விமான விபத்து

2.
ஏழையின் குடிசை
இரவில் அழகாகத் தெரிகிறது
வெண்ணிலா வெளிச்சம்

3.
பள்ளமும் மேடுமாய்
வளைந்து நெளிந்து செல்கிறது
வாழ்க்கைப் பாதை !

சரவணமுத்து தமிழேந்திரன்,
(விவேகவெளியான்)
கிழக்கு மாகாணம், இலங்கை.

நட்பு

விஜி ஆர் கிருஷ்ணா

ரோகினி அருணை தேடிக் கொண்டு வீட்டுக்கு வெளியே வந்தாள்

"அருண் விளையாண்டது போதும் கை, கால் கழுவிட்டு சாமி கும்பிட்டு படிக்கலாம் வா "

"அம்மா ஒரு பைவ் மினிட்ஸ் குமார் கூட விளையாடறேன் மா"

"ஓகே அஞ்சு நிமிசத்துல உள்ள வர என்று கண்டிப்போடு சொல்லி விட்டு ரோகினி உள்ளே செல்லவும், "டேய் அருண் நானும் உன்கூட படிக்க வரவா"

"ஓ, வாயேன்"

"இருடா அம்மா கிட்ட சொல்லிட்டு புக் எடுத்துட்டு வரேன்"

அருண் முதல் வகுப்பு, குமார் இரண்டாம் வகுப்பு, வேறு வேறு பள்ளியில் அருணிடம் பிஸ்கட், பழங்கள் சாப்பிட கொடுத்தாள் ரோகினி.

"அம்மா குமார் இங்க படிக்க வரான் அவனுக்கும் ஷேர் பண்ணவா" என்று அருண் தயங்கி, கேட்க, "ஓ அதுக்கென்ன, அவனுக்கும் கொண்டு வரேன். ஷேர் பண்ணி சாப்பிடுங்க" என்று ரோகினி சொல்லவும் அருணுக்கு மகிழ்ச்சி.

ஒரு வாரம் கழித்து ஞாயிறு அன்று குமார் வீட்டுக்கு போய் அவனை விளையாட அழைத்தான்.

விளையாட்டின் நடுவே "அருண் டேய் நான் தீபாவளி க்கு செவென்டீன் டிரஸ் எடுத்திருக்கேன், எங்க அப்பா வாங்கி தந்தாங்க" .

"என்னடா சொல்ற செவென்டீன் ட்ரெஸ்ஸா, டேய் பொய்தானே"

"நிஜமா தாண்டா, வா எங்க வீட்டுக்கு, நான் வேணா காட்டறேன்."

குமார் முகம் வாடி விட்டது, "டேய் நான் விளையாட்டு க்கு வரல" என்று சொல்லி விட்டு ஓடி விட்டான்.

குமார் வீட்டுக்கு போய் அழுதான்.

குமார் அம்மா சுதா "ஏண்டா அழுவுற"

"அப்பா இன்னும் தீபாவளி டிரஸ் வாங்கி தரல"

"அப்பா க்கு கம்பெனி ல இன்னும் சம்பளம் தரல டா"

"அருண் அப்பா மட்டும் அவனுக்கு பதினேழு டிரஸ் வாங்கி தந்துருக்கார்"

"சரிடா, வாங்குவோம்"

தீபாவளி க்கு ரெண்டு நாள் இருந்தது... அருண், மத்தாப்பு கொளுத்தி கொண்டே குமாரை அழைத்தான்.

குமார், "நான் இன்னும் டிரஸ் கூட எடுக்கல,நீவெடிஎல்லாம்கூடவாங்கிட்டியா?"

"ஆமாண்டா, வா நம்ம ஷேர் பண்ணி வெடிப்போம்"

தீபாவளி க்கு முதல் நாள் குமார் அழுகை குரல் அருண் வீட்டு வரை கேட்க, அருண் ஓடினான்.

"ஏண்டா அழுகுற"

"எனக்கு புது டிரஸ் இன்னும் எடுத்து தரல டா"

ஏண்டா

"எங்க அப்பா க்கு இன்னும் காசு கிடைக்கல டா"

"சரிடா, அழுவாத என்கிட்ட தான் நிறைய புது டிரஸ் இருக்கே நான் உனக்கு ஷேர் பண்றேன் ஓகே யா"

உடனே வீட்டுக்கு ஓடினான்

"அம்மா, அம்மா குமார் க்கு என் டிரஸ் ஷேர் பண்ணவா"

"ஏண்டா, அவங்க இன்னும் டிரஸ் எடுக்கல யா?"

"ஆமா, அவங்க அப்பா கிட்ட காசு இல்லை யாம் அதான்"

"சரிடா, நீயே கொண்டு போய் கொடு" அருண் ஓடி சென்று மூணு செட் டிரஸ் எடுத்து கொண்டு ஓடினான்

குமார் முகத்தில் அவ்வளவு மகிழ்ச்சி நட்புக்கு இலக்கணம், கொடுத்து மகிழ்வது..

பெற்றோரும் அந்த வழக்கத்தை குழந்தை களுக்கு சொல்லி கொடுத்து வளர்ப்பது சிறப்பு.

ரோகினி போல், அருண் போல் இருந்தால் உலகம் அழகாகும். ■

மறைக்காடு ஹைகூ

குளிர் இரவு
பிடித்த பாடலுக்கு தாளமிடுகின்றன
பற்கள்.
- மகிழ்நன் மறைக்காடு

பனிவிழுந்து நனைந்த
நிலமெங்கும் குளிர்ச்சி
மெல்ல நகரும் நத்தை
- கா.ந.கல்யாணசுந்தரம், சென்னை

கைப்பணி செய்யும் பெண்
காகிதத்தை மென்மேலும் மடிக்கிறாள்
விரிகிறது ஒரு பூ
- பஸ்லி ஹமீட், இலங்கை

சோறூட்டும் அன்னை
குறும்பு செய்யும் குழந்தை
ரசிக்கும் நிலவு
- மலரடியான், கள்ளக்குறிஞ்சி

காற்று வீசும் போதெல்லாம்
கூண்டிலிருந்து வெளியேறப் பார்க்கும்
சிறு இறகு
- ஜெம்சித் ஸமான், இலங்கை

ஓயாத மழை
வாய்ப்பிளந்து ரசித்தது
சாலை
- க.பழனிவேல்ராஜன்

இறந்த மைனா குருவியின்
பாதி திறந்த விழி நீரில்
வெளியேற பார்க்கிறது வானம்
- இரா. தயாளன், ஆரணி.

கயிற்றின் பிடி
விலகியதும் சுதந்திரமாய் சுற்றும்
பம்பரம்
- பொம்மிடி மோகன்தாஸ்

என்ன சொல்லியிருப்பான்
சாமக்கோடாங்கியின் பின்னே செல்கிறது
வாலாட்டியபடி தெருநாய்
- உறையூர் வா.மகேஷ்

கனமழைக்கு முன்
வேர் விடுகிறது
மின்னல்
- மணவை கார்னிகன்

தொகுப்பு : மகிழ்நன் மறைக்காடு

பெய்யும் மழை
தேங்கி நிற்கும்
நெகிழி குப்பைகள்

●

மரமேறும் குழந்தை
அச்சமாக இருக்கின்றது
மறையும் சூரியன்

●

வணிக வளாகம்
வியக்க வைக்கின்றது
சாலையோர வியாபாரம்

கடற்கரைச் சாலை
புத்துணர்வை தருகிறது
அதிகாலை நடைப்பயணம்

●

குழந்தையின் சிரிப்பு
சுத்தமாக காணாமல் போனது
கவலை

●

அடர்ந்த இருள்
வெளிச்சம் வெகுவாக ஈர்க்கிறது
மின்மினிப் பூச்சி

கலைவாணி சுரேஷ்பாபு
துபாய்

சந்தனாம்பேழை

தெளிவது நன்றே

நித்தம் புத்தொளி நிறைக்கும் எண்ணம்
சித்தம் தனிலே சிந்தை பெருக்கும்
புத்தம் புதிய பூவுல கொன்றைச்
சத்தம் இன்றிச் சமைத்திட வேண்டும்
வித்தை கலைகள் வியந்திடும் வாழ்வில்
மொத்த உறவும் முயலுதல் வேண்டும்
எத்திக் கிலுமோர் ஏற்றம் தெரியத்
தித்தித் திடுமொரு தெளிவாம் நன்றே.

இளவல் ஹரிஹரன் மதுரை

பெற்றோரைப் பேணுவோம்.

அன்னை தந்தையின் அடிகளைப் பணிந்தே
அன்னவர் நலங்களை அதிகம் பேணி
மண்ணில் நாமும் மாண்புறும் பணிகள்
எண்ணிச் செய்தால் ஏற்றமும் பெறலாம்
கண்ணென அவரைக் காத்துமே இருந்தால்
விண்ணோர் தாமெமை விரும்பிக் காப்பர்
தண்ணருள் தருவர் தாங்கிக் காப்பர்
கண்ணாய்க் காப்போம் காருண்யம் பேணுவோமே.

செல்வராஜா சுதாகரன்-
வயலூரான் இலங்கை

இங்கே எனது கவிதை

கவிதை எழுதக் கேட்டனர் என்னை;
புவியில் கற்பனைப் புரவியில் பறந்து
சென்றேன் நானும் செவித்தேன் தேடிக்
கண்டேன் எங்கும் கடல்போல் கவிதை
காற்றில் நிலவில் கானக் குயிலில்
ஆற்றில் வானில் அழகு மழலையில்
பெண்ணின் கண்ணில் பேசும் காதலில்
வண்ணத் தாளிலென் மரபுக் கவிதையே!

சீதா ஸ்ரீதர்

அன்பில் பூத்த மலரே

அன்பு மகளே அல்லி மலரே
என்னுள் எழுந்த எழுச்சிக் கவியே
என்னை உணர்த்த என்னுள் மலர்ந்து
கன்னல் பார்வையில் கரும்பாய் இனிப்பவளே
துள்ளியோடும் நதியாய் துள்ளி எழுந்தவளே
அள்ளி முடிந்தாய் அதீத அன்பில்
நேசம் கொண்டு நேசிக்கும் மகளேயுன்
பாசச் சிரிப்பில் பாரை மறப்பேனே!

ரா.ரேகா ராஜ்குமார்.

தேன்மலர் வண்டு!

தேன்நிறை வாசம் தென்றலில் மோதிட...
வான்நிறை வண்டுகள் மகிழ்ந்து வந்திடும்!
மண்ணின் உறவாம் வாச மலரினில்...
வண்டினம் கூட மகரந்தம் புணர்ந்திடும்!
விந்தைக் காதலில் வித்தைகள் புரிந்து...
செந்தேன் வியர்வையில் சேர்ந்து நனைந்து...
மயங்கிக் களிப்பது மலரோ! வண்டோ!
வியப்பிலே ஆழ்த்தும் மீளாக் காதலே!

செ.நிறைமதி மதுரை.

பொன்னியே வருவாய்

ஆர்த்தெழும் ஓசையால் அனைவரும் மகிழ
வார்ப்புகள் உடைக்கும் வலியநின் வேகம்
தண்ணீர் சுமந்து தாவிநீ வருவதைக்
கண்டே நாங்கள் களிப்புற் றிருப்போம்
சோலைகள் எல்லாம் சொர்க்கமாய் மிளிரும்
வேலைகள் பெருகி வேதனை தீர்க்கும்
புனலுரு வாகிப் பூரிப்பு பெருக
நனவிலும் வருவாய் நாளும் பொன்னியே!

குளோரிசக்தி
கரூர்.

தஞ்சைப் பெருவுடையார் கோயில்

ஆயிரம் அகவை அடைந்த அற்புதம்
கோயில் என்பதன் கோபுரத் தலைவன்
இராச ராசனின் இரசனை எல்லை
இராது மீண்டும் இப்படி ஒன்று
தஞ்சைத் தரணியில் தந்தான் கல்லில்
நெஞ்சை நிமிர்த்தி நெகிழ்வோம் என்றும்
காலம் கடந்து காவியம் போலவே
ஞாலம் வியக்க நலமுடன் வாழுமே

இரா.செல்வ பாண்டியன்.
புத்தாம்பூர்.

எண்ணத்தால் உயர்க!

உழுவரைத் தொழுதால் உயர்வு கூடும்
விழுதைப் பரப்பும் விந்தை நாடும்
அழுக்கு மனத்தை அடித்து விரட்டி
விழுந்த இடத்தில் வீரம் புகட்டுவாய்
எழுச்சி கொண்டு ஏற்றம் காண்பாய்
பழுதை நீக்கும் பண்பைப் பூண்பாய்
அழுத்த உணர்வால் ஆற்றல் பெருக
எழுதுவாய் சிறப்புசேர் எண்ணம் மிகுந்தே!

மு.வா.பாலாஜி ஓசூர்

மனவெளிப் பயணம்!

கவித்திலகம் வெற்றிப்பேரொளி

மனவெளி ...
ஒரு மாயக்காடு!
அதில்தான்
ஏராளமான நம்
எண்ண விலங்குகள்
புல் மேய்ந்து கொண்டுள்ளன.

மனவெளி ....
ஒரு கனவுலகம்
அதில்தான் பலரின்
'ஏ' கனவுகள்
ஏக்கக் கனவுகள்
கண்சிமிட்டிக் கொண்டுள்ளன.

மனவெளி ...
ஒரு கற்பனைக் குதிரை
நடக்க முடியாத நம் ஆசைகள்
அதில் ஏறித்தான்
பறந்து கொண்டிருக்கின்றன.

மனவெளி ....
ஓர் அதிசய வானம்
அதில்தான்
நம்பிக்கைச் சூரியன்கள்
பிரகாசித்துக் கொண்டுள்ளன.
நேச நிலாக்கள்
பால் வெளிச்சம்
பொழிந்து கொண்டிருக்கின்றன.

மனவெளி ...
ஒரு பெருங்கடல்
அதில்தான்
திசை தெரியாக் கப்பல்கள்
மிதந்து கொண்டிருக்கின்றன
நீலத் திமிங்கிலங்கள்
சின்ன மீன்களை வேட்டையாடி
விழுங்கிக் கொண்டிருக்கின்றன.

மனவெளி ...
ஒரு நாடக மேடை
அதில்தான்
நித்தநித்தமல்ல
நிமிடத்திற்கு நிமிடம்
அரங்கேறிக் கொண்டிருக்கின்றன
திகில் நாடகங்கள்
நகைச்சுவை நாடகங்கள்
சோக நாடகங்கள்
சில வேளைகளில்
மௌன நாடகங்கள்.

மனவெளி ...
தனிமனிதனின் தவமேடை
அது... நம்...
விருப்பங்களைச் சேமித்து வைக்கும் உண்டியல்
கண்ணுக்குத் தெரியாத
அரூபத் தோழமை
கண்டிப்புமிக்க கணக்கு வாத்தியார்
முடிவே இல்லாத' கன்னித்தீவு'
ஆயிரமாயிரம்
பூதங்கள் புறப்பட்டு வரும்
அலாவுதீனின் அற்புத விளக்கு!

யமுனா...!

மரீனா இல்யாஸ் ஷாபி
நியூ ஸிலாந்து

"உம்மா 'கரன்ட்' போயிட்டு... எனக்கு பயமாயிருக்கு, 'டார்ச்லைட்' கொண்டு வாங்க... ஒரே இருட்டா இருக்கு... உம்மா சுருக்க வாங்க..."

மகள் பாத்திமாவின் அலறல் என் நினைவுகளை கிள்ளி விட்டு சென்றது. மகளின் அறைக்குள் நுழைகிறேன். அவள் என் கழுத்தை கட்டிக் கொள்கிறாள்.

"உம்மா நான் தூங்குற வரைக்கும் பக்கத்திலேயே இருங்க... இருட்டுல எனக்குப் பயம்..." மகள் என் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு தூங்கி போனாள். என் மனம் விழித்துக்கொண்டு என்னைப் பின்னோக்கி அழைத்துச் சென்றது.

அப்போது நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தேன். என் அறைத் தோழிகள் இருவரும் அபூர்வமாகவே அங்கு தங்குவார்கள். அவர்கள் இருவரும் குடும்பச்சுமை காரணமாக உத்தியோகம் பார்த்துக்கொண்டே படித்தார்கள். இடைக் கிடை வந்து பாடக் குறிப்புகளை வாங்கிப் படிப்பார்கள்.

ஓவியம் : ரஜினிகாந்தன்

ஒருநாள் இரவு நேரம் நான் தனியாகப் படித்துக் கொண்டிருக்கும் போது மின்சாரத் தடை ஏற்பட்டது. நான் சூழ்நிலையை மறந்து வீறிட்டு விட்டு கத்தினேன். பக்கத்து அறையில் இருந்த சிங்கள மாணவி யமுனா தான் ஓடி வந்தார். "என்ன பிரச்சினை ?" என்று சிங்களத்தில் கேட்டுக்கொண்டே கதவை திறந்தார். அவர் கையில் ஒரு 'டார்ச்லைட்' இருந்தது.

வெலவெலத்துப் போன என் முகத்தை பார்த்துவிட்டு "இருட்டுக்கு பயமா? என்றார். ஆமாம் என்று தலையசைத்தேன். அவர் சிரித்துக் கொண்டே என்னை கட்டி அணைத்துக் கொண்டார். அன்று இரவு என் அறையிலேயே தங்கினார். யமுனாவுக்கும் எனக்கு மான நட்பில் ஒரு இறுக்கமான முடிச்சு விழுந்தது அன்றுதான்.

அன்றிலிருந்து என்னை முழுவது மாக அவதானிக்க தொடங்கினார். "பகல் என்ன சாப்பிட்டீர்கள்? என்று ஒருநாள் எதேச்சையாக கேட்டபோது நான் மாட்டிக் கொண்டேன். எங்கள் 'ஹாஸ்டலில்' இருந்த 'கேன்டீன்' சாப்பாடு எனக்கு பிடிக்கவே பிடிக்காது. அதை வாங்குவதற்கு வரிசையில் கால் கடுக்க நிற்பது அதைவிடப் பிடிக்காது. அதனால் 'பிஸ்கட்' சாப்பிட்டு விட்டு 'டீ' குடிப்பதை வழக்கமாக்கி இருந்தேன். அதைத் தெரிந்து கொண்டபோது யமுனா மிகவும் கவலைப் பட்டார்.

"கொஞ்சம் 'அட்ஜஸ்ட்' பண்ணி

போக முடியாதா... இப்படி பசியில் இருந்து உடம்பை கெடுத்துக் கொள்ளலாமா....?'' என்று கோபத்துடனும் கொஞ்சம் அதட்டலு டனும் கேட்டார். அன்று மாலை விரிவுரை முடிந்து வரும்போது எனக்கு ஒரு 'பார்சல்' கொண்டு வந்தார். ''சாப்பிடுங்க 'பபா'...'' என்று ஒரு தாயைப் போல் 'பார்சலை' திறந்து எனக்கு நீட்டினார். ''என்ன இது?'' நான் விளக்கம் கேட்டேன்.

''கண்டிக்குப் போனேன். உங்களுக் காக முஸ்லிம் ஹோட்டலில் சாப்பாடு வாங்கி வந்தேன்'' என்று சொல்லிவிட்டு ''இனி சாப்பிடுங்க'' என்று செல்லமாக அதட்டினார். என் கண்களில் துளிர்த்த கண் ணீர் துளி யை கஷ்டப் பட்டு மறைத்துக் கொண்டேன். எங்கள் நட்பு விருட்சமான பின்பு அவர் என்னை ''பபா...'' என்றுதான் அழைப்பார் . சிங்கள மொழியில் குழந்தைகளை மட்டுமல்ல, பிடித்துப் போன பெரியவர்களையும் இப்படி அழைப்பது வழக்கம். அவள் என்னை ''பபா'' என்று அழைப்பது எனக்கு மிகவும் பிடித்துப் போனது.

யமுனாவுக்கும்அவளதுஉறவுக்காரப் பையனான ஜகத் என்பவருக்கும் திருமணம் நிச்சயமாகி இருந்தது. யமுனா கலைப் பிரிவிலும், ஜகத் விஞ்ஞானப் பிரிவிலும் கற்று வந்தார்கள். விரிவுரை முடிந்த பின்பு இருவரும் அடிக்கடி கண்டிக்குப் போய் வருவார்கள். அப்போதெல்லாம் எனக்கு 'ஹலால்' சாப்பாடு வந்து சேரும். நான் ஊருக்குப் போகும் போதெல்லாம் உம்மாவிடம் யமுனாவைப் பற்றி சொல் வேன். உம்மாவும் விதம் விதமான உணவுப் பண்டங்களை யமுனாவுக்குப் பொதி செய்து தருவார். இப்படியே எங்கள் நட்பு வளர்ந்தது...

ஒரு நாள் பரீட்சைக்காக இரவு நீண்ட நேரம் கண்விழித்துப் படித்துவிட்டு தூங்கியதால் காலையில் 'சுபஹ்' தொழு கையை தவற விட்டு விட்டேன். அதற்காக யமுனா தான் என்னை விடவும் மிகவும் கவலைப்பட்டார். அன்றிலிருந்து தூங்கு வதற்கு முன்பு தொழுகைக்குரிய நேரத்தை 'கலண்டரில்' பார்த்துவிட்டு அவரே அலாரம் வைத்து விடுவார். அதையும் மீறி நான் தூங்கினால் என் போர்வையை விலக்கி விடுவார்.

ஒருநாள் இரவு நான் 'பாத்ரூம்' போய் இருந்த போது திடீரென்று மின்சாரம் தடைப்பட்டது. நான் பயத்தில் வீறிட்டுக் கத்தினேன். « இதோ நான் வந்துட்டேன் பபா...» என்று சத்தமாக கூவிக்கொண்டே யமுனா ஓடி வந்து பாத்ரூம் வாசலில் நின்று கொண்டார். மறுநாள் இந்தச் செய்தி விடுதி முழுவதும் பரவி எல்லோரும் என்னைக் கலாய்த்தார்கள். அந்தச் சம்பவத்தை இப்போது நினைத்தாலும் சிரிப்பு வரும்...

தடைப்பட்டிருந்த மின்சாரம் மீண்டும் வந்து மின் விளக்கு எரியத் துவங்கியது. மகள் மீண்டும் விழித்துக் கொண்டு என் முகத்தைப் பார்க்கிறார். என் முகத்தில் தெரிந்த புன்னகைக்கு காரணம் தெரிந் திருந்தது அவளுக்கு. ''உம்மா... யமுனா 'ஆண்ட்டி'யப் பத்திதானே நினைச்சிட்டு இருந்தீங்க...?''

மகள் கேட்டபோது நான் ஆச்சரியப் படவில்லை. ஏனெனில் நான் யமுனாவைப் பற்றி அடிக்கடி கணவரிடமும் பிள்ளை களிடமும் சொல்லுவேன். என் பிள்ளைகள் எல்லோரும் அவளை 'ஆண்ட்டி' என்று தான் அழைப்பார்கள். இத்தனைக்கும் அவர்கள் ஒருதடவை கூட யமுனாவை நேரில் பார்த்ததில்லை.

பல்கலைக்கழக வாழ்வு முடிந்த பிறகு யமுனாவை ஒரு தடவை கூட நான் சந்திக்கவே இல்லை. அவள் எங்கிருக்கிறாள், என்ன செய்கிறாள்... என்று எதுவுமே தெரியாது . அவள் எங்கே வாழ்ந்தாலும் மனிதத்தை வாழ வைத்துக் கொண்டு இருப்பாள் என்று எனக்குத் தெரியும். ஒருநாள் என் சந்ததிகளும் அவளது சந்ததிகளும் சந்தித்துக் கொள் வார்கள். இனம், மதம், மொழி கடந்த ஒரு நட்பில் அவர்கள் கைகுலுக்கிக் கொள்வார் கள். அப்போது மனிதம் பூத்துக் குலுங்கும் ஒரு பூந்தோட்டம் உருவாகும்...

எதிர்காலத்தைப் பற்றிய இனிய கற்பனைகளுடன் நான் தூங்கச் செல்கி றேன். ''பபா...!'' யமுனா என் கனவில் வந்து கைகுலுக்கி விட்டுச் செல்கிறாள்...

■

நமக்கான கவிதை

1.
நாடளாவிய ஏலத்தில்
நல்லவிலை போனார்.
படித்த மணாளர்
வரதட்சணை சந்தையில்.

2.
செல்வோம் செல்வோம்
எனக் கை காட்டுகிறது.
எம் கைகளை விட்டும்
செல்கின்ற செல்வம்.

3.
பரந்த வானத்தை
வரிவரியாக கீறுகின்றது.
தலை சாயும்
தென்னம் ஓலைகள்.

4.
மல்லிகை வாடை
அடர்ந்து கமழ்ந்தது.
ஞாபகம் வருகிறது
உன் அண்மை.

5.
இருந்தும் இல்லாதது போல்
இறக்கைகள் விரிக்கிறாய்.
கண்ணின் மணியாய்
இதயத்தில் நீ.

6.
கனதியாய்க் கதைகள்
பேசும் கண்கள்.
எப்போது திறப்புவிழா?.
இதயத்தின் மௌனத்திற்கு.

7.
என் பெயரை அழித்து
உன் பெயர் எழுதுகிறாய்.
என் இதய நாளேட்டில்
ஒவ்வொரு நாளும்.

8.
முத்தாய்ப்பா, காற்புள்ளியா
முடிவில்லா தொடரும் படலம்.
ஆயிரம் கேள்விக்குறிகள்
முதிர்கன்னி முகத்தில்.

9.
உன் நினைவுகளோடு
உறங்கச் சென்றேன்.
விழித்துக் கொண்டது
என் தூக்கம்.

10.
கோர தாண்டவம் ஆடியே
கொன்று போட்டு விட்டது.
கோடி கோடி மக்களை
கொரோனா என்ற வைரசு.

11.
பெரிதாய்க் காத்திருக்கிறது
இறுகிய என்னுள்ளம்.
உன் சின்னஞ்சிறு
அன்பான புன்னகைக்கு.

12.
உன் நினைவுகளோடு,
என் உணர்வுகளைக் கலந்தேன்.
உருவாகின புதிதாக
நமக்கான கவிதைகள்..

Dr. ஜலீலா முஸம்மில்
ஏறாவூர். இலங்கை

பேருந்து பயணங்கள்

பாலகுமரன் பரிதி

மன்னார்குடி

பேருந்து பயணங்கள் எனக்கு அலாதியான சுகம் தரும் ஒன்று. சிறுவயதில் பள்ளிப்படிப்பு உள்ளூரில் அமைந்ததால் பேருந்து பயணம் என்பது அரிதானது.

அம்மாவின் ஊருக்கு செல்லும் போது நாலாம் நம்பர் பஸ்ஸில் பயணிப் போம். மன்னார்குடியிலிருந்து அதிகபட்சம் அரைமணி நேரம் பயணம் தான் அதை முழுமையாக அனுபவிக்க எண்ணுவேன்.

ஓட்டுனர் இருக்கை அருகே அமர்ந்து கொண்டு எதிரே வரும் வாகனங் களையும் மக்களையும் பார்ப்பது குஷியாக இருக்கும். பேருந்தை எதிரே கடந்து செல்லும் வாகனங்களை எழுந்து நின்று பின்புற கண்ணாடி வழியாக பார்ப்பேன் என்னை போல அவர்கள் திரும்பிப் பார்ப்பார்கள் என நினைப்பேன். ஒரு போதும் யாரும் திரும்பிப் பார்த்ததே இல்லை.

வலது பக்கம் திரும்பி வயலில் பறந்தோடும் கொக்குகளை ரசிப்பேன். இடதுபுறம் திரும்பி தூரத்தில் தெரியும் செங்கமலத்தாயார் கல்லூரியை ஆச்சர்ய மாக பார்ப்பேன். போர் செட்டில் குளிக்கும் சிறுவர்களுக்கு கை காட்டுவேன்.

அந்த அரைமணி நேர பயணம் எனக்கு ஆகாயத்தில் பறப்பதுபோல் இருக் கும். இறங்குமிடம் வந்துவிடும் என்னை அனாதையாக விட்டு பேருந்து முன் செல்லும். ஏதோ ஒன்றை இழந்ததுபோல் மனம் பரிதவிக்கும்.

சில நாட்களில் தஞ்சாவூர் திருவாரூர் பேருந்து பயணம் என்றால் முதல் நாள் இரவு முழுவதும் கனவில் பயணித்துக் கொண்டே இருப்பேன்.

ஒருமுறை அப்பாவின் மாமா ஒருவர் சென்னையில் தவறிப்போனார். அப்போது

நான் அப்பா அம்மா மூவரும் பேருந்தில் சென்னை சென்றோம். அதுதான் எனக்கு முதல் நீண்ட தூர பேருந்து பயணம்.

இரண்டு பேர் அமரும் சீட்டு எனக்கு டிக்கெட் இல்லை. நீண்ட நேரம் அப்பா என்னை வேடிக்கை பார்க்க விடவில்லை அரைமணிக்கு ஒரு முறை ''படுடா படுடா'' என்பார். அம்மா மடியில் தலையை வைத்து அப்பாவின் மேல் கால் வைத்து படுத்து தூங்கி போனேன். பேருந்து சென்னைக்குள் நுழைந்தது. முதல்முறையாக சென்னையை பார்க்கி றேன் மிரட்சியாக இருந்தது.

பள்ளி முடிந்து கல்லூரி செல்வதற்கு அப்பா சொன்னார், ''பூண்டி கல்லூரிக்கு அப்ளை பண்றா''

அந்த கல்லூரி எந்த திசையில் இருக்கிறது என்று கூட எனக்கு தெரியாது. அப்பாவை கூப்பிட்டேன்,

''நீ என்ன சின்ன புள்ளையா தனியா போடா'' என்றார்.

நீடாமங்கலம் சென்று அங்கிருந்து வேறு பேருந்து மாறி தஞ்சை நோக்கி பயணித்தால் பூண்டி கல்லூரியை அடையலாம். நான் நீடாமங்கலம் சென்று ரயில்வே ஸ்டேஷன் அருகே இறங்கி கும்பகோணம் செல்லும் பேருந்து வரும் இடத்தில் காத்திருந்தேன். அப்போது அருகிலிருந்தவர் கேட்டார்,

''எங்கதம்பி காலேஜ் போறீங்களா?''

''ஆமாம் பூண்டி காலேஜ் போறேன்''

''அதுக்கு அந்த பக்கம் பஸ் வரும்'' என்றார்.

நல்லவேளை சொன்னார் என நினைத்துக்கொண்டு தஞ்சை பேருந்தில் ஏறினேன். வியப்பாக இருந்தது தினமும் இவ்வளவு தூரம் பேருந்து பயணமா என சந்தோசமாகவும் இருந்தது.

கல்லூரிக்கு செல்வதற்கு கல்லூரி பேருந்து வசதி இருந்தது. மன்னார்குடியில் இருந்து காலை 6 மணிக்கு புறப்படும் ஐந்து மணிக்கே எழுந்து கிளம்பி தோசை சாப்பிட்டு விட்டு வேகமாக ஓட வேண்டும்.

பேருந்து வந்த உடனே மாணவர்கள் அடித்துக்கொண்டு ஏறுவார்கள் சில நேரங்களில் இடம் கிடைக்கும் பல நேரங் களில் நின்றபடியே பயணம். கல்லூரிப் பேருந்து என்பதால் வழியெங் கிலும் ஸ்டாப்பிங் தான். ஆனால் சினிமா பாடல் ஓடும் கேட்டுக்கொண்டே வேடிக்கை பார்த்துக்கொண்டு செல்லலாம்.

நீடாமங்கலம் என்றால் வேளாண்மை அலுவலகம், அம்மாபேட்டை என்றால் தியேட்டர், நடுவில் ஒரு அங்காள பரமேஸ்வரி ஆலயம், பூண்டியை நெருங்கி னால் ஆற்றங்கரையில் ஒரு மடம் தினமும் இவை அனைத்தையும் பார்க்காமல் கல்லூரிக்கு செல்ல மாட்டேன். மதியம் கல்லூரி விட்டவுடன் வேகமாக வந்து பேருந்தில் ஏறி இடம் கிடைத்து விட்டால் தூக்கம்தான்.

கல்லூரி பேருந்து பயணங்களில் மகிழ்ச்சியாய் பாடல் கேட்கலாம் வேடிக்கை பார்க்கலாம் ஆனால் சுவாரஸ் யமாக இருக்காது.

பொது போக்குவரத்தில் செல்லும் போது ஒவ்வொரு மக்களின் உரையாடல், அவர்களிடையே எழும் சிறு சிறு சண்டைகள், கண்டக்டரின் அதட்டல் என பேருந்தே களைக்கட்டும்.

''யோவ் அந்தப் பாட்டு கருமத்த நிறுத்தி தொலையா''

''ஏன் எங்க ஊர்ல பஸ் நிக்காதா?''

''PP-னா பாலம் கட்டி மேல போக வேண்டியதுதானே எங்க ஊர் ரோட்ல யான் போற''

திடீர் திடீரென பேருந்துகளில் போராளிகள் முளைப்பார்கள் அடுத்த நிறுத்தத்தில் இறங்கிவிடுவார்கள்.

''யோவ் மூட்டை எல்லாம் வண்டி யில ஏத்தாதையா''

''லேடிஸ்க்கு இடமிட்டு மாறி உட்காருங்கயா''

''நான் என்ன பேங்கா நடத்துறன் சில்லறை கொண்டு வரத்துக்கு'' என சில கண்டக்டர்கள் சினிமா டைரக்டர்களை விட கோபக்காரர்களாக இருப்பார்கள்.

ஆசிரியர் தகுதித்தேர்வு பயிற்சிக் காக தினமும் திருச்சி பயணம். மன்னார் குடியிலிருந்து குறைந்தது இரண்டரை மணி நேரம் நாளொன்றுக்கு 5 மணி நேர பயணம். செல்போன் கையில் வந்துவிட்டதால் பிடித்த பாடல்களை கேட்டுக்கொண்டே இயற்கையுடன் பய ணிப்பது மகிழ்ச்சியாகத்தான் இருந்தது.

ஆனால் வகுப்புக்கு செல்வது அதுவும் படித்து முடித்தபிறகு தேர்வுக்கு படிப்பது என்பது அவ்வளவு இலகுவாக இல்லை. சில நாட்கள் பால்பண்ணை நிறுத்தத்தில் இறங்கி அடுத்த பேருந்தில் தஞ்சாவூர் வந்து ஏதாவது சினிமா பார்த்துவிட்டு வீடு திரும்பி விடுவேன்.

பைக் வந்த பிறகு பேருந்து பயணங்கள் குறைந்து போயின என்றாலும் பைக் பயணங்களும் சுகமானவைதான். எல்லாமே பயணம் தானே.

இப்போது கூட பைக்கில் செல்லும் போது ஏதாவது பேருந்து என்னை கடந்து சென்று அதில் இருக்கும் குழந்தை கை அசைக்கும் போது மீண்டும் குழந்தையாகி போகின்றேன்.

எனக்கொரு நோக்கமுமில்லை

நன்கு அலசப்பட்ட
நேசமொன்றை தான்
இன்று தூக்கி வீசிக்
கொண்டிருக்கிறீர்கள்

என்றோ தூக்கி வீசப்பட்ட
நேசமொன்றை தான்
இன்று முகவரியின்றி
அழைந்து கொண்டிருக்கிறீர்கள்

நீ நீயாகவே இருயென்று ஆரம்பத்தில்
சொன்னவர்கள்தான் இப்போது
எனக்காக நீ கொஞ்சமும்
மாறமாட்டாயா என
அதிகம் கேட்டுக்கொள்கிறார்கள்

உங்களது நலத்தோடு நேசித்து
விருப்பப்பட்டவர்கள் தான்
உங்களை அதிகம் வருந்தும் படி
நெடுந் தூரமாக்கி விட்டார்கள்

எனக்குள் நான் இருப்பதால்
பலரும் வெறுத்து இருக்கலாம்
உங்களுக்குள்ளும் நான்
இருக்கனுமென்று எனக்கு
எந்த நோக்கமும் இல்லை

நான் இப்படித்தான் என
தன்னை தானே விளம்பரப்படுத்த
எனக்கு எந்த விருப்பமும் இல்லை
எந்த அவசியமும் இல்லை

சேனையூர் சப்ரீன்
அட்டாளைச்சேனை

உனக்கானவள் நானாவேன்!

என்னால் மட்டுமே சாத்தியப்படும்
சில நினைவுக் கோர்வைகளுக்குள்
தவிர்க்கவியலாமல் தொடர்ந்துக்
கொண்டிருக்கிறது பரஸ்பர பேச்சுகள்

மாரி பொழிவு இல்லாத போதிலும்
மாறி மாறி நீ பொழிந்த
அன்பு மழையில் நனைந்து
காய்ந்த மரங்கள் துளிர்ப்பது போல்
வறண்ட மனது ஈரமாய் செழிப்புடன்

நாளொரு மேனியும் பொழுதொரு
வண்ணமுமாய் உன் போக்குகளின்
விகிதச்சாரம் மாறினாலும் மனதில்
ஆழப்பதிந்திருப்பது உன் உருவமே

நடுவில் சில பக்கங்கள்...
காணாமல் போனாலும் மறைக்கப்பட்டாலும்
உன் ஆதியும் அந்தமும்
அறிந்து உனக்கான தோள் சாயும்
தோழியாகவே அன்றும் இன்றும் என்றும்...

சுமதிசங்கர்
சென்னை

நூல்
கூடு திரும்புதல் எளிதன்று

ஆசிரியர்
கவிஞர் தங்கம் மூர்த்தி

மதிப்புரை
கவிஞர் ஈழபாரதி

மனதுக்குள் கதகதக்கும் இவரது கவிதைகளைப் படித்தால்,,,

பத்துக்கு மேற்பட்ட பல்வேறு கவிதைத் தொகுதிகளைத் தந்தவர், இன்னும் ஏராளமானக் கவிதைத் தொகுதிகளைத் தரவிருக்கும் புகழ்கோட்டையாம் எங்கள் புதுக்கோட்டையின் புகழ்மிக்கக் கவிஞர் தங்கம் மூர்த்தி அவர்களின் சமீபத்திய படைப்பாகவெளிவந்துள்ளது'கூடுதிரும்புதல் எளிதன்று'

வாந்துப் பறவைகள் கூடு திரும்புதல் போல் மனிதர்களும் வீடு திரும்புதல் அவ்வளவு எளிதன்று. காரணம் இது மனிதர்கள் வாழ்ந்த பூமியாக மாறிவரும் சூழலில் இனி கிருமிகள் நிறைந்த பூமியாக மாறிவரும் அபாயம் கவிஞர் அவர்களின் கவிதைகளில் கொரோனா குறித்தகவிதைகள் எதிர்காலங்களில் நிகழப் போவதையும் நிகழ்கால் குறிப்புகளால் காணக் கிடைக்கிறது.

நலம் நலமறிய ஆவல்
மறந்தே போனது.
அண்மையில்
அதிகம் பயன்படுத்தியதோ
ஆழ்ந்த இரங்கல்கள்
மட்டுமே.

நம் மீது
பற்றுள்ளவர்களைப் பார்த்தால் கூட
தொற்றுள்ளவர்களோ
என்றே சந்தேகம் வருகிறது! ...பக் 113

எளிதில் உடையும்
விளையாட்டுப் பொருட்கள்
வேண்டுமென
அடம்பிடிக்கும்
குழந்தைகள்
உடையாமல்
பார்த்துக் கொள்கிறார்கள்
குடும்பங்களை... ... பக் 18

குடும்பச்சண்டைகளுக்குள்உறவுகள் உடையாமல் இன்னும் இருக்கிறது என்றால் அது குழந்தை களால்தான். உச்சகட்ட கோபத்தில் கூட வன்சொற்களைத் தவிர்த்து விடுகிறார்கள். குழந்தைகளின் காதுகளில்

கேட்டு விடக்கூடாது என்பதற்காக. கோபத்தில்கூட குழந்தைகள் முகம் பார்க்கின்றபோது, அவர்களின் மழலை மொழிகளில் முடிந்துவிடுகிறது குடும்பத்தின் சண்டை.

விரல்களும்
மனதும்
நடுநடுங்கிப் போகிறது
மலரணிவித்தவர்களின்
அலைபேசி எண்ணை
அகற்ற முற்படுவதற்கு
சற்று முன். ... பக் 40

வாழும் காலத்தில் எவ்வளவு கதைகள் பேசியிருப்போம். குறுஞ் செய்திகள், அழைப்புகள் என நம்வாழ்வின் ஒன்றாகிவிட்ட அலை பேசியில் நேற்று நம்மோடு உரையாடிக் கொண்டிருந்தவர் சற்றுமுன் தொடர்பில் இல்லை என்றாலும் மீண்டும் முயற்சிக்கின்றோம். எப்படியாவது அவரிடம் பேசிவிட வேண்டும் என்பதற்காக. இனிமேல் அவரிடம் பேச முடியாத இடத்திற்கு சென்ற பின்பும், எப்படி அகற்றுவது அலைபேசியில் இருக்கும் அவரின் எண்ணை. அந்த எண்ணை அழிக்கின்றபோது அவரின் பெயரும் சேர்ந்து அழிந்துவிடும் என்ற கவலையில் கவிஞரின் இந்த கவிதை எல்லோ ருடைய வாழ்விலும் வந்து போனாலும் கவிதையாக்கி இருப்பது, நாம் படிக்கின்றபோது நம் தொடர்பில் இருந்து மரணித்த முகங்கள் ஞாபகத்தில் வந்து போகிறது.

சரக்குக் கப்பல்கள்
தள்ளாடுவதில்லை
தண்ணீரில். ...பக் 114

சகதியில் சிக்கியது
மணல் லாரி
பழிவாங்கியது ஆறு ...பக் 119

தொகுப்பில் பல்வேறு ஹைக்கூ கவிதைகளையும் காணக்கூடியதாக உள்ளது. டிஸ்கவரி புக் பேலஸ் வெளியீடாக வெளிவந்துள்ளது. கவிஞர் தங்கம் மூர்த்தி அவர்களின் 'கூடு திரும்புதல் எளிதன்று' எளிய மக்களின் யதார்த்தத்தை எளிமையாக புரியக்கூடிய வகையில் கவிதையாக்கி இருக்கிறார். அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய கவிதைத் தொகுப்பு.

பக்கங்கள் : 120
இந்தியாவில் விலை : 120

நூல் தேவைகளுக்கு :
kaviyamoorthi@yahoo.com

பரவசநிலை

அன்பே! நான் உன்
அடைக்கலம் என்றாய்
நானோ! நீ என்
அங்கம் என்றேன்
உன் கை பட்டதும்
என் மெய் சுட்டது
உன் கண் பார்த்ததும்
என் விழி பரவசமடைந்தது
உன்னணைப்பில் என்னுடல்,
என்னிடம் இல்லாமலே மோனது
முனிவர்கள் தவமிருந்தால்
பரவச நிலையை அடைவர்
உடலையும் உலகத்தையும் மறப்பர்
அப்படித்தான் போலும்
நானும் உன்னிடம்...

முனைவர்
இரா. மாணிக்கவல்லி

தன்முனைக் கவிதைகள்

1.
எல்லோரும் இருக்கிறார்கள்
நிகழ் காலத்தில் இருக்கிறார்கள்
கடந்த கால நினைவுகளில்
எதிர் காலக் கனவுகளில்

2.
எப்போதும் இருளுக்குப் பின்
விடியல் வந்து கொண்டிருக்கிறது
இரவின் நினைவுகளிலேயே
விடியலை இழந்து விடுகிறோம்

3.
சாமியின் ஊர்வலத்தில்
சதா மன இரைச்சல்கள்
ஊர்வலத்தை மறந்து விடுகிறோம்
சாமியையும் தொலைத்து விடுகிறோம்

4.
ஆசை ஆசையாய்ப் பார்வைகள்
அத்தனையும் பொய்யாய்
பழங்கதை நினைவில்
இருப்பினை இழந்து போகிறோம்

5.
வாசல் திறந்தே இருக்கிறது
வருகிறது தென்றல் காற்று
அனுபவித்தால் இன்பம்
அது தொலைந்தால் துன்பம்

6.
இழப்பின் வலிகள்
இழந்தவர்க்கே புரியும்
இழந்திடும் தருணங்களில்
இருந்திட வேண்டும் கவனம்

7.
இயல்பாய்ச் சொற்கள்
இருந்தமரும் கவிதை
எல்லா நாளும்
படிக்கப் படிக்க இன்பம்

8.
அட... வா... தோழா...
தோளில் கை போட்டபடி
உலா வரலாம் என்றும்
ஊர்க்கதைகள் பேசியபடி

9.
பாதசாரிகளுக்கான பாதை
ஆக்கிரமிப்புச் செய்தபடி
அன்றாடம் உபதேசிக்கின்றோம்
சாலை விதிகள் சாற்றியபடி

10.
வா..... விதைப்பந்து வீசியெறி
எங்கேனும் வளரட்டும்
ஏதேனும் விருட்சம் தான்
யார்க்கேனும் பயன் தர.

இளவல் ஹரிஹரன்
மதுரை

1.
உடலில் படிந்த அழுக்குகளை
கழுவி விடுங்கள்.
இதயம் வரைக்கும்
கொண்டு செல்லாதீர்கள்.

2.
கண்கள் இரண்டு
இரசிக்கப் போதாது.
மேகச் சித்திரங்களின்
அழகுக்கு ஈடேது..?

3.
கற்களும் முட்களும்
நிறைந்தது தான் பாதை.
சோலைகளையும் பூக்களையும்
ரசிக்கலாம் நாளை.

4.
நினைத்தால் மணக்கின்றாய்.
அணைத்தால் இனிக்கின்றாய்.
உயிரே...நீ பூந்தோட்டமா.?
இல்லை...பழத்தோட்டமா..?

ஜென்ஸி செல்வராஜ்

1
வெட்கம் கொண்டு
முகம் சிவக்காதே
என்னுள் சுரக்கப் போகிறது
இனியதொரு கவிதை

2;
நீங்கள் ஒதுக்கியதால் மட்டும்
தனியாகி விடுவேனா?
எனக்கே எனக்கான
தனிமை என்னுடன் பயணிக்குமே

3;
அடிப்போடி மௌனத்தின்
பொருளறியாதவள் நீ
பேச்சை மொழி பெயர்க்கப்
பேராசை கொள்கிறாய்

சிவகாமசுந்தரி நாகமணி
சென்னை

1.
நீள்விசும்பாய் பரந்திருக்கும்
உன் பேரன்பின் பெருவெளி
அதில் நெஞ்சம் தொலைத்து
காதலில் திளைக்கிறேன்

2.
என் நெஞ்சப் பெருவெளியெங்கும்
உன் பேரன்பின் சஞ்சாரம்
நினைவுகளில் துளிர்த்துப் பரவும்
பசுமையின் வாசம்

3.
நிலவுக்கொரு சுற்றுலா
போகலாம் வா
நீலவானெங்கும் விண்மீனாய்
நீந்தலாம் வா

4.
எத்தனைப் பெண்களைக்
கடந்து வந்திருப்பாய்
எனக்குள் மட்டும்
எப்படி விழுந்தாய்

- வ.ஃபீரா வ.ஃபி

மனிதனாய் வாழ்வாய்

வருவதும் போவதும் இயற்கையடா
வாழ்வதுதான் இங்கே கடினமடா
தருவதும் பெறுவதும் உன்விருப்பம்
தங்கியி ருப்பது யார்விருப்பம்?

வரவும் செலவும் வேறாகும்
வாழ்வதும் போவதும் வேறாகும்
கரவாய் இருப்பதில் ஏதுபயன்
கனிவாய் இருப்பது வரமன்றோ

வாய்சொல்லும் வார்த்தைகள் ஈட்டியடா
வாழ்நாள் வரைக்கும் தொடருமடா
தாயாய் பிள்ளையாய் இருந்தாலும்
தனித்தனி வாயும் வயிறுமடா ?

நோய்க்குள் மாட்டித் தவிக்கின்றாய்
நுண்ணறி வில்லாமல் துடிக்கின்றாய்
காய் காய் எனநீ கசக்கின்றாய்
கனியாய் இருந்துபார் இனிக்குமடா

அன்பினை செய்துபார் அழகாவாய்
ஆதரவாய் நடந்துபார் மெழுகாவாய்
துன்பங்கள் கடந்துபார் பொலிவுறுவாய்
தூக்கத்தை கலைத்துபார் உயர்ந்திடுவாய்

நண்பரை சேர்ந்துபார் நாடாள்வாய்
நலமே விழைந்துபார் உலகாள்வாய்
பெண்களை மதித்துபார் மனிதனாவாய்
மண்ணைநீ விரும்பிபார் மழையாவாய் !

மு.பாலசுப்பிரமணியன்
புதுச்சேரி. இந்தியா

நினைவுகள்

நான் தனித்திருந்த போதெல்லாம்
என் அருகினில் நீ இல்லை
நான் விழித்திருந்த போதெல்லாம்
என் விழி தேடிய பாதைகளில்
நீ இல்லை

என் நினைவுகள் முழுவதுமே
உன் நியாபங்கள் அலைமோத
நொடிக்கொரு முறை
உனதான அன்பில் கரைகிறேனே

நினைவுகளில் எல்லாம் நீ இருப்பதால்
அழகாக இருந்தது என் கனவுகள்
நிஜத்தினில் நீ மறைந்ததால்
இரவுகள் எல்லாம்
கரைந்தது என் கண்ணீர் மழைத்துளிகளில்

அன்று ஓடும் தண்ணீரும்
அழகாகத் தெரிந்தது
அருவியின் இசையும்
இனிமையாக இருந்தது
சின்னதாய் வீசிய காற்றுக் கூட
மெல்லிசையாய் மனதை வருடியது
உனதான நினைவு
இதயத்தில் நிலைத்ததால்

அருவியில் கால் நனைக்க
அருகே சென்ற போது காத்திரு
உனதானவன் வருவான்
என நளினமாய்ச் சொல்லி
பறவைகளும் பறந்தது

இயற்கையுடன் உன்
நினைவுகளை ஒன்று கோர்த்து
கவி எழுத தொடங்கையிலே
உன் நினைவுகளே என்
வரிகளை களவாடிச் செல்கின்றன

செய்தூன், கனடா.

ஓவியம் : ரஜினிகாந்தன்

ஏக்கத்தின் விளிம்பிலே..

– சப்ரா

"புஷ்பா எனக்கு தூக்கமே வருதில்ல. ஏதாவது கதை சொல்லேன்" என்றாள் தீபா.

"இந்த நேரத்திலயா? பேசாம தூங்கு"

"ப்ளீஸ் சொல்லேன். எப்பவுமே இந்த ஃபோனில் இருந்து இருந்து அலுத்து போயிட்டு"

"சரி சொல்றேன் கேளு.. நான் பத்தாம் வகுப்பு படிக்கிற நேரம் ஒரு தடவ எங்க அம்மா.."

"எப்ப பாரு அம்மாவ பத்தி தான் சொல்லுவியா? வேற ஏதாச்சும் சொல்லுடி.."

"உஷ்.. சத்தமில்லாம கேளு சொல்றத.." புஷ்பாவின் மிரட்டலில் வாய் மூடிய தீபாவுக்கு எப்போது தூக்கம் போனதோ தெரியவில்லை.

புஷ்பாவும் நேரத்தை ஒருமுறை பார்த்துவிட்டு போர்வையை இழுத்து மூடி தூங்கிக் கொண்டாள்.. குளிரான அந்த இரவில் பனித்துளிகளின் உரசல்கள் ஆழ்ந்த தூக்கத்திலும் அடிக்கடி அவர்களை தழுவி விட்டு நகர்ந்தது.

அந்த தொடர் அடுக்கு மாடி யின் ஒன்பதாம் தட்டில் ரயில் பெட்டி களாய் வடிவமைக்கப்பட்டிருந்த அறை களுக்குள்ளே ஓர் அறையில்தான் புஷ்பா தங்கியிருந்தாள்.

பெயருக்கேற்றாற் போல புஷ்பமாக அவள் இல்லாவிட்டாலும் சீராக சீவி அழகாய் பின்னப்பட்டிருக்கும் அவள் கூந்தலின் அடியில் எப்போதுமே ஒரு கவ்வி இடம் பிடித்திருக்கும். சாந்தமான அவள் முகத்தில் புன்னகைக்கு என்றும் பஞ்சமிருந்ததில்லை.

பளிச்சென்ற மாநிறத்தில் அவள் இல்லாவிட்டாலும் ஏதோ பார்ப்பதற்கு லட்சணமாக இருக்கும் அவளுக்கு எப்போதுமே அழகு தரக்கூடியது அவள் கழுத்தில் மெதுவாக இடம் பிடித்திருக்கும் அந்த மெல்லிய தங்க சங்கிலி தான். கொழும்பு நகரத்தின் தனியார் நிறுவனம் ஒன்றில் அவளுக்கு எழுத்தாளர் வேலை.

வழமைபோல் அன்றைக்கும் கண்ணாடியை பார்த்தவாறு, "அம்மா லீவு கெடச்சதும் சீக்கிரமா உங்களை சந்திக்க வந்திடுவேன். அதுவரைக்கும் கொஞ்சம் பொறுமையா காத்திருங்க.. இன்னும் கொஞ்ச நாள் தானே" என தனக்குள் பேசிக் கொண்டவள், அருகிலிருந்த ரமணிச்சந்திரனின் தென்றல் வீசி வரவேண்டும் என்ற நாவலை ஒரு கையிலும் தோலுரிக்கப்பட்ட பட்டாணிக் கடலையை மறு கையிலும் எடுத்தவாறு காதல் கதைக்குள் மூழ்கிப் போனாள்.

அதே நேரம்,

"கட்டாயம் ஈவினிங் வந்திடறேன் ஸார்..." "ஐயோ இவர்ட தொல்லை தாங்க முடியலேயே.. எப்படித்தான் இவரோட மனைவி இந்தாள வீட்ல சமாளிக்கிறாங்களோ?"

கடுப்புடன் திட்டியவாறே வேலை முடிந்து வீடு வந்தாள் தீபா.

''என்னாச்சுடி யாருக்கு இப்போ இந்த ஏச்சு?''

''வேற யாருக்கு? எங்க கம்பனிட மெனேஜர் தான். எவ்வளவு அழகா வேலைகள செய்து கொடுத்தாலும் ஏதாவது குறை சொல்லிட்டே இருக்கிறாரு மனுஷன். ஈவினிங் திரும்ப ஒரு மீட்டிங் இருக்காம். வரட்டாம்.'' அலுத்துப் போனாள் தீபா.

''சரி..சரி.. இப்படியெல்லாம் சத்தமா பேசாத... இப்படி நான் சத்தம் போட்டால் வீட்ல எங்க அம்மா அடி தான் தருவாங்க.. சரி... மொதல்ல வா. கீழ போய் சாப்பாடு வாங்கிட்டு வருவோம் எனக்கு பசிக்கிது...''

இருவரும் அறையை விட்டு வெளியேறி லிஃப்டுக்குள் நுழைந்தனர்.

''புஷ்பா...''

''என்னடி.?''

''இந்த லிஃப்ட் அப்படியே நின்று.. யாருமே காப்பாத்த வராட்டி..'' கண்களை சிமிட்டினாள் தீபா.

«போதும் உன் கற்பனைகள்.. எப்ப பார்த்தாலுமே எதையாவது உளறிட்டு இரு..''

இருவரின் சிரிப்புகளுக்கிடையில் அடித்தளத்தையடைந்த லிஃப்ட் மெதுவாய் திறந்து கொண்டது..

''ஐயா..ஒரு பிரியாணி கொடுங்களே..''

பணத்தைக் கொடுத்து விட்டு திரும்பிய தீபா ஒரு நிமிடம் அதிர்ந்து விட்டாள்.

முகமெல்லாம் அழுக்கேறி பல நாட்கள் சுத்தம் செய்யப் படாத பற்கள், முடியெல்லாம் முழுக்கமுழுக்கஅழுக்கேறிபெண்மைக்கேயான எந்த அடையாளங்களுமற்று ஒரு பழைய ஆண்களனியும் முழுக்கை சட்டை.. செருப் பின்றிய வெற்றுக் கால்களில் வெட்டப் படாத நகங்களுடன் தோன்றினாள் அந்தப் பெண்.

''ஏய்.. யார் நீ? போ தள்ளி.''

எரிச்சல் பட்டுக் கொண்டே பின்னால் நகர்ந்து அந்தப் பெண்ணை விட்டு வெகு தூரமாகி வெளியே வந்தாள் தீபா..

''எதுக்குடி அவங்கள அப்படி சொல்ற? பாவமில்லையா?'' ஏனோ புஷ்பாவின் கண்கள் கலங்கி விட்டன.

''மொதல்ல அந்த மன நிலை சரில்லாதவட மூஞ்ச நீ பாக்கலியே.. பார்த்திருந்தா அப்படியே மிரண்டு போயிருப்ப.. அது சரி அந்தப் பெண்ணை திட்டினா நீ எதுக்கு கவலைப்படுற?''

பதிலளிக்க மனமின்றி அமைதி யாய் இருவரும் நடந்து அறையை வந்தடைந்தனர். அன்றிலிருந்து புஷ்பா வின் நடத்தைகளில் ஒரு வித மாற்றத்தை உணர்ந்தாள் தீபா.

ஏன் ஒரு மாதிரியாக இருக்கின்றாய் எனக் கேட்டால் பதில் எதுவும் கூறாது மௌனித்துப் போவாள்..

இப்படியே நாட்கள் கடக்க,

ஒரு ஞாயிற்றுக்கிழமை. இருவருக் கும் விடுமுறை நாள் என்பதனால் அவர்கள் தங்கியிருக்கும் அறையை சுத்தம் செய்வதில் நண்பிகள் இருவரும் மும்முரமாயிருந்தனர்.

ஜன்னல் திரைச்சீலைகளை விலக் கப்பட்டிருந்ததால் சில்லென வீசிய காற்று பாரெங்கும் பரவி அதற்குள் அவர்களை மட்டும் தனியே விட்டு விட மனமின்றி மெதுவாய் உள்ளே நுழைய வெயிலின் அகோரத்தில் சில்லென்ற காற்று அப்படியே உடல் முழுவதையும் இலகுவாக்குவதை உணர்ந்த இருவரும் தம் அறையை கழுவும் வேலையை ஆரம்பித்தனர்.

சிறிது நேரத்திலேயே தீபாவின் தொலைபேசி சிணுங்கியது. அதனைக் கையில் எடுத்தவள், ''மம்மி.. நான் வேலையா இருக்கேன். ஒரே கோல் பண்ணி சாப்டியா குடிச்சியா என கேட்டுட்டு இருக்காதீங்க புரியுதா?''

படபடவென்று பேசி விட்டு

தந்தையும் நானும்

தந்தையெனும் வரத்தை
தந்தானே இறைவன்
தன்னலம் மறந்து
என்னலம் தேடியே

உழைத்தாரே நாளும்
உறங்காத போதும்
வெடிச் சத்தத்தில்
அந்த யுத்தத்தில்

கொடுத்தாரே அன்பும்
கொடையாகக் கல்வியும்
தேவைகள் தொடர்ந்திடவே
பறந்தேனே பலநாடு

துடிக்கும் மனதிற்கு
அலைபேசி ஆறுதலாய்
முதுமையின் முகமும்
குழந்தையின் குணமும்

கோடிகள் இருந்தும்
கூடிடவே வழியில்லையே
கொள்ளைநோயும் கோடு
போட்டு மூடியதே

விமானப் பயணமும்
விண்வெளி உலகமாய்
விடியலுக்காய் காத்திருக்கேன்
விரைந்துச் சென்றிடவே.....

இரா.தேவி

தொலைபேசியை வைத்தவளைப் பார்க்க பார்க்க புஷ்பாவுக்கு கோபம் தலைக் கேறியது.

"ஒரு அம்மா கிட்ட பேசுற மாதிரியா பேசுற? கொஞ்சமாச்சும் மரியாதை யில்லாம..

அம்மா இருக்கிற உங்களுக்கு எல்லாம் எங்கடி அதுட அருமை விளங்கப் போகுது? எதையுமே தொலைச்சபிறகுதான் அதன் அருமை தெரியும்."

மளமளவென கண்ணீர் பெருக் கெடுக்க ஆவேசமாகக் கூறியவளைப் பார்த்து திகைத்தாள் தீபா.

«என்ன ஆச்சுடி உனக்கு? நான் மம்மி கூட சண்டை போட்டதால அப்படி கோபமாக பேசினேன்.

அது சரி நீ உங்க அம்மாவ பத்தி தான் எனக்கு நிறைய சொல்லிக் இருக்கியே. இப்ப என்ன ஆச்சு?" என்றாள்.

"நான் இதுவரைக்கும் எங்க அம்மாவை பத்தி சொன்னது எல்லாமே கற்பனை தான்..

சத்தியமா எங்கம்மா யார்னு எனக்கே தெரியாது.

அவங்க உயிரோட இருக்காங்களா இல்லையான்னு கூட எனக்கு தெரியாது. சின்ன வயசிலிருந்தே எங்க அப்பாதான் என்னை வளர்த்தார்.

மூணு வருஷத்துக்கு முன்னாடி அவரும் இறந்துட்டாரு. அம்மாவைத் தேடி தேடி நான் களைச்சுப் போயிட்டேன். அப்பாட்ட கேட்டா உங்கம்மா என்ன ஏமாத்திட்டு போயிட்டா இனி அதைப் பற்றிய பேச்சை எடுக்க வேண்டாம் என்று சொல்லிட்டாரு.

ஒரு தடவை எங்க பக்கத்து வீட்டு பாட்டி தான் சொன்னாங்க.எங்கப்பா காரணமே இல்லாம எங்க அம்மா மேல சந்தேகப்பட்டு அவங்கள வீட்டை விட்டு துரத்திட்டதா.. என்னால தாங்கவே முடியலடி. யார்கிட்ட சொல்றதுன்னு தெரியல. தேடினேன் எவ்வளவு தேடி

னேன் ஆனால் எல்லாமே கிடைத்தது என் அம்மாவைத் தவிர.''

விம்மி அழுதவளைப் பார்த்து சகிக்கமுடியாத தீபா,

''சரி அவங்களைப் பற்றிய எந்த ஒரு தகவலும் உன்கிட்ட இல்லையா'' என்றாள்..

''இருக்குடி.. இருக்கு.. ஒரு....''

தன் விழிகளைத் துடைத்தவாறே ஓடிச்சென்று ஒரு புகைப்படத்தை கொண்டு வந்து காட்டினாள் புஷ்பா..

விழி நீர் மேலாட ஒரு நிமிடம் அப்படியே உடைந்துபோன தீபா, ''இவங்களத்தான் அன்னைக்கு சாப்பாட்டுக் கடையில் வச்சு நான் திட்டினேன்.

நான் அவங்களை பார்க்காமல் நீ உன் அம்மாவை பார்த்திருந்தா உன் நிலமை என்ன ஆகியிருக்கும் புஷ்பா'' என்று கூற முடியாது பொங்கி வந்த அழுகையை அடக்கியவாறு,

''எப்படியாவது இவங்கள கண்டு பிடித்து விடலாம்டி'' என்றவாறு அவளை அணைத்துக் கொண்டாள் தீபா. மெல்லிய தூறல் மழை பெரு வெள்ளமாகிய சோகத்தின் உச்சத்தை சுமந்தவாறே...

■

யார் குற்றம்

யார் மீது குற்றமென்று
யாவருமே தேடுகின்றோம்
நம் மீது உள்ள குற்றம்
நாம் அறிய மாட்டோம்

லஞ்சம் வாங்குதல் குற்றம் என்போம்
கொடுத்து பழக்கியது நம் குற்றமன்றோ
ஊழல் குற்றமென்று உரக்க பேசுவோம்
ஊழலுக்கு மீண்டும் உற்சாகமாய்
வரவேற்பளித்து பதவியும் தருவோம்

விளை நிலமெல்லாம் இன்று
விலை நிலம் ஆனதென்று
கவிதைகள் படைப்போம்
கருத்தினை கவர்வோம்
குறைந்த விலைக்கு கிடைக்கும்
வயலில் அமைத்த மனைவாங்க
வரிசைகள் கட்டி நின்றிடுவோம்

நாட்டின் பிரச்சனைகளை
நாலுநாளில் மறப்போம்
நடிகன் அழுதால் நாலுபேர் கூடி
'அச்சச்சோ' என்று அனுதாபப் படுவோம்

அப்பாவி மக்களை அடிமாடாக்கி
அரசியல் செய்து ஆதாயம் காண்போரை
அறிந்தும் அறியாது போல்
அலட்சியம் காட்டுவோம்

சுட்டும் விரலால் பிறர் குற்றம்
சுட்டிக் காட்டி குறைபாடும் போதில்
மற்ற மூன்று விரல்கள் நம்மை
குற்றமென்று சுட்டுவதை
கண்டு கொள்ளமாட்டோம்

கல்விக் கட்டணம் கழுத்தை நெரிக்குது
கடன்வாங்கி கல்வியை
பெற வேண்டி இருக்குது
என்று புலம்புவோம்
இலவச கல்வி தரும்
அரசாங்க பள்ளியை
அலட்சியப் படுத்துவோம்

யார் குற்றமென்று எவரும்
தேடி அலைய வேண்டாம்
தம் குற்றமறிந்து தவறுகள் திருத்தி
தரணியில் நாட்டை தனியாக உயர்த்திட
ஏற்போம் இன்றே மனதுக்குள் சபதம்....

- இர. தர்மாம்பாள்.

வரிக்கூ

1.
கீழடி ஆய்வு
தோண்ட தோண்ட வெளிப்படுகிறது
ஆரியர் கோபம்

2.
இணையக் காதல்
தொடர்பு எல்லைக்கு அப்பால்
மனித நாகரீகம்

3.
கொரானாத் தடுப்பூசி/
கேட்டதும் நினைவை நனைக்கிறது/
விவேக் மரணம்/

4.
சமூக இடை வெளி/
காலத்தின் கட்டாயத் தேவையென காட்டும்/
எறும்புகள் சீர் வரிசை/

5.
பறந்த பட்டம்/
ஒரே இடத்தில் சுற்றுகிறது /
குழந்தைக் கோபம் /

6.
வானில் வானவில்
எண்ணத்தில் பல கோலமிடுகிறது
மழலையின் புன்சிரிப்பு

7.
மாலை நேரம்
மனதிற்குத் தெம்பூட்டும்
நடைப் பயிற்சி

8.
மின்னும் நட்சத்திரம்
பலருக்கு வழி காட்டும்
M.S தோனியின் உழைப்பு

9.
வாரச்சந்தை
பயமின்றி பறக்க விடப்படும்
சமூக இடைவெளி

10.
வரிசையில் எறும்புகள்
உற்று நோக்க பறந்துபோகும்
விடுமுறைச் சோம்பல்

11.
தனிமை இரவு
தத்தித் தாவும் மனசு
உன் அருகாமை

12.
பாகப் பிரிவினை
எப்படித்தான் பிரித்துக் கொடுப்பது
அப்பாவின் புண்ணியம்

13.
வாட்டும் வறுமை
தவறான பாதைக்கு தூண்டும்
வயிற்றுப் பசி

14.
ஏழைகள் வாழ்வு
என்றும் எடைக்கு ஏறுவதேயில்லை
நிதிநிலை அறிக்கை

ராஜ் ஆரோக்கியசாமி

காலம் நில்லா கணவும் வினையே!

பாவலர் கீதப் பழனி, சென்னை

1
மனித வாழ்வு மனையுடன் மாடே
இனிதே மணமும் இன்னிசை முழவே
புனிதம் அன்பு போற்றிட வினையே
வனிதை யெழிலும் வாரிள முலையே!

2
வினையெனப் படுவது வேறல வீறே
சினையலர் வேம்பன் சீற்றச் சிறகே
பனிவிழு காலம் பாண்மகள் கோலம்
கனியுதிர்க் காபோல் கதிரடிக் களமே!

3
காலம் என்றும் கடனறி நொடியே
ஓலம் என்றும் உழைப்பொடு பயனே
பாலம் அன்றோ பண்படு மன்பு
கூல வணிகன் கோலுயிர்ப் பண்பு!

4
ஒருநொடிப் பொழுதே உன்கை யிருப்பு
நரிமன விருப்போ சுயநல நெருப்பு
இருங்கடல் வையம் இன்றல நாளும்
இருள்மன வாளன் இருவிழி மூடம்!

5
காலம் நில்லா கண்ணிமை கனவே
நீலக் கடலும் நீர்த்துளிப் பலவே
மேலைக் காற்றும் கீழ்த்திசைச் சுழலே
மாலை நிலவும் காலை யிலையே!

6
இருகரம் சிறகே இன்னொடி உனதே
ஒருமுறை பிறப்பே ஓய்ந்திட இறப்பே
அரிதே காலம் அதுநொடி விருப்பே
விருப்பும் மறுப்பும் வினைவழிச் செலவே!

7
இரண்டு காலம் இணைவது இலையே
அரண்ட வனுக்கோ அன்பும் பகையே
உருளும் நொடியே உருட்டும் உலகே
மிரண்டு நிற்க மேவும் மடியே!

8
வினைதுணைக் கோலம் வியர்வைப் பொருளே
வினைவிளை காலம் வேறல நொடியே
வினைமகிழ் வேந்தன் வேட்கை நெடிதே
தனியொரு நொடியும் தன்னளிக் கொடையே!

வழி விட்டு ஒதுங்கி நில்லுங்கள்

ஒரு பிரிவைப்பற்றி ஏன் இவ்வளவு அலட்டிக்கொள்கிறீர்கள்
அவள் பாவம் என்றும் அவள் நடிகை என்றும்
ஒரு மனுஷி அவள்

ஒரு பெண்ணின் சிறகே உழைப்பு மட்டும்தானே
என்று அது பிடுங்கப்பட்டு விடுகிறதோ
அன்று ஒடுங்கி ஒன்றுமில்லாமல் போவாள்

ஒரு தனி மனுஷியாய் வாழ்வது ஒன்றும் கஷ்டமில்லை
மாபெரும் மன இறுக்கங்களை சுமந்து நடப்பதை விட

நல்லவர்கள் நல்ல குடும்பத்தவர்கள்
நல்ல குடும்பத்தில் இணைந்தவர்கள் என்றாலும்
எல்லாரும் தனி மனிதர்கள் தானே

ஒரே வயிற்றில் பிறந்த நாலு பிள்ளையும் ஒரே குணத்துடனா இருக்கிறது

ஒரு குடும்பத்தை விட்டு விலகுதல் என்பது அத்தனை இலகு இல்லை

வேர்விட்டு விழுதுபரப்பி அதன் பிறகு
அறுத்துக்கொள்ள முடியாது போராடுவதை காட்டிலும்
இலைவிட்டு அரும்பும்போதே பிடுங்கியெடுப்பது சாலச்சிறந்தது

அவள்களை ஆழம்தேடாதிருங்கள்
சிரித்த எல்லா இடங்களிலும்
எந்த இறுக்கமும் இன்றி இருக்க முடிவதில்லை

ஆயிரம்பேரின் பேசுபொருளாகுவதாலேயே பயத்தில் பலர் தூக்கு
கயிறுகளையும் தூக்கமாத்திரைகளையும்தேடுகிறார்கள்

சிறகுகள் உள்ள பறவைகளை
சிறைப்படுத்தி வலைத்தளங்கள் சந்தோஷம் காண்கிறது

அவள் மகிழ்ந்திருக்கட்டுமே
கொஞ்சம் வழி விட்டு ஒதுங்கி நில்லுங்கள்
விரல்களை வாய்களில் வைத்து...

அன்புத்தோழி சித்ரா

காதல்
சங்கம் மருவிய காலம் முதல்
இன்று வரை

சங்க காலம் :
கி.பி இரண்டு, மூன்றாம் நூற்றாண்டுகள்

சங்கம் மருவிய காலம் :
3ம் நூற்றாண்டின் இறுதி முதல் 7ம்நூற்றாண்டு தொடக்கம்

சோழர்காலம் :
கி.பி 850 முதல் 1200வரை.

சங்க காலம் :

சங்க காலத்தில் குறுந்தொகை அகம், புறநானூறுகள், நற்றிணை, ஐங்குறுநூறு.. கலித்தொகை என பட்டியல் அதிகம். சங்ககாலம் பொற்காலம் என்றே அழைக்கப்படுகிறது என்பார்கள் முனைவர்கள். அதில் காதல்..ம். குறுந்தொகை சொல்லாத காதல் இல்லவே இல்லை எனலாம்.

யாயும் ஞாயும் யார் ஆகியரோ
எந்தையும் நுந்தையும் எம் முறைக் கேளிர்
யானும் நீயும் எவ் வழி அறிதும்
செம் புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.

என காதலின் பாலபாடத்தை, அதாவது யார் எவர் என்றெல்லாம் பார்த்து வருவதல்ல காதல் என்பதில் தொடங்கி, தலைவன் பிரிவு, தலைவி பிரிவு என காதலை துய்த்துணர்ந்த பாடல்கள் குறுந்தொகையின் சிறப்பு.

இது இப்படி என்றால், அகநானூறு இன்னும் சிறப்பு. இன்றைய மணிரத்னம் படம் முதல் முதல் இரவு காட்சி என்றாலே, மணப்பெண்ணை தோழிகள் அறைக்குள் தள்ளிவிட்டு கொல்லென சிரிப்பதை, இதோ இந்தப் பாடல் சங்க காலத்தில் எப்படி விளக்கியிருக்கிறது.

வால்இழை மகளிர் நால்வர் கூடி,
‘கற்பினின் வழாஅ, நற் பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை ஆக!’என,

நீரொடு சொரிந்த ஈர் இதழ் அலரி
பல் இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க,
வதுவை நல் மணம் கழிந்த பின்றை,
கல்லென் சும்மையர், ஞெரேரெனப் புகுந்தது

இப்படி காதலும் அதனடுத்த காமமும் மிகுந்த அழகியலோடு பதியப்பட்ட காலம் சங்க காலம்.

சங்கம் மருவிய காலம் :

களப்பிரர் மற்றும் பல்லவர்கள் ஆட்சிக்குட்பட்ட காலம் சங்கம் மருவிய காலம்.காதலைப் பொறுத்தவரை சங்க காலம் பொற்காலம் என்றால், சங்கம் மருவிய காலம் பொற்சுரங்க காலம். ஆம். திருக்குறள், சிலப்பதிகாரம், பதினெகீழ்கணக்கு நூல்கள் என அற்புதங்கள் நிகழ்ந்தது இக்காலமே.

அறம், பொருள், இன்பம் என திருவள்ளுவர் வாழ்வின் அத்தனை வித கோணங்களையும் இரண்டடியில் குறள் என்று எழுதிவைத்த அவரின் குரல் இன்றுவரையில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.

துப்பாக்கியை நெற்றிப்பொட்டில் வைத்து சுட்டதற்கு இணையான இந்த வரிகளை விட காதலைப் பற்றி இன்னும் யார் என்ன சொல்ல மிச்சமிருக்கிறது?

யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

“நான் உன்னைப் பார்க்கும் போது நீ மண்ணைப் பார்க்கிறாய்’ என்று புதிது புதிதாக எழுதப்படும் கவிதைகள் எல்லாமே பழசு. வள்ளுவர்காலத்துப் பழசு என்பது இந்தக் குறளில் தெரிகிறது.

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து.

இதைவிட காதலியின் நெஞ்சத்தை எங்கு எந்த கவிஞர் பதிந்துவிடப் போகிறார்? காதலனை நெஞ்சில் குடிவைத்திருக்கும் காதலி சூடாக எதையுமே சாப்பிடுவதில்லையாம். அழகியல் என்பதையும் மீறி அன்பு.

இதே சங்கம் மருவிய காலத்தில் தான் சிலப்பதிகாரம் இயற்றப்பட்டது. இறைவனை பாடுபொருளாகக் கொண்டகாலகட்டத்தில் சாதாரண மாந்தர்களை கதைநாயகர்களாகக் கொண்ட முதல் காப்பியம் சிலப்பதிகாரம்.

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே

பெருங்குடி வணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ

என்று காதலியை வர்ணிப்பதில் முன்னோடி இக்காப்பியமே.

அளிய தாமே சிறுபசுங் கிளியே
குழலும் யாழும் அமிழ்துங் குழைத்தநின்
மழலைக் கிளவிக்கு வருந்தின வாகியும்
மடந்தை மாதுநின் மலர்க்கையின் நீங்காது

என தன் தலைவியை கோவலன் எல்லாவற்றோடும் ஒப்பிட்டு உருகுவது அழகியல்.காதல். அல்லது காதலின் அழகியல்.

சங்கம் மருவிய காலத்தின் இறுதிகள், கி.பி.600லிருந்து 850வரையிலான ஆண்டுகள் பல்லவர் காலம்.

பல்லவர் காலம்

பக்தி இலக்கிய காலம் இது எனச் சொல்லலாம். திருஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என பட்டியல்.மேலும் ஆழ்வார்களின் காலமும் இஃதே.

இதில் காதல் என்று பார்த்தால் ஆண்டாள் பாடல்களைப் பார்க்கும் பொழுது, கடவுளைக் காதலனாகக் கொண்ட பெண்ணின் வார்த்தைகள் மனதை வசீகரிக்கின்றன.

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தர்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி...

காதலனை மணம்புரியும் கனவை இன்றுவரை இதைவிடச் சிறப்பாக சொல்லியதாகத் தெரியவில்லை என்பதனால்தான் ஆங்காங்கே இந்தப் பாடலே மைக்செட்டுகளை நிறைக்கிறது மணநாட்களில்.

அதனடுத்த வரிகளில் ஆண்டாள் தான் காதலில் ஒரு ராணி என்றே நிரூபிக்கிறார்.

ஊனிடை ஆழிசங்கு உத்தமர்க்கு என்று
உன்னித்து எழுந்த என் தடமுலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுப்படின்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே

இதற்கு மேல் என்ன சொல்ல? என்று நாம் நினைக்கும் பொழுதே அடுத்த அடி...

கருப்பூரம் நாறுமோ கமலப் பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்தமாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே!

என்று உருகி கேட்கும் காதல் பெண்ணின் குரல்
ஒலித்துக்கொண்டேதானிருக்கிறது. (நாற்றம் என்பது வாசனை..)

சோழர் காலம்.

பல்லவர் காலத்திற்கடுத்த சோழர் காலம் (850 முதல் 1200வரை) கிட்டத்தட்ட 400 ஆண்டுகள் என கூறப்படுகிறது.
உண்மையிலேயே சோழர்காலம் ஒரு பொற்காலம். கற்காலம். அதாவது கற்களைக் கொண்டு கட்டப்பட்ட அற்புதங்கள் நிறைந்த கற்காலம். அதைப் போலவே சொற்களைக் கொண்டு கட்டப்பட்ட சொற்பாக் காலம்.சொற்ப காலமே என்றாலும் சொற்பாக்களால் நிறைந்த சொர்க்க காலம்.

தஞ்சை பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம் என அவர்கள் கற்களை அடுக்கிக்கொண்டே போனது போல் நாமும் இங்கே சொற்களை அடுக்கிக் கொண்டே போகலாம். அற்புதம் பல நிகழ்ந்த காலம் சோழர் காலம்.

ஐம் பெருங் காப்பியங்களில் மூன்று காப்பியங்கள் படைக்கப்பட்டது சோழர்காலத்தில் தான். (வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி ஆகிய மூன்றும்.)

யசோதரா காவியம் போன்ற ஐஞ்சிறு காப்பியங்கள், பெரிய புராணம், கந்த புராணம் என பட்டியல் நீள்கிறது.

ஒட்டக் கூத்தர், ஜெயங்கொண்டார் வாழ்ந்த காலம்...

இவ்வளவு ஓப்பனிங் கொடுத்தாகிவிட்டது... கம்பர் என்ற காப்பிய நாயகன் எண்ட்ரியும் இந்தக் காலம் தான். (ஆதித்தன் என்பவருக்கு மகன்(ர்)னாக சோழநாட்டின் திருவழுந்தூரில் பிறந்தவர் கம்பர். குலோத்துங்க சோழனின் அவைப் புலவர்)

Iliad,Odyssy போன்ற மேலை நாட்டு காப்பியங்களுக்கு இணையானதாகப் போற்றப்படும் கம்பராயாமயணம் சோழர்காலத்தய காப்பியம். அதில் காதல்...

இன்றும் கோடம்பாக்கத்தில் டைரக்டர்கள், அசிஸ்டெண்ட் டைரக்டர்கள் அதிகம் பயன்படுத்தும் ஒரு சொல் “லவ் அட் ஃபர்ஸ்ட் சைட்” அல்லது “பார்த்ததும் பத்திக்கிச்சு”... இதை கம்பர்

பருகிய நோக்குஎனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை ஒருவர் தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப் புக்கு, இதயம் எய்தினார்.

இதைவிட லவ் அட் ஃப்ர்ஸ்ட் சைட்டை எப்படி சொல்லமுடியும்?

அதிலும்.. 'வாட்கண்' அற்புதமான வார்த்தை.. வாள் கண் நங்கை... இன்றைய "அம்பு விழிகள், உன் விழிகள் வாளைப் போல அறுக்கின்றன" எல்லாம் இந்த வாட்கண்ணில் இருந்து வழிந்தவையே.

அப்புறம் அந்த ஃபேமஸ் வரிகள்.. அண்ணலும் நோக்கினான்.. இதை இன்றுவரை நோக்கியா மொபைல்வரை தொடர்பு படுத்திக் கொண்டே இருக்கிறோம்.. வரிகளின் ரசனையும் வார்த்தைகளின் வலிமையும்.. வசீகரமுமே காரணம். அந்த வரிகளைக் கொண்ட முழுப்பாடல் இதோ..

எண்ண அரு நலத்தினாள் இணையள் நின்று வழி
கண்ணொடு கண் இணை கவ்வி, ஒன்றை ஒன்று
உண்ணவும், நிலை பெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான்: அவளும் நோக்கினாள்.

கண்ணொடு கண் இணை கவ்வி... உண்ணவும்... வரிகள் உவகைக் கொள்ளச் செய்கிறதா? கம்பர்.

நோக்கிய நோக்கு எனும் நுதி கொள் வேல் இணை
ஆக்கிய மதுகையான் தோளின் ஆழ்ந்தன;
வீக்கிய கனை கழல் வீரன் செங்கணும்
தாக்கு அணங்கு அனையவள் தனத்தில் தைத்தவே.

ஆர்ட்டின் படம் போட்டு அம்பு விடும் இன்றைய காதல் படம் எங்கிருந்து வந்தது என்று யாராவது ஆரய்ச்சி செய்கிறீர்கள் என்றால் இந்தப் பாடல் தான் அதற்கு பதில்.

- தளிர்கள்

முகமும் முகமூடியும்

முகமூடிகளை ரசித்து
மாட்டுகிறோம்
ருசித்து போனதில்
கவசம் எனக்கருதி
கழட்ட மறுக்கிறோம்

காலம் வந்து
கன்னத்திலறைந்து
கருத்துரைக்கையில்
முகமூடியோடு
முகமும்
காணாமல்
போயிருக்கிறது...

- நேசமுடன் ஈசு

இளைஞனே எழுந்து வா

(சமூக விழிப்புணர்வு)

பாவலர் கருமலைத்தமிழாழன்

புதியஓட்டம் குருதியிலே புகுத்திச் செல்வோம்
புதுமைகளைக் கண்டளிக்க விரைந்து செல்வோம்
விதியென்றே அமர்ந்திருந்தால் வந்தி டாது
வினைகளாற்ற வாய்ப்புகளோ அழைத்தி டாது !
குதித்துவரும் அருவிதடை தகர்த்துக் கொண்டு
குன்றின்கீழ் ஆறாகப் பாய்தல் போல
பதித்திடுவோம் புதியபாதை வெற்றி தன்னை
பறித்திடுவோம் இளைஞனேநீ எழுந்து வாவா !

மூடத்தைப் பழமையினை மூலை வைப்போம்
முன்னேறப் பகுத்தறிவில் காலை வைத்தே
வேடத்தைக் கலைத்திடுவோம் சாதி என்னும்
வேண்டாத சட்டையினைக் கழற்றி வைப்போம் !
மாடத்தில் ஏற்றிவைக்கும் விளக்கைப் போல
மனத்தினிலே பொதுமையெண்ணம் ஏற்றி வைத்து
நாடதனில் இருப்பதினைப் பிரித்த ளித்து
நல்வாழ்வை அளிப்பதற்கே எழுந்து வாவா !

நேர்நின்று கயமைகளைத் தட்டிக் கேட்டு
நேர்மையினை நீதியினைக் கட்டிக் காத்தே
ஊர்காப்போர் ஊழல்கள் புரியும் போதோ
உதைத்தவரை விரட்டுதற்கு முன்னே நிற்போம் !
நீர்நிலையை வயல்வெளியைக் காற்றைக் காட்டை
நீலவானைத் தூய்மையாகப் பாது காத்து
வேர்போன்ற மனிதத்தை நெஞ்சில் வைத்து
வேற்றுமைகள் தகர்த்திடுவோம் இளைஞா வாவா !

மொழி சிந்தும் சுவை

கவிஞர் ராம்க்ருஷ்

அழியாத புகழோடு வலம் வருவதாலே
மொழி உலகில் மங்காத மாணிக்கமாய்
பொழியும் பெருஞ் சாரலாய் தமிழ்
வழிகாட்டியாய் ஒளி விளக்காய் திகழ்கிறதே

சந்தங்களில் சிந்து பாடும் சிறப்போடும்
உந்து சக்தியாய் இலக்கண இனிப்போடும்
வந்து உலாவும் எதுகை மோனையோடும்
தந்திடும் இனிப்பில் கரைந்து போகிறேனே

வீரமெனும் சுவை புறநானூறில் புதைந்திருக்க
ஈர நெஞ்சங்களின் உணர்வுகள் அகநானூறிலே
உரமேற்ற நீதி தேவதையின் விழிப்பு சிலம்பிலே
தரமான திருக்குறளோ பற்சுவை தருகின்றதே

இனிக்கும் சிற்றிலக்கியங்கள் காதலில் நனைய
கனிகளாய் மொழி சிறப்பாக்கும் தொல்காப்பியம்
மணிமணியாய் நன்னூல் நாலடியார் ஒளிரும்
பிணியேதுமில்லா சொக்கத் தங்கம் தமிழல்லவா

மொழி சிந்தும் சுவை எல்லையற்றதாய்
பொழியும் இன்னிசையாய் உள் இறங்குமே
வழியெங்கும் இனிக்கும் நினைத்தே சிலிர்க்கும்
அழியாத இளங்கன்றாய் துளிர்த்து வளருமே,

பல்சுவை

தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

நவம்பர் 2021

துடுப்புகளற்ற படகு நான்
என்னை கரைசேர்க்கும் கடல் நீ...!

ச. இராஜ்குமார்